REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

புதிய பூமி

PUTHIYA POOMI

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

சுற்று 09 | செப்டம்பர் 2002 | பக்கம் 12 | விலை 10/- | சுழற்றி 50

# தமிழர் தலைவிதி தாய்லாந்தில் தீர்மானிக்கப்படுமா?







மிழ் மக்கள் மீதான நீண்டகால இன
டுக்குமுறையும் அதன் உச்சமான
ந்தொன்பது வருடகால யுத்தமும்
தசிய இனப் பிரச்சனைகளுக்குத் தீர்வு
ாண வேண்டிய தேவையையும்
வசியத்தையும் நிர்ப்பந்தமாக்கியுள்ளன.
த்தத்தின் பாரிய துயரங்களையும்
ட்டு மாத கால யுத்த நிறுத்தத்தின்
ாதான சூழலையும் அனுபவ
ாயிலாகக் கண்டு வரும் மக்கள் பேச்சு
ார்த்தையையும் தீர்வையும் வற்புறுத்து
றார்கள்.

ந்நிலையில் எதிர்வரும் 16ம் திகதி
ாய்லாந்தில் பேச்சுவார்த்தை இடம்
பறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நார்வேயின் அனுசரணையுடன்
ரசாங்கமும் புலிகள் இயக்கமுமே
பச்சுவார்த்தையில் ஈடுபடப் போகிறார்
ள். அதற்காக புலிகள் மீதான தடை
க்கப்படவுள்ளது. இவ்வாறான சூழல்
ற்றிலும் வரவேற்கப்பட வேண்டிய
தாகும். யுத்தத்தை எதிர்த்து பேச்சு
வார்த்தை அரசியல் தீர்வை வற்புறுத்தி



வந்த அனைத்து சக்திகளும் மகிழ்ச்சி கொள்கின்றனர்.

இதுவரை காலமும் கொழும்பில். இந்தியாவில். திம்புவில் பேச்சுவார்த்தை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு யாவும் தோல்வியில் முடிந்தன. இப்போதைய பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் ஒஸ்லோ. லண்டன். வாஷிங்டன் என மேற்கில் இடம்பெற்று வருகின்றன.

தாய்லாந்தில் இடம்பெறப்போகும் இப் பேச்சு வார்த்தையில் தமிழர்களின் தலைவிதி உரிய தீர்வின் மூலமாகத் தீர்மானிக்கப்படுமா? என்பதே எழும் பொதுவானதும் பிரதானமானதுமான கேள்வியாகும். ஏனெனில் வழமை போன்று பேரினவாத சக்திகள் கூச்சலிட ஆரம்பித்துவிட்டன. எதிர்க் கட்சிகள் அரசியல் லாபம் பெறவும் அதிகாரத்திற்கு வரவும் பேச்சுவார்த்தையைக் குழப்புவதன் மூலம் லாபம் பெற நிற்கின்றன. ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அதிகாரம் பற்றிய சர்ச்சையும் பிளவும் போட்டியும் அதிகரித்து வருகின்றன. இவற்றின் நடுவே அமெரிக்கா இப்பேச்சு வார்த்தையை பின்னிண்று இயக்கி தனது தென்னாசியாவுக்கான இடத்தை இலங்கையில் வலுப்படுத்திக் கொள்ள மும்மரம் காட்டி நிற்கின்றது. அமெரிக்காவின் அதிகரித்து வரும் இத்தலையீடு முழு இலங்கைக்கும் அவ்வாறே சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கும் பயங்கர ஆபத்தாக அமைந்து விடும் அபாயம் காணப் படுகிறது.

## ஒருபுறம் பேரினவாதிகளின் கூச்சல் மறுபுறம் அமெரிக்காவின் தலையீடு!

இப்பேச்சுவார்த்தையில் அதி முக்கிய மானது தீர்வு அம்சங்கள் எத்தகையவை யாக இருக்கப் போகின்றன என்ப தாகும். இடைக்காலசபை என்பதன் ஊடாகக் காலத்தை இழுத்துச் சென்று போராட்டத்தைப்

தொடர்ச்சி 12ம் பக்கம்..

# தோட்ட முதலாளிகளுக்கு கொள்ளைலாபம் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு மறுப்பு!

தயிலை, இறப்பர் என்பவற்றின்
ற்றுமதி வருமானம் அதிகரித்தே
ாணப்படுகிறது. அவற்றின் மீதான
ற்றுமதி வரிகளையும் நீக்கி அரசாங்கம்
ரிச்சலுகைகளைக் கொடு த்துள்ளது.
ந்நிலையில் தோட்டத் தொழிலாளர்
ளின் நாளாந்த சம்பளத்தை
பா.200/- கொடுப்பதால் தோட்டக்
ம்பெனிகளுக்கு எவ்வித நட்டமும்
ற்படப்போவதில்லை. எனவே ரூபா.151
டைத்தால் போதும் என்று
.தொ.கா. கோருவதையும். 180 ரூபா
டைத்தால் போதும் என்று ம.ம.மு.யும்
காருவதையும் கைவிட்டு 200
பாவைக் கோரி போராட்டத்தில்
றங்கினால் தோட்டக் கம்பெனிகளை
டிபணியச் செய்ய முடியும். தொழிற்
ங்கத் தலைமைகளுக்கு அப்பால்
தாட்டத் தொழிலாளர்கள் அனைவரும்
க்கியப்பட்டு போராடினால் நிச்சயம்
0 ரூபாவை நாளாந்தம் சம்பளமாகப்
பற முடியும்.

இவ்வருடம் யூன் மாதம் புதுப்பிக்கப்பட வேண்டிய கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப் படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. அதற்கு காரணம் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை தீர்மானிப்பதில் தோட்டக் கம்பெனிகளுக்கும் தொழிற்சங்கங்க ளுக்குமிடையே இழுபறி நிலை ஏற்பட்டு ள்ளமையாகும். தோட்டக் கம்பெனி களின் சார்பில் இலங்கை முதலாளிமார் சம்மேளனமும், தோட்டத் தொழிலாளர் களின் சார்பில் இ.தொ.கா., இ.தே.தொ. சங்கம் (ஐ.தே.கட்சியின் சங்கம்) தொழிற்சங்க கூட்டு கமிட்டி என்பன பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தன.

பொதுவாக நாளாந்த சம்பளமாக ரூபா.200 வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட தொழிற்சங்கங்கள் ரூபா.151யே கோரின. அதனை வழங்க முடியாதென தெரிவித்த தோட்டக் கம்பெனிகள் நாளாந்த சம்பளத்தை ரூபா.142/- வை மட்டுமே வழங்க முடியுமென விடாப்பிடியாக இருக்கின்றன.

ரூபா.151ஐ பெறுவதற்காக இ.தொ.கா. தோட்டத் தொழிலாளர்களை ஒத்துழை யாமை இயக்கத்தில் ஈடுபடுத்தியது. இதற்கிடையில் தமக்கு ஆதரவளித்தால் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி 180ரூபாவை பெற்றுத்தர முடியும் என்று ம.ம.மு. சூளுரைத்தது. இதனை சாட்டாக வைத்து இ.தொ.கா. ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டது. ம.ம.மு. தலைவரோ180/- ரூபா பெற்றுத்தருவதாக அறிக்கையை விட்டு மாட்டிக் கொண்டதுடன் செய்வ தறியாது முக்கித் திணறிக் கொண்டிருக்கிறார்.

அரசாங்கத் தோட்டங்களையே தனியார் கம்பெனிகள்

12ம் பக்கம் பார்க்க..

# தமிழர் கூட்டமைப்பு கட்சிகளின் அந்நிய சக்திகள் மீதான நம்பிக்கை

தமிழர் தேசிய கூட்டமைப்பில் நான்கு கட்சிகள். அவற்றில் இரண்டு கட்சிகள் தமிழர் பழமைவாத ஆதிக்க அரசியல் கட்சிகள். அடுத்த இரண்டும் ஆயுதப் போராட்டம் நடாத்திவிட்டு ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்தவை. அவற்றின் சிந்தனையும் செயல்பாடும் முன்னைய கட்சிகள் போன்றனவே. அதனாலேயே அவர்களுக்கிடையில் ஐக்கியம் சாத்தியமானது. ஒரே குட்டையில் ஊறியவர்கள்தான்.

இவர்கள் முன்பு பிரித்தானிய எசமானர்களை ஏற்றிப் போற்றி தம் பக்கம் நிற்குமாறு விண்ணப்பம் செய்து வந்தனர். பின்பு இந்தியாவிடம் இரந்து நின்று நீங்களே எசமானர்களாக இருக்க வேண்டும் என்றழைத்தனர். இந்தியா கொடுத்த செல்வாக்கு களையும் லாபங்களையும் தாங்களே பெற்றுக் கொண்டனர். அதேவேளை இந்தியாவால் ஏற்பட்ட நஷ்டங்களையும் இழப்புகளையும் தமிழ் மக்களை ஏற்க வைத்தனர்.

இத்தகைய தமிழ் மேட்டுக்குடி அரசியல் கனவான்கள் இப்போது அமெரிக்கா விடம் முழந்தாளிட்டு 'ஆண்டவரே அருள் புரிவீராக' என்று செபித்து நிற்கிறார்கள். காலத்திற்குக் காலம் இவர்கள் ஏதாவது ஒரு அந்நிய ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளிடம் சரணடைந்து நிற்பதையே அடிப்படைக் கொள்கையாக கடைப்பிடித்து வருகிறார்கள். இதுவே இவர்களது 'தமிழர் சர்வதேசியம்' ஆகும். இதன் அபாயத்தை தமிழ் மக்கள் இனிமேலும் உணர்ந்து கொள்ளாது வெறுமனே தலையாட்டிச் செல்வதால் எதிர்காலம் மிகவும் அபாயகரமானதாகவே அமைந்து கொள்ளும். தூரநோக்குடன் அரசியலில் சிந்திக்க மறுக்கும் எந்த சமூகமும் மீண்டும் மீண்டும் ஆபத்துகளையும் அழிவுகளையும் மீளாத் துயரங்களையுமே சந்திக்க நேரிடும் என்பது உலக அளவிலான பட்டறிவாகும். தமிழ் மக்களும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே எமது வேண்டுதலாகும்.

# மாணிக்கக்கல் அகழ்வை எதிர்த்து ராகலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

தோட்டக் காணிகளில் மாணிக்கக்கல்
அகழப்பட்டால் தேயிலை செடிகள்
ாதிக்கப்பட்டு மக்கள் வேலை இழப்பர்.
த்துடன் மண்ணரிப்பு. மண்சரிவு
பான்ற பாதிப்புகள் ஏற்படும். மண்ணின்
ளம் பாதிக்கப்படும். மாணிக்கக்கல்
கழ்வதற்காக வெளியார் தோட்டங்
ளுக்குள் வருவதால் தோட்டங்களில்
தற்றமான சூழ்நிலையே நிலவும்.
னவே சென் லெனாட்ஸ். இராகலை
ழ்ப்பிரிவு ஆகிய தோட்டங்களில் மாணி
கக்கல் அகழ்வதற்காக தோட்டக்
ம்பெனியும், இலங்கை மாணிக்கக்கல்
ட்டுத்தாபனமும் எடுத்து வரும்
டவடிக்கைகளை கைவிட வேண்டும்.
ல்லையேல் எமது மக்கள் போராட்டத்
தினூடாக அந் நடவடிக்கைகளை நாம் தடுத்து நிறுத்துவோம்" என்று புதிய ஜனநாயகக் கட்சியின் மத்தியக்குழு தோழர் இராகலை பன்னீர். ஆகஸ்ட் 18ஆம் திகதி இராகலை நடுக்கணக்கு பஜாரில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றும்போது தெரிவித்தார். இராகலை கீழ்ப்பிரிவு. இராகலை நடுக்கணக்கு ஆகிய தோட்டங்களில் மாணிக்கக்கல் அகழும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்று வற்புறுத்தி நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை அடுத்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்படி

12ம் பக்கம் பார்க்க.

# அமெரிக்க அமைச்சர் ஆர்மிரேஜ் யாழ்ப்பாணம் சென்றதன் பின்னணி?

தென்னாசிய சுற்றுப் பயணம் வந்த அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ரிச்சேர்ட் ஆர்மிரேஜ் இலங்கைக்கு ஒரு நாள் வந்து சென்றார். அவரது அவசரப் பயணத்தில் யாழ்ப்பாணத்திற்கான வருகை முக்கியமானது. கட்டுநாயக் காவில் இருந்து தமது சொந்த விமானத்தில் பலாலி சென்ற அவர் ராணுவ உயர் மட்டப் பேச்சுவார்த்தை நடாத்தியதுடன் முன்னரங்கப் பாதுகாப்பு வியூகங்களையும் பார்வை யிட்டுக் கொண்டார். பாதுகாப்பு எல்லைப் புறமான முகமாலைக்கும் சென்றார். சாவகச்சேரியைப் பார்த்து வியட்நாமில் தான் கண்ட அழிவுகளை நினைவுபடுத்தினார். அமெரிக்காவின் வியட்நாம் மீதான ஆக்கிரமிப்புப் போரின் போது ஆறு வருடங்கள் அங்கு இருந்து கடமை புரிந்தவர் இந்த ஆர்மிரேஜ்.

இவரது யாழ் பயணத்தின் அறிகுறி பலத்த சந்தேகத்துக்குரியது. சமாதான த்தை பலாத்காரம் பாவித்தேனும் கொண்டு வரவேண்டும் என்று கருத்துக் கூறியுள்ளார். அத்துடன் இலங்கை ராணுவக் கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்ய அமெரிக்க ராணுவ அதிகாரிகள் அடிக்கடி இங்கு வருவார்கள் என்றும் பாதுகாப்பு படிப்பிற்கு பல்கலைக்கழகம் திறக்க வேண்டும் எனவும் அறிவித்துள்ளார். அதேவேளை புலிகளுடன் நேரடியாகப் பேச முடியாதென்றும் கூறியுள்ளார். அவர்கள் மீதான தடை அகற்றப்பட மாட்டாது என்பதையும் சுட்டிக் காட்டினார். மறுபுறத்தில் யாழ்ப்பாணத் தைக் கட்டியெழுப்ப நிதி உதவி தாராளமாகத் தருவதாகவும் கூறிச் சென்றுள்ளார்.

அமெரிக்க அமைச்சரின் யாழ் பயணமும் அவரது சொற்களும் செயல்களும் எதைக் காட்டுகின்றன. பேரினவாத ஆளும் வர்க்க

12ம் பக்கம் பார்க்க..

www.padippakam.com



# தொண்டமானின் தொடர் மாடி வீடுகள்
# பெருமைக்கு ஆடடித்த கதை?

வீடமைப்பு தோட்ட உள்ளகக் கட்ட மைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களுக்கு 'அண்ணாந்து பார்க்கிறமாடி மாளிகைகளை' கட்டிக் கொடுக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

லிந்துலை, டயகம பகுதியில் சில தோட்டங்களில் தொழிலாளர்கள் குடியிருந்த 'லயின்கள்' தகர்க்கப்பட்டு அவ்விடங்களில் தொடர்மாடி வீடுகள் (பிளட்டுகள்) கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குடியிருந்த லயின் வீடுகள், தகர்க்கப்பட்ட நிலையில் தற்காலிக குடியிருப்புகள் எதுவுமின்றி வீதிகளில் விடப்பட்டுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதால் வீட்டுப் பிரச்சினைகள் தீர வேண்டும். ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படவுள்ள தொடர்மாடி வீடுகளால் (பிளட்டுகளால்) மேலும் பல புதிய பிரச்சினைகள் ஏற்படும். இடநெருக்கடியான பெரு நகர்ப்பகுதிகளுக்கு மட்டும் பொருத்தமான தொடர்மாடி வீடுகளை தோட்டப்புறங்களில் கட்டுவதன் உள்நோக்கத்தை புரிந்து கொள்ள முடிகிறது.

தொடர்மாடி வீடுகள் பெயரளவில் அங்கொரு தோட்டத்திலும் இங்கொரு தோட்டத்திலும் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன. அதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி வேண்டும் என்ற கோரிக்கையும், காணியுடன் வீடு வேண்டும் என்ற கோரிக்கையும் மறுக்கப்படுகிறது. சந்திரசேகரன் வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில் ஏறக்குறைய 2 ஆயிரம் புறாக்கூடுகளைப் போன்ற வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அதே போன்று தொண்டமான் அடுக்குப் புறாக்கூடுகளை கட்டிக் கொடுக்க முற்படுகிறார்.

தொண்டமானின் தொடர்மாடி வீடுகள் லயின் அறைகள் இருந்த இடத்தில் அவற்றுக்குப் பதிலீடாக கட்டப்படவுள்ளன. எனவே தொடர்மாடி வீடுகளால் மேலதிகமான வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை.

சந்திரசேகரன் கட்டிக் கொடுத்ததாக கூறப்படும் வீடுகளும், தொண்டமான் கட்டிக் கொடுக்கவுள்ள தொடர்மாடி வீடுகளும் தொழிலாளர்களின் சேமலாப நிதியை (EPF) பிணையாக வைத்துக் கொண்டு கடன் அல்லது நீண்டகால குத்தகை அடிப்படையிலேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சில தோட்டங்களில் தொடர்மாடி வீடுகளை கட்டுவதற்காக இருக்கின்ற லயின் அறைகளை தகர்க்க எடுத்த முயற்சிகளை தொழிலாளர்கள் எதிர்த்துள்ளனர். 'தொடர்மாடி வீடுகளை கட்டிக் கொடுங்கள். தற்போது நாங்கள் வசிக்கின்ற லயின் அறைகளை தகர்த்து விட்டு அந்நிலத்தில் தொடர்மாடிகளை எழுப்புவதற்கு இடமளிக்கமாட்டோம்'. என்று தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தாங்களாகவே ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து லயின் அறைகளை திருத்தி அவற்றுக்கு அருகில் வீட்டுத்தோட்டம், மாட்டுப்பட்டிகள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொண்டு வாழும் லயின் தொழிலாளர்கள் அவற்றை இழந்துவிட்டு, ஒரு பெட்டிக்குள் அடைக்கப்பட்டதான தொடர்மாடி வீடுகளை பெற விரும்பவில்லை.

தொடர்மாடி வீடுகள் அமைக்கப்படும் போது வீட்டுத்தோட்டங்கள், கால் நடை வளர்ப்புக்கான பட்டிகள் என்பவற்றை வைத்திருப்பதில் சிரமங்கள் ஏற்படும். அடைக்கப்பட்ட பெட்டிகள் போன்ற மாடி வீடுகளில் தொழிலாளர்கள் அவர்களின் தொழிலுக்கு தேவையான கூடைகள், சுரண்டிகள், மண்வெட்டிகள் போன்ற உபகரணங்களை வைப்பதிலும், மழைக் காலத்திற்கு தேவையான விறகை சேமித்து வைப்பதிலும் சிரமங்கள் ஏற்படலாம்.

எனவே ஆறுமுகம் தொண்டமான் அவரது வீடமைப்பு அமைச்சினூடாக தோட்டத் தொழிலாளர்களுக்கு உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்தால் பெருநகரப் பகுதிகளுக்குப் பொருத்தமான தொடர்மாடி வீடுகளை தோட்டங்களில் அமைக்காது, காணியுடன் கூடிய வீடுகளை கொண்ட மாதிரிக் கிராம வீடமைப்புகளை தோட்டங்களில் ஏற்படுத்திக் கொடுப்பதே சரியானது. காணி நிலத்திற்கு தட்டுப்பாடில்லாத தோட்டப் புறங்களில் மாதிரி கிராம வீடமைப்புகளை செய்வதற்கு எவ்வித தடையும் இருக்க முடியாது.

கிராமப்புற வீடமைப்புகள் மேற்கொள்ளப்பட்டு ஏனைய சமூகத்தினருக்கு வீடுகளும் காணிகளும் இனாமாக வழங்கப்படுவது போன்று, வீட்டுக் கடன் திட்டத்தின் கீழோ, நீண்ட கால குத்தகைத் திட்டத்தின் கீழோ அன்றி தோட்டத் தொழிலாளர்களுக்கும் இனமாக வீடுகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் இருக்கின்ற லயின் வீடுகளுக்கு மேலதிகமாகவோ வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும்.

'பெருமைக்கு ஆடடித்து பிள்ளையின் கையில் எதனையோ கொடுத்த கதையாக' இல்லாமல் வீட்டுப் பிரச்சினையை சரியான முறையில் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

# குளங்களை அழித்து நிலங்களை அபகரித்தவர்கள் யார்?

வவுனியா நகரப் புறத்தை அண்டியுள்ள குளங்களுக்கு அருகாமையில் மக்கள் வீடுகளை அமைத்து வருவதனால் குளங்களின் கட்டுகள் சேதமாக்கப்படுவதுடன் நிலத்துக்கடி நீர் ஊற்றும் இல்லாமற் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு அரச அதிகாரிகளும், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளும் பிரதான காரணமாக இருப்பதாகப் பொதுமக்கள் பேசிக் கொள்கின்றனர்.

குளங்களின் அலைகரைப் பகுதிகளில் குடியேறியவர்கள் யார்? தமிழ் அரசியல் இயக்கங்களின் ஆதரவாளர்கள், உறவினர்கள், பணவசதி படைத்த வியாபாரிகள். சில அரசாங்க உயர் உத்தியோகத்தர்கள் இவர்களே அடங்குகின்றனர்.

இதனைவிட குளங்களுக்கு நீர் வரும் பாதைகளும் அழிக்கப்பட்டு அக்காணிகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 36 குளங்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு மக்கள் குடியேறியுள்ளனர்.

வவுனியாவில் இப்போது கிணறுகள் வற்றிவிட்டன. கிணற்றில் நீர் இல்லை. மக்கள் அவதிப்படுகின்றனர். குளங்கள் சேதமாக்கப்படாது இருந்திருந்தால் குளத்தில் நீர் இருக்கும். அதன் மூலம் கிணற்றிலும் நீர் இருக்கும்.

மேலும் குளம் வற்றியதற்குப் பரிகாரம் காணும் வகையில் அழிக்கப்பட்ட குளங்கள் ஆழமாக்கப்படும் வேலைகளும் நடைபெறுகின்றன. இந்த ஆழமாக்கும் வேலைகளால் நீண்ட காலத்தில் குளம் உருவாகமாட்டாது. பதிலாக குளப்படுக்கை மேலும் சேதமாக்கப்படுவதாகவே இச்செயல் அமையும்.

வவுனியா மாவட்டத்தில் 2-1/4 இலட்சம் மக்கள் வசிப்பதாக அண்மைக்கால அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. இவர்களது அன்றாடத் தேவைகளான நீரும், பயிர்ச் செய்கைக்கான நீரும் தேவைப்படுகின்றன. மழை பெய்யாத நிலைமையில் குளங்களே நீரை வழங்க வேண்டும். நீர் இன்மையால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்கனவே முன்மொழியப்பட்ட மகாவலி நீரை வடக்கே திருப்பும் திட்டம் 1948ம் ஆண்டிலிருந்து சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் பாராளுமன்றத்தில் பேசப்பட்டு வந்தது. ஆனால் அவை எல்லாம் வெறும் பேச்சாகவே இருந்து வருகிறது.

மகாவலியை வடக்கே திருப்பும் வேலைகள் 8ம் படிவத்தின் மூலம் மதவாச்சி வரை வந்துவிட்டது. அதனை பூ ஓயா மூலம் பாவற்குளத்துக்கு 8ம், 9ம் படிவ வேலைகள் மூலம் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது உறவினர்களும் குளத்தில் குடியேறியவர்களில் அடங்குவதால் அவர் மூலம் குளத்தை அழிக்கும் வேலைகளுக்கு ஆதரவு திரட்டப்படும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன என்றும் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.


இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு வெகுஜன அரசியல் பத்திரிகை

புதியபூமி

ஒவ்வொரு மாதமும் 1ம் திகதி வெளிவருகிறது.

✍ செய்திகள் - கட்டுரைகள் அனுப்புங்கள் ✍ உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

சந்தா சேருங்கள்

நிதி உதவி செய்யுங்கள்

விற்பனைக்கு உதவுங்கள்

வருட சந்தா - 200 ரூபா ஆறு மாதம் - 100 ரூபா
வெளிநாடுகளுக்கு US $ 20.00 (தபாற் செலவு உட்பட)



தொடர்புகளுக்கு :
ஆசிரிய பீடம் / நிர்வாகம் :
புதிய பூமி
S-47, 3வது தளம்,
கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு - 11, இலங்கை.
Tel: 435117, 335844 Fax : 01-473757

பணம் அனுப்பும் வங்கி விபரம் :
சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.


# நாலு நடக்குது உலகிலே நற்குணம்

## புத்திசீவிக் கூலிப் படைகள்

இனத்துவ ஆய்வுக்கான மையங்களில் ஒன்று கொழும்பில் உள்ளது. மற கண்டியில் உள்ளது.

கொழும்பில் உள்ளதில் நீலன் திருச்செல்வம், ராதிகா குமாரசாமி போன்ற அமெரிக் தொண்டிரப் பொடிகள் சேவையாற்றினார்கள். கண்டியில் உள்ளதில் பேராசிர கிங்ஸ்லி டி சில்வாவும் அவரது சீடப் பிள்ளைகளுமான அமெரிக்க தாசர் சேவையாற்றி வந்திருக்கிறார்கள். கொழும்பில் நீலனின் இடம் காலியான பி புதியதொரு அடியாளாகத் தமிழ்மாறன் போய்ச் சேர்ந்திருக்கிறார்.

இரண்டிலும் உள்ள சிறப்பு என்னவென்றால் கொழும்பில் உள்ளது தமி தேசியவாதக் கண்ணோட்டத்திலும் கண்டியில் உள்ளது சிங்களப் பேரின நோக்கிலும் செயற்படுவது தான். ஆனாலும் இரண்டிலும் அமெரிக்காவுக்கும் அ சர்வதேசப் பயங்கரவாதத்துக்கும் எதிராக வாய் திறவாத அறிஞர் பெருமக்க சன்மானத்துக்கு வேலை பார்க்கின்றனர். தேசிய இனப் பிரச்சனையைக் கி விட்டு ஆதாயம் தேடுகிற நோக்கத்தையும் ஆய்வறிவாளர்கட்குச் சன்மானம் வழங் கைக்குள் போட்டுக் கொள்ளவும் நல்ல உபாயங்களை சி.ஐ.ஏ. 1950களிலிருந் செய்து வருகிறது. இந்த வலையில் யாரும் தெரியாமல் போய் விழுவது கிடையா புதிதாக வந்து ஒட்டிக் கொண்ட முன்னாள் தமிழ்த் தேசியவாதி சேரன் உட்

## குருக்கள் செய்தால் குற்றமில்லை

முன்பெல்லாம் ஈழத்துப் படைப்பாளிகளின் நூல் வெளியீடுகளை எல்லாம் கண்ட நின்றவர் எல்லாரும் எழுதி வெளியிடுகிறார்கள் என்று மேடை ஏறி நக்கலா பேசி வந்தவர் இ.ஜெயராஜ் என்ற கம்ப வியாபாரிதி. நூலாக்குவது என திருவருளாற் கைகூடி வருகிற ஒன்று என்றும் சும்மா எல்லாரும் எழுதுவது தவ என்றும் இவர் சொல்வதும் போதாமல் ஆள் வைத்துப் பேசுவிப்பதும் உண்டு.

இப்போது 1998-99ல் இவர் 'பழம் பண்டிதர்' என்ற பேரில் பண்றித் தனமாக எழுத் எழுத்துக்கள் ஒரு தொகுப்பாக வந்துள்ளன. யாருடைய திருவருளோ? இதற் ஆசியாக வீரகேசரியில் எழுதியிருக்கிறவர் வேறு யாருமில்லை. தமிழக ஆப எழுத்தாளர் பாலகுமாரன் தான். இந்த பாலகுமாரன் தான் ஈழத் தமிழரி இன்னல்கள் பற்றித் தனது அடுத்த நாவல் என்று அறிவித்து விட்டு 'செம்மண செம்மணிங்கறாங்களே. செம்மணின்னா என்ன?' என்று 1998ம் ஆண் பக்கத்திலிருந்தவரிடம் கேட்டவர். ஈழத் தமிழர் நிலை பற்றிய அக்கறை ஏது இல்லாமலே அவர்களது அவலம் பற்றி எழுதிச் சம்பாதிக்கிற ஒரு பிறவி ஜெயராஜூக் நெருக்கமாக வருவதில் என்ன அதிசயம்.

கண்டது நிண்டதுகள் எல்லாம் புத்தகம் போடுவது பற்றி இனியும் வியாபாரிதியி கூட்டம் பேசாமல் விடுமா அல்லது 'குருக்கள் குசுவினாற் குற்றமில்லை' என் நியாயப்படுத்துமா?

## கோபாலபுரமும் கோபாலசாமியும்

தடா சட்டம் நிறைவேற்றப்பட்ட போது அதை உற்சாகசமாக ஆதரித்த கோபாலசாமியின் கதி இப்படியாகலாம் என்று அவருக்கு எச்சரித்த சி.பி.எம் பாராளுமன்ற உறுப்பினர் கூடத் தான் சொன்னது இவ்வளவு வேகமா மெய்யாகிவிடும் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டார். ஆனாலு ஜெயலலிதாவின் பழிவாங்கல் அரசியல் பற்றி ஜெயலலிதாவுடன் அடுத்த தேர்தலி கூட்டு சேர்வது பற்றிக் கனவு காணுகிற காங்கிரஸ் மௌனம் சாதிப்பது இயல்பானது ஆனால் அவரைத் தனது கூட்டாளியாகக் கொண்ட பாரதிய ஜனதாவின் அசமத்தமான போக்கு எதைச் சொல்லகிறது? கோபாலசாமிக்காக ஜெயலலிதாவை பகைக்க அவர்களும் ஆயத்தமாக இல்லை என்பதையா? அவர்கள் மேல் ஜெயலலிதா கைவைக்க மாட்டார் என்ற தைரியமாவது உண்டு.

ஜெயலலிதா பதவிக்கு வந்ததும் பழி வாங்கிய முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு இந்த அடாவடித்தனம் பற்றிப் போராட்டம் நடத்த வேண்டுமென்ற எண்ணமே இல்லாமல் போய்விட்டதா? கோபாலசாமி வளராமல் தடுப்பதில் மட்டுமே அவரது கவனம் என்றால், மகன் ஸ்டாலினை மட்டும் ஜெயலலிதா விட்டு வைப்பார் என்பது அவரது கவனமாகவே இருக்க வேண்டும். இவர்களெல்லாம் அரசியலில் எதைக் கற்றிருந்தாலும், 'இன்று இவர்களுக்கு நாளை எமக்கு' என்ற பாடத்தை மட்டுமே என்றுங் கற்க மாட்டார்கள்.

## ஓரம்போ, ஓரம்போ, பொறியியல் பீடம் வருது...

இருபத்தி நாலு வருடங்கள் முன்பு யாழ்ப்பாணத்துக்கு வாக்களிக்கப்பட்ட பொறியியல் பீடம் இரவோடிரவாக யாழ்ப்பாணத்துக்கு வரப் போகிறதாம். எங்கே கட்டிடங்கள் என்று கேட்காதீர்கள். கட்டிடங்கள் தேவை இல்லையாம். எங்கே ஆசிரியர்கள் என்று கேட்காதீர்கள். பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாமலே பொறியியலை நன்றாகக் கற்பிக்கலாமாம். ஆய்வுகூட வசதிகள் உண்டா என்று கேளாதீர்கள். விளையாட்டுப் பொம்மையளவில் உபகரணம் வாங்கிக் கணனி மூலம் எல்லாம் செய்து காட்டலாமாம். நிதி ஒதுக்கீடு உண்டா என்று கேளாதீர்கள். நிதி ஒதுக்கீட்டுக்கு காத்திருந்தால் ஒன்றும் நடவாதாம். எனவே றால் போட்டு (நூறு தமிழ் மாணவர்களை அனுமதித்து அவர்களைப் பலிக்கடாவாக்கி) சுறா (அரசாங்க ஆதரவு) பிடிக்கலாம் என்று ஒரு 'பொறியியல்' பேராசிரியர் பேசி வைத்திருக்கிறார். பேராசிரியர் ஏன் சொல்கிறார்? யாழ்ப்பாணத்திற்குக் குடும்ப சகிதம் குடியேறுகிற நோக்கமா? சொல்வது கடினம்! குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு என்பார்கள். இன்றைய பேராசிரியர்கள் சிலரது பேச்சும் அப்படித் தானோ?

## அஞ்ஞானம்

கண்டியிலிருந்து வருகிற ஒரு சிற்றேட்டில், ஈழத்து இலக்கியகாரர்கட்குக் கிளாக்கர் புத்திதான் உண்டு என்றும் இங்கிருந்து உருப்படியாக எதுவுமே வரவில்லை என்றும் 'கம்பன் அன் கோ' யாவாரி பதினைந்து இருபது பக்க நீளத்துக்கு உளறியதைப் பெரிய எழுத்தில் அச்சிட்டிருந்தார்கள். சிற்றேட்டின் ஆசிரியர், தனது தொடக்க காலக் கதைகளுக்கு பேராசிரியர் கைலாசபதியிடம் ஆசி வாங்கப் போக அவர் கதைகளில் சில குறைகளைச் சுட்டிக் காட்டியதால் இருந்த மனக் கொதிப்பைக் கிட்டடியில் அள்ளிக் கொட்டித் தன்னை அம்பலப்படுத்திக் கொண்ட மகான். இந்தக் கோமாளித்தனம் ஒரு புறமிருக்க, தங்கள் கிணற்றுக்குள்ளே கூட விவரம் தெரியாமல் தத்தளிக்கிற சில தவளைக்குஞ்சுகள் மற்றவர்களிடம் தரம் இல்லையே என்று கேட்ட மன மகிழ்வில் அஞ்ஞானியான ஆசிரியரையும் அவரை நன்கு பயன்படுத்துகிற 'கம்பன் அன் கோ'வையும் மெச்சியுள்ளார்கள். பாவம், தன் 75ம் பிறந்த ஆண்டை ஆள் பிடித்துக் கொண்டாடுகிற மல்லிகைப் பூக்காரர். கொஞ்சக் காலம் அவரோடு குலாவிய கம்பன் கடை யாவாரி அவருடைய காலையுமல்லவா வாரி விட்டு விட்டுள்ளது.

www.padippakam.com



# ஜே.வி.பி. - அனுரா கூட்டு
## சமாதான முயற்சிக்கு வேட்டு!

னுரா பண்டாரநாயக்கா ஒரு
ப்பிறவி. தாய் சிறிமா போன்றோ
தை பண்டாரநாயக்கா போன்றோ
லை. மொத்தப் பிரமச்சாரியான
னுராவுக்கு முற்போக்கு இடதுசாரி.
பு என்றால் ஒத்துவராது. அமெரிக்க
வாசி. அப்பட்டமான வலதுசாரி
நிமன்றி இனவாதம் கக்குவதில்
லவர். பண்டாரநாயக்கா குடும்பத்
இப்போதைய ஆண் வாரிசு.
னால் அடுத்த ஜனாதிபதி
பட்சகர் தானே என்று தம்பட்டம்
த்து நிற்பவர். அதனை மறை
மாக ஆதரிப்பது போன்று அக்கா
ன சந்திரிகா அம்மையார் அனுரா
கு ஜனாதிபதியின் விசேட ஆலோ
பதவியும் வழங்கிப் பக்கத்தில் வைத்
க்கிறார். இதனால் எதிர்க்கட்சித்
லவர் மகிந்த ராஜபக்ஷ உட்பட

பலருக்கு கவலையும் கோபமும்.

இத்தகைய அனுரா இப்போது முன்னாள் இடதுசாரிச் சிகப்புச்சட்டை வீரர்களான ஜே.வி.பி.யுடன் மிக நெருக்கமாகி நிற்கிறார். அந்த மாதிரி அந்நியோன்யம். அண்மையில் நுகேகொடயில் நடைபெற்ற சமாதான எதிர்ப்புக் கூட்டத்தில் ஜே.வி.பி.- அனுரா - தினேஷ், பேரியல் அஷ்ரப் என்போர் கொம்பனி சேர்ந்துள்ளதைக் காண முடிந்தது. இவர்களுக்கிடையிலான ஒற்றுமையின் மையம் பேரினவாத மாகும். எப்படியும் சமாதானச் சூழலைக் குழப்பி மீண்டும் யுத்தத்திற்குள் நாட்டை அமிழ்த்துவதே இவர்களது எண்ண மாகும். அதன் மூலம் உரிய உரிய பதவிகளுக்கும் அதிகார பீடத்திற்கும் வந்துவிடலாம் என்பது நம்பிக்கையாகும்.

அடுத்த தேர்தலில் ஜே.வி.பி.யுடன் கூட்டமைத்து யூஎன்.பி.யை வீழ்த்தி விடுவோம் என்று அனுரா பாராளு மன்றத்தில் சபதமெடுத்துள்ளார். ஜே.வி.பி.யும் அதற்குத் தயாராகி இரு தடவை ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளது. இன்று ஜே.வி.பி. இடதும் இல்லை சிகப்பும் இல்லை. அவை யாவும் கைகழுவி விடப் பட்டுவிட்டன. பாராளுமன்றப் பாதையில் சென்று தம்மை சீரழித்துக் கொண்ட என்.எம்.பெரேரா, கொல்வின், பீற்றர் கெனமன் நின்ற இடத்தையும் விட்டு அப்பாலே அதிக தூரம் ஜே.வி.பி. சென்றுவிட்டது. அது பேரினவாத வெறித்தனத்தில் மூழ்கி சுகம் கண்டு நிற்கிறது. அதனாலேயே அனுரா - ஜே.வி.பி. கூட்டு சாத்தியமாகிறது.

# வலி வடக்கு மீள்குடியமர்வு
## வெறும் கதையே!

1990ன் ஆரம்பத்தில் தமது சொந்த இடங்களை ராணுவத்திடம் தாரை வார்த்து விட்டு அகப்பட்டவற்றுடன் வெளியேறிய வலி வடக்கு மக்கள் இன்னும் தமது இருப்பிடங்களுக்கு மீளச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதி உயர் பாதுகாப்பு வலயச் சட்டத்தி னால் மக்கள் தமது வாழ்வுரிமையை இழந்து நிற்கின்றனர். யூஎன்.பி வந்தால் எல்லாம் நல்லபடி நடக்கும் எனக் கனவு கண்ட வலி வடக்கு மக்கள் வடபுலத்தி லிருந்து ஒரு யூஎன்.பி. உறுப்பினரையும் தெரிவு செய்யத் தமது வாக்குகளையும் வழங்கினர். தமிழர் கூட்டமைப்பு சகல ஆசனங்களையும் கைப்பற்றினால் யாவற்றையும் வெட்டிக் கிழித்து விடுவார்கள் என்றே நம்பப்பட்டது.

இப்போது யூஎன்.பி.யின் அமைச்சர்கள் அடுக்கு வரிசையில் வடக்கு வந்து தங்கி அங்கும் இங்கும் பார்வையிட்டுச் செல்கிறார்கள். அமைச்சர்கள் மகேஸ்வரன், ஜெயலத் ஜெயவர்த்தனா யாழ்ப்பாணத்தில் அதிக காலத்தைக் கழிக்கிறார்கள். இவர்கள் அமைச்சு அலுவல்களை விட தத்தமது வர்த்தக வியாபார விடயங்களில் தான் அதிக அக்கறை காட்டுகின்றனர். டக்ளஸ் இருந்த இடத்தில் தான் இருந்தால் எல்லாவற்றையும் வெட்டிப் பிடுங்கி விடுவேன் என்று தனது ஆதரவாளர் களுக்கு வீறாப்பு பேசிய மகேஸ்வரன் இப்போது என்ன செய்கிறார். அதே வேளை ஆனந்தசங்கரியார் வேறுவேறு அலுவல்களில் மும்முரமாக இருந்து வருகிறார்.

ஆனால் வலி வடக்கு மக்கள் எப்போது சொந்த இடங்களுக்குத் திரும்பலாம் என்ற ஏக்கத்துடனேயே காலத்தைப் போக்க வேண்டியுள்ளது. ராணுவம் 200 மீற்றர் மட்டுமே பின்சென்று பாது காப்பு அரங்கு அமைக்கப் போகிறார் களாம். வலி வடக்கின் பல பகுதிகளில் ராணுவ காப்பரண்கள் பலம் வாய்ந் தவையாக மாற்றி அமைக்கப்படு கின்றன. பனைகள் தறித்தும், பங்கர்கள் வெட்டியும், மண் மூட்டைகள் புதிப்பித்தும் நாளாந்தம் வேலைகள் நடைபெறு கின்றன. பயிற்சிகள் தொடர்கின்றன. யுத்தத் தயாரிப்பு என்பது போன்றே தெரிகிறது. இத் தயாரிப்புகளை அமெரிக்க அமைச்சரே நேரில் வந்து பார்த்துச் சென்றுள்ளார் என்றால் விஷயங்கள் எங்கே சென்று கொண்டிருக்கின்றன. வலி வடக்கு மக்கள் தமது சொந்தத் தீர்மானங் களுக்கு வந்து செயல்படுவதைத் தவிர வேறு வழி இல்லை.

• • • • • •

# சுரேஷ் பிரேமச்சந்திரன்
## பாவவிமோசனம் பெற்றுவிட்டார்!

ந்த பொதுத் தேர்தலுடன்
.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம்
ரஸ் பிரேமச்சந்திரன் பாவ
மாசனம் பெற்று ஈடேற்றம் பெற்று
டார். அவரும் அவரது கட்சியும்
ட்டுக்குடி ஆதிக்க அரசியல்
ட்டமைப்புக் கட்சிகளில் ஒன்றாகி
டனர். முன்பு பல தமிழ் இயக்கங்கள்
த்திலே ஓடித் திரிந்த காலத்தில்
ழ்ப்பாண சாதியப் பார்வையில்
வொரு இயக்கத்திற்கு ஒவ்வொரு
தியப் பின்புலம் காட்டப்பட்டது.
வேளை ஈ.பி.ஆர்.எல்.எவ். 'ப',
களின் இயக்கம் என்றும். சிகப்பு
றும் அடையாளப்படுத்தப்பட்டது.
னால் அதன் தலைமை கவனமாக
பர் சாதியால் தேர்ந்தெடுக்கப்
ருந்தது. இருந்தபோதிலும் சுரேஸ்
ட்பட சிலருக்கு தமது இயக்கத்தின்
பொறிக்கப்பட்ட அந்த அடையாளத்
ல் கடுமையான ஆதங்கமே இருந்து
தது. இந்தக் 'களங்கத்தை' போக்க
பான சந்தர்ப்பமாக கடந்த தேர்தல்
மைந்துவிட்டது. அத்துடன் அவ்
க்கத்தினுள் ஏற்பட்ட பிளவில் 'வரதர்

அணி' என்று தனி அணி ஏற்பட்டதும் சுரேஸிற்கு மேலும் வாய்ப்பாகிவிட்டது. கடந்த காலத்தில் கிடைத்த அந்தப் 'பெயர்' அதனால் ஏற்பட்ட களங்கம் சகலதையும் வரதர் அணி மீது சுமத்தி விட்டு பழமைவாத ஆதிக்க அரசியல் அணியிலேயே தம்மை இணைத்து இருத்திக் கொண்டார். இவ்வாறு தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்ட தாலேயே பதின்மூவாயிரம் விருப்பு வாக்குகள் பெற முடிந்தது என்பதை அவர் உணர்ந்து கொண்டுள்ளதையும் அறிய முடிகிறது. "முந்தித்தான் சுரேஸ் அதுகள் இதுகளோட இருந்தவர். இப்ப திருந்தி எங்கட கூட்டணிக்காரரோட நல்ல மாதிரி. கட்டாயம் அடுத்த தேர்தலில் எம்.பி.தான்" என்று அவரது புதிய ஆதரவாளர்கள் வாய் குளிரப் பேசுவதையும் கேட்க முடிகிறது. பிடிக்க வேண்டிய கொள்கையையும் இருக்க வேண்டிய இடத்தையும் சரியாக அடையாளம் கண்டாலே வடபுலத்தில் எம்.பி. ஆகலாம் என்பதை நுணுக்க மாகவும் தூரநோக்கோடும் கண்டு கொண்டவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

# சென்னையில் மழை பெய்தால் வவுனியாவில் குடை பிடித்தல்

முன்பு கம்யூனிஸ்டுகளை மாஸ்கோவில் மழை பெய்தால் இங்கே குடைபிடிப்போர் என்று ஏளனம் செய்த தமிழ்த் தேசிய வாதத் தலைமை. இப்போது செய்வது என்ன?

கோபாலசாமி கைதானதை எதிர்த்து வவுனியாவிலும் கிழக்கிலும் சத்தியாக்கிர கமும் உண்ணாவிரதமும் நடக்கிறது. இந்த மண்ணில் எத்தனையோ ஆண்டு களாக சிறையில் வாடுகிற அப்பாவித் தமிழர்கட்காக இவர்கள் ஒரு நேரம் உபவாசமோ தியானமோ கூடச் செய்தி ருப்பார்களா? போகட்டும் சிறையிலிருப் போர் சின்ன மனிதர்கள்தானே.

சென்னைக்குப் போய் பெரிய மனிதர் கோபாலசாமி ஆதரவுப் போராட்டம் நடத்த வேண்டாம், ஜெயலலிதாவை விமர்சித்து ஒரு கண்டனக் கூட்டம், போடோ சட்டத்தை எதிர்த்து மத்திய அரசின் அசட்டையைக் கேள்விக்கு உட்படுத்தி ஒரு அறிக்கை? கேவலம், இந்தியத் தூதரகத்திற்கு முன்னால் ஒரு ஊர்வலம்? திராணி இல்லாததால் தானே புலிகள் பேரைச் சொல்லி வோட்டுக் கேட்டு விட்டு அரசாங்கத் தைத் தட்டிக் கேட்கத் திராணியற்றுத் துவண்டு கிடக்கிறார்கள்.

# சந்திரசேகரனிடம் இ.தொ.கா. கேள்வி
## முந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைப்பதா?

அமைச்சர் சந்திரசேகரன் தன்னை விளம்பரம் செய்வதில் வல்லவர். விட வேண்டிய நேரத்தில் திடீரென அறிக்கை விடுவார். ஆதரவாளர்கள் சற்று சோர்ந்திருந்தால் அதில் கொஞ்சம் காரம் சேர்த்துக் கொள்வார். வவுனியா, மட்டக்களப்பு முதல் அவுஸ்ரேலியா வரை சென்று பொங்கு தமிழ் நிகழ்வில் பேரினவாதம் பற்றியும் அதற்கு எதிரான போராட்டம் பற்றியும் உச்ச தொனியில் பேசுவார். புலிகளின் நெருக்கமானவர்கள் போன்றும் காட்டிக் கொள்வார். யூஎன்.பி. மாநாட்டில் தோன்றி எதிரணிக்கு சவாலும் விடுவார். அமைச்சரவையில் எதையும் வற்புறுத்தவோ கேட்கவோ மாட்டார்.

இத்தகைய அமைச்சரை நோக்கி இ.தொ.கா. கேள்வி எழுப்பி அறிக்கை விட்டுள்ளது. 1999ம் ஆண்டு தை 18ம் திகதி ஆரம்பித்த களுத்துறைச் சிறைச்சாலை உண்ணாவிரதக் கைதிகள் மத்தியில் கொடுத்த உத்தரவாதம் என்னவாயிற்று? 2002ம் ஆண்டு யூலை 19ம் திகதி மீண்டும் களுத்துறைக் கைதிகள் உண்ணா விரதத்தில் குதித்தனர். 24ம் திகதி அங்கு சென்ற அமைச்சர் சந்திர சேகரன் பிரதமருடன் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். ஆனால் இன்றுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவ்வாறே தோட்டத் தொழிலாளர் களின் சம்பள உயர்வுக்கு போராட்டங் கள் தேவை இல்லை என்றும் பிரதமருடன் பேசி 180 ரூபா பெற்றுத் தருவதாகவும் கூறினார். ஆனால் முடிவுதான் என்ன? இவ்வாறு இ.தொ.கா. கேள்வி எழுப்பி நிற்கிறது. கேள்விகள் நியாயமானது தான். ஆனால் இ.தொ.கா. என்ன செய்தது. எதைச் செய்து நிற்கிறது. முந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைப்பதா என்பதே இ.தொ.கா.வின் மனக்கொதிப்பே அன்றி மலையக மக்கள் பக்கம் நேர்மையாக நின்று கொள்வதல்ல. இ.தொ.கா. வும் சரி மலையக மக்கள் முன்னணியும் சரி தொழிற்சங்க அரசியல் பிழைப்பு வாதிகளே அன்றி வேறு எதுவும் செய்ய இயலாத ஆளும் வர்க்க அடிவருடிச் சக்திகள் தான் என்பதை மலையக மக்கள் உணர்ந்து கொண்டாலே உரிய எதிர்காலம் தோன்ற முடியும்.

# யா/பு/சோமாஸ்கந்த கல்லூரி மாணவர்கள் மறுக்கிறார்கள்

ந்த ஆகஸ்ட் மாதம் 2002 புதிய
பில் வெளிவந்த புத்தூர் சோமஸ்கந்த
லூரியில் ஒரு மாணவன் உள
ாயாளியாக்கப்பட்ட பரிதாபம் என்னும்
லப்பில் புத்தூர் எம்.தெய்வேந்திர
ார் எழுதி அனுப்பிய செய்திக்கு அக்
லூரி கலைப்பிரிவு மாணவர்கள் சிலர்
ப்புத் தெரிவித்து கடிதம் எழுதி
ளனர். அக் கடிதத்தில் "நீங்கள்
றிப்பிட்டுள்ள ஆசிரியர் எங்கள்
லூரியில் எல்லோரதும் அபிமானத்தை

வென்ற ஓர் ஆசிரியர் ஆவார். இதைச் சகிக்க முடியாத எங்கள் பாடசாலை யின் நற்பெயருக்கு களங்கம் விளை விக்க முயலும் ஒரு சில தீய சக்திகளே மேற்படி பிரதீபனுடன் புனிதமான எங்கள் ஆசிரியரைத் தொடர்பு படுத்தியிருக் கிறார்கள் என நாங்கள் கருது கின்றோம்".

"நீங்கள் குறிப்பிட்டுள்ள பிரதீபன் ஒரு உள நோயாளி என்பது உண்மை யாயினும் அவ் உள நோயானது குடும்ப பரம்பரை பண்புகள் காரணமாகவோ, குடும்ப நெருக்கீடுகள் காரணமாகவோ அல்லது அவர் தொடர்பு கொள்ளும் வேறு சூழல் காரணமாகவோ ஏற்பட்டி ருக்கலாமே தவிர. நிச்சயமாக எங்கள் பாடசாலையினாலோ ஆசிரியரினா லோ ஏற்பட்டிருக்க முடியாது". இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:** கடந்த மாதப் புதிய பூமியில் வெளிவந்த மேற்படி செய்தி பற்றி சம்பந்தப்பட்ட ஆசிரியர் லலீசன் எவ்வித மறுப்பையும் தெரிவிக்கவில்லை. அதேவேளை பாதிக்கப்பட்ட மாணவன் தரப்பிலிருந்தும் அச் செய்தி பற்றி மறுப்பு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிட வேண்டியது.

# கா கனம் பொருந்திய சட்டமா அதிபர் அவர்களே!

ங்கள் தமிழ்க் கைதிகளின்
தலையில் அரசியல் தலையீட்டை
னுமதிக்கமாட்டேன் என்று கூறி
ப்பதாக வானொலியிலும் பத்திரிகை
ரிலும் செய்தி வந்துள்ளது. அவசர
லச் சட்டத்தின் அடிப்படையிலும் படு
தகமான பயங்கரவாதச் சட்டத்தின்
ாடூரமான கரங்களைக் கொண்டு
புதல் வாக்குமூலங்களின் வாயிலாக
கைது செய்யப்பட்டு தடுத்து
வக்கப்பட்டவர்கள் தான் இந்த தமிழ்
கதிகள். இவர்களை நீதியின் முன்
றுத்தாமல் பல ஆண்டுகளாக
றையில் வைத்து வதைப்பது தர்மமா?
ண்மையில் தாங்கள் இவர்கள்
ற்றவாளிகள்தான் என கருதினால்
தை சட்டபூர்வமாக நிரூபித்து
ண்டனையைப் பெற்றுக் கொடுப்பது
ன் சரியானது. அதை விடுத்து
ரசியல் தலையீட்டை அனுமதிக்க
ட்டேன் என கூறுவது மனித
யத்தின் அடிப்படையில் ஏற்றுக்
ாள்ளக் கூடிய ஒன்றல்ல. பல
ற்றவாளிகள் சட்டத்தின் முன்

தப்பினாலும் ஒரு நிரபராதி தண்டனை அனுபவிப்பது என்பதை சர்வதேச சட்டமே அனுமதிக்கவில்லை. சந்தேக நபர்களை குற்றவாளிகள் என சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிப்பது அரச சட்டவாதியின் கடமை. அது இயலாது எனில் நீதிமன்று அவரை விடுதலை செய்யும்.

கடந்த 20 வருட வரலாற்றில் பயங்கர வாத தடைச் சட்டத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நபர்களில் பலர் மேன் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதற்கும் மேலாக அனேகமானோருக்கு அரசு நட்ட ஈடு கொடுக்க வேண்டும் என உயர் நீதிமன்று தீர்ப்பு வழங்கி அரசு நட்ட ஈடாகப் பணமும் கொடுத்துள்ளது. இவ்வாறு விடுதலை பெற்றவர்களில் அனேகமானோர் ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் தடுத்து வைத்து அவ் ஒப்புதல் வாக்கு மூலத்தை அரச சட்டவாதி நிரூபிப்பதற்கு தவறிய தாலேயே விடுதலை பெற்றுள்ளனர்.

கொலைகள் செய்து நீதிமன்று குற்றவாளி என தீர்ப்பளித்து ஆயுள் தண்டனை பெற்ற கொலைக் குற்ற வாளிகள் ஜனாதிபதியின் கருணை யினால் சுதந்திர தினத்தன்று விடுதலை பெற்று வருகின்றனர். நாட்டின் சட்டவாக்கம் பாராளுமன்றத்தினா லேயே உருவாக்கப்படுகின்றது. அதை உருவாக்குபவர்கள் அரசியல் வாதிகளின்றி வேறு யார்? நம் நாட்டில் பெரும்பான்மை இனத்தவர்களே அதிக எண்ணிக்கை கொண்ட அரசியல் வாதிகள். இந்நிலையில் முற்றுமுழுதாக தமிழ் மக்களையே மட்டும் வருத்தும் கொடூர சட்டமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தமிழ் அரசியல் வாதிகளால் அகற்றவியலாது. அவர்கள் சந்தேக நபர்களை நீதியின் முன் நிறுத்துங்கள் அல்லது விடுதலை செய்யுங்கள் என சட்டமா அதிபரைக் கோருவது சட்டபூர்வமானது என்பதற்கு மேலாக மனிதாபிமானம் மிக்கது என்பதை தாங்கள் உணர்ந்து கொள்ளுங்கள். நீங்களும் அரசியல் வாதிகளைப் போல அனுமதிக்க மாட்டேன் என்பதற்கு பதிலாக சட்டவாதியாக சட்டத்தை பிரயோகித்து, குற்றவாளியாகக் காணப்படின் தண்டனையை வழங்குங்கள் அன்றேல் விடுதலை செய்யுங்கள். சட்டம் மனிதனை நல் வழிப்படுத்தவேயன்றி, மனிதனை பல்லாண்டு காலமாக காரணமின்றி சிறையில் வாட்டுவதற் காக இருக்கக் கூடாது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் அரசியல் கைதிகளே என்பதால் அவர்களை விடுதலை செய்வதற்கு அரசியல் ரீதியான முடிவுகள் அவசியமாகும். தமிழ் கைதிகளின் விடயத்தில் அரசியல் ரீதியான முடிவுகள் எடுக்கப்பட்டால் இலங்கை அரசின் அதி உயர் சட்டவாதியான சட்டமா அதிபரின் பொறுப்புக்கள் இலகுவாக்கப்படும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபருக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் பின்னர் பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகள் தமிழ் கைதிகள் விவகாரம் சட்டத்தரணிகளும் அரசியல்வாதிகளு மான சில தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்கள் சிலருக்கு ஏகபோகமாக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தன. அதாவது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபர் அரசியல் வாதிகளான குறிப்பிட்ட தமிழ் சட்டத் தரணிகளை நியமித்துள்ளதாகவும், அவர்களிடமே பொதுமக்கள் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் அச்செய்திகள் கூறின.

அவ்வாறான குத்தகையை சட்டமா அதிபர் அந்த அரசியல்வாதிகளான சட்டத்தரணிகளிடம் ஒப்படைத்திருக்க மாட்டார். அவர்களின் அவ்வாறான தலையீட்டை அனுமதிக்கப்போவதில்லை என்று கூறுவது வேறு, கைதிகளின் விடுதலையில் அரசியல் ரீதியான முடிவு எடுப்பது என்பது வேறு.

எனவே சட்டமா அதிபர் தமிழ் கைதிகளின் விடயத்தை அவரது காரியாலயத்தில் விரைவுபடுத்தப்பட வேண்டிய விடயமாக மட்டுமன்றி, அரசியல் ரீதியாக விரைவாக முடிவுறுத்தப்பட வேண்டிய விடயம் என்பதை ஏற்றுக் கொள்வாராக.

**மு. தியாகராஜா**
சிவில் உரிமை நடவடிக்கையாளர், சங்கானை.

படிப்பகம்

www.padippakam.com



# மலையக தமிழ்த் தேசிய இனமும் பண்பாட்டு அம்சங்களும்

- ம. அழகேசன் -

பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தினால் 1800களின் நடுப்பகுதியில் இந்தியாவிலிருந்து தமிழர்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பே பூர்வீகமாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்டிருந்த போதும் இந்தியாவிலிருந்து பிரிட்டிஷாரினால் கொண்டு வரப்பட்ட தமிழர்கள் இலங்கைத் தமிழர்களுடன் இணைந்த இனத்துவ அடையாளத்தை எடுக்க முடியாமல் போனமைக்கு அனேகமான வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழர்கள் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை விட வித்தியாசமான பொதுப் பண்பாட்டம்சங்களை கொண்டவர்களாகவே இங்கு வந்தனர். அதே போன்று இங்கு வாழ்ந்த சிங்கள மக்களிலும் (தற்போது றப்பர் தோட்டப் பகுதிகளில் வாழ்வோர் சிங்களப் பண்பாட்டு பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்) முஸ்லிம் மக்களிலும் வேறுபட்டிருந்தனர்.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழர்களில் அதிகப் பெரும்பான்மையானோர் தோட்டத் தொழிலாளர்களாகவும், ரயில்வே, பெருந்தெருக்கள், துறைமுக தொழிலாளர்களாகவும், சுத்திகரிப்பு தொழிலாளர்களாகவும், விசிதர்களாக, அதிகாரிகளாக, ஆசிரியர்களாக, புலமை சார்ந்தோராக, சிறு தோட்ட உரிமையாளர்களாகவும் தென்னை, கோப்பி, கொக்கோ, புகையிலை, நெல், மரக்கறி செய்வோராகவும் கடை உரிமையாளர்களாகவும் இருந்தனர்; இருந்து வருகின்றனர்.

இதைவிட இந்தியாவுடன் இன்னும் நெருங்கிய தொடர்பை வைத்திருக்கும், இங்கு சம்பாதிப்பதை அங்கு கொண்டு செல்லும் பெரிய தொழிலதிபர்களும் வியாபாரிகளும் இருக்கின்றனர். கணிசமான தெலுங்கர்களும், மலையாளிகளும் இங்கு வந்தனர். மலையாளிகளில் பெரும்பான்மையானோர் சிங்கள மக்களுடன் ஒன்று கலந்து விட்டனர். தெலுங்கர்கள் தமிழை தாய்மொழியாக ஏற்று மலையகத் தமிழ் மக்களுடன் ஒன்று கலக்கலாயினர்.

இவர்கள் அனைவரையும் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு, வரலாற்றுக் காரணங்களுக்காக மலையகத் தமிழ் மக்கள் என்றழைக்கிறோம்.

பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் உற்பத்தி முறைமைகள், உற்பத்தி உறவுகள் அவற்றுக்கான அல்லது அவற்றினால் தீர்மானிக்கப்படுகின்ற கல்வி, விஞ்ஞான, கலைகள், இலக்கியங்கள், நம்பிக்கைகள், சமூக உறவுகள், பழக்கவழக்கங்கள், நடத்தைகள் ஆகியவற்றின் தொகுப்பு எனலாம். ஒரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களை கொண்டு அச்சமூகத்தின் வாழ்க்கை எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும் சமூக மேம்பாட்டிற்கான சாதக, பாதக அம்சங்களையும் அறிந்து கொள்ள முடியும்.

கிராமிய விவசாயத்தில் ஈடுபட்டிருந்த இந்துமத, சாதிய, பண்பாட்டு அம்சங்களுடன் இங்கு வந்த தமிழர்கள் பிரிட்டிஷ் காலனித்துவ தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டமையால் குறிப்பாக பெரும்பாலானோர் பெருந்தோட்டத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனர். அத்தொழில் சாதி வேறுபாடின்றி ஈடுபடுத்தப்பட்டமை, லயக் குடியிருப்புகளில் கூட்டமாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டமை, சாதி வேறுபாடின்றி எல்லா தொழிலாளிகளுக்கும் ஒரே விதமான கூலி கொடுக்கப்பட்டமை என்பவற்றால் தோட்டத் தொழிலாளர்களிடையே சாதி வேறுபாடுகளை விட வர்க்க ரீதியான ஒருங்கிணைப்பு ஏற்படலாயிற்று. நடைமுறையில் சாதிய தீண்டாமை செயலற்றுப் போனது. சில சமய வைபவங்களிலும், நடைமுறையில் மனோ ரீதியான, அந்தஸ்து ரீதியான விடயமாகவும் பேசித் தீர்மானிக்கின்ற திருமணங்களிலும் சாதியம் கணிப்பில் எடுக்கப்பட்டன. சாதிய தொடர்பிலான திருமணங்களைப் போன்று கலப்பு திருமணங்களும் நடைபெற்றன. தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் உயர்ந்த சாதியினர் எனப்பட்டோர் தனித்தனியாக சாதி முனைப்புடனன்றி பொதுவான குடியானவர்கள் என்று அழைக்கப்பட்டனர். கங்காணி வேலையிலும் அலுவலர்களாகவும் அதிகமான உயர் சாதியினர் எனப்பட்டோர் இருந்தபோதும் வெள்ளைக்காரத் துரைமாரிடம் அவர்கள் செல்வாக்குடையவர்களாக இருந்தபோதும் சமூக ரீதியாக ஆதிக்கமுடையவர்களாக இருக்க முடியவில்லை. குறைந்த சாதியினர் எனப்பட்டோர் கங்காணிகளாகவும், பெரியகங்காணிகளாகவும் இருந்துள்ளனர். துண்டு முறை நடைமுறையில் இருக்கும் வரை தொழிலாளர்களின் 'சாதியினை' பதியும் வழக்கமும் இருந்தது. அந்த சாதிப் பிரிப்புகளைக் கொண்டு தோட்ட நிர்வாகிகள் அவர்களின் சுரண்டலை ஸ்திரப்படுத்திக் கொள்வதை இலகுவாக்கிக் கொண்டனர்.

சமய வைபவங்கள், திருமணங்கள், மரணங்கள் என்பவற்றில் இடம்பெறும் சடங்குகளில் சாதிய முறையிலான சம்பிரதாயங்கள் பின்பற்றப்படுகின்றன. சில சடங்குகளை சாதி ரீதியாக குறித்து ஒதுக்கப்பட்டவர்கள் செய்கின்ற போதும் அவற்றைச் செய்தாக வேண்டும் என்ற சமூக ரீதியான கட்டுப்பாடு அவர்கள் மீது சுமத்தப்படவில்லை. பொதுவாக 'தப்பு' அடிப்பது ஒரு குறிப்பிட்ட சாதியினர் செய்வதாகக் கொள்ளப்படுகின்ற போதிலும் சாதி வேறுபாடின்றி பொதுவாக எல்லோரும் அடிப்பதைக் காணலாம். தற்போது பொது வைபவங்களில் 'தப்பு' அடிப்பது மருவி

## வடக்கு கிழக்கை விட வேறுபட்ட சூழலிலேயே மலையக மக்களது வாழ்வும் வரலாறும் உள்ளது

விட்டது. 'தப்பு' நாடகங்களிலும், வீதிநாடகங்களிலும் இசைக்கருவியாகப் பாவிக்கப்படுகிறது. அத்துடன் 'தப்பு' அடிப்பவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே கூலி கொடுக்கப்பட்டுள்ளது. இது கூலி அடிப்படையிலான தொழில்சார் விடயமாக கொள்ளப்பட்டு வருகிறது.

சுத்திகரிப்பு தொழில் ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கு ஒதுக்கப்பட்டதாக கொள்ளப்பட்ட போதும் ஏனையோரும் அத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அத்தொழிலும் கூலிக்கான தொழிலாகவே கொள்ளப்படுகிறது.

சலவை, சலூன் தொழிலாளர்களுக்கும் அவர்களின் வேலைக்காக கூலி கொடுக்கப்படுகிறது. பொது வைபவங்களில் சமய ரீதியான கடமைகள் அவர்களுக்கென குறித் தொதுக்கப்பட்டுள்ளன. இவ்விடயத்தில் சாதியத்தின் அசிங்கங்கள் அரங்கேறிக் கொண்டிருப்பது உண்மையே. சலவை, சலூன் தொழிலாளர்கள் சாதி ரீதியாக பரம்பரை பரம்பரையாக செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதில்லை. அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் தோட்டத் தொழிலாளர்களாகவும் வேலை செய்கின்றனர்.

பிராமணர்கள் மந்திரம் ஓதியே திருமணச் சடங்குகள் நடை பெற வேண்டும் என்ற கட்டாயம் மலையக சமூகத்தில் இருக்கவில்லை.

மலையகத் தமிழ் மக்களிடையே நடைமுறையில் இருக்கும் காமன்கூத்து, பொன்னர்சங்கர், நல்ல தங்காள், அர்ச்சுனன் தபசு போன்ற கூத்துக்கள் சாதிய அடிப்படையில் அமைந்தவை அல்ல. அதில் நடிப்பவர்கள் சாதிய அடிப்படையிலன்றி பொதுவாக ஆர்வமுள்ளவர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவர்.

கோ. நடேச ஐயர், சி.வி.வேலுப்பிள்ளை உள்ளிட்டு தற்கால படைப்பாளிகளின் படைப்புகள் வரை தோட்டத் தொழிலாளர்களின் - மலையகத் தமிழ் மக்களின் அவல வாழ்வை சித்தரிக்கும் கலை, இலக்கிய வடிவங்கள் நிறையவே இருக்கின்றன. அவற்றில் வர்க்க ரீதியான, இன ரீதியான அடக்கு முறைகளுக்கு எதிரான குரல்களே நிறைந்துள்ளன. சாதியம் பற்றிய பதிவுகள் ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவாகும்.

இதனால் மலையகத் தமிழர்களின் பண்பாட்டில் சாதியத்தின் கொடுமைகள் இல்லையென்று கூறிவிட முடியாது. மனோ ரீதியாகவும், அந்தஸ்து ரீதியாகவும் உயர்வு தாழ்வு என்று கொள்வதற்கு சாதியம் சாதாரண வாழ்வில் இல்லாமல் போய்விடவில்லை. சாதியத்தின் தீண்டாமை மலையகத் தமிழ் மக்களிடம் இல்லை என்பதுடன் ஒப்பீட்டு ரீதியில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களிடையேயும், சிங்கள மக்களிடையேயும் சமூக ரீதியாக் சாதியம் செலுத்தும் ஆதிக்கம் மலையகத் தமிழ் மக்களிடம் இல்லை எனலாம்.

பிரிட்டிஷ் காலனியாதிக்க உற்பத்தி உறவுகளினால் மலையகத் தமிழ் மக்களின் பண்பாட்டில் சாதியம் வலுவிழந்த அளவிற்கு அவர்களை ஒருங்கிணைத்த வர்க்க ரீதியான சமூகப் பண்பாடு கட்டி வளர்க்கப்பட இடமளிக்கப்படவில்லை. தொழிற்சங்கங்களில் எல்லோரும் இணையக் கூடியதாக இருந்தபோதும் சக்தியுள்ள சங்கங்களின் தலைமையில் உயர்சாதி ஆதிக்கம் சுட்டிக்காட்டப்பட்டது. கடந்த 200 வருடங்களாக பிரிட்டிஷாராலும், இலங்கை முதலாளி வர்க்கத்தினா[...] பேரினவாதிகளாலும் மலையகத் [...] மக்கள் அடிப்படை உரிமைகள் ம[...] பட்டவர்களாக, பொது நீரோட்[...]லிருந்து ஒதுக்கப்பட்டவர்களா[...] வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் த[...] ஆரோக்கியமான பண்பாட்டை [...] வளர்த்து செழுமைப்படுத்தும் வாய்[...] மறுக்கப்பட்டவர்களாக இருந்தன[...]

மலையக குடும்ப வாழ்க்கை முறை[...] தந்தை வழி சமூகப் பாதிப்பு[...] அதிகமாக இருந்த போதும் தோ[...] தொழிலில் பெண்கள் பொருளா[...] ரீதியாக ஆண்களுக்கு நிக[...] கூலியையே பெறுகின்றனர். கு[...] பொருளாதாரத்தில் முக்கிய ப[...] வகிக்கின்றனர். சீதனம் முக்[...] பிரச்சினையாக இல்லை.

தற்போது வியாபாரத்துறை[...] ஈடுபட்டுள்ள மலையகத் தமிழ[...] இந்திய வர்த்தகர்களிடம் செல்வா[...] செலுத்துகிற சாதிய பழக்கவழக[...]களை கடைப்பிடிப்பதை அந்தஸ்[...] கொள்கின்றனர். படித்த மலைய[...]வர்கள் பெரும்பாலும் வடக்கு கி[...] தமிழர்களை குறிப்பாக யாழ்ப்பாண[...] வரை எடுத்துக் காட்டாக கொள்வ[...] 'சீதனம்' போன்றவற்றை அவர்க[...] பலர் வேண்டி பிராமணர்களின் கிரி[...]களுடனேயே திருமணம் செய்வ[...] அந்தஸ்தாக கொள்ளும் போக்[...] தலையெடுத்துள்ளது.

முன்னேறிய பிற பண்பா[...] அம்சங்களை உள்வாங்கிக் கொ[...] ஆரோக்கியமான பண்பாட்[...] வளர்ப்பது இன்றியமையாதது. ஆன[...] மலையக சமூக உருவாக்கத்தில் [...] தள்ளப்பட்ட இந்திய சாதிய, பெண்[...]டிமை பண்பாட்டு அம்சங்கள[...] உள்வாங்கப்படுவதோ வடக்கு கிழ[...] மக்களிடையே இருக்கும் 'சீதன[...] போன்ற பிற்போக்கு அம்சங்கள[...] உள்வாங்கப்படுவதோ ஆரோக்கியம[...]தாகாது.

சாதியம், பெண்ணடிமை, பழமைவ[...] என்பன ஒப்பீட்டு ரீதியில் ஆதி[...] செலுத்தாத பண்பாட்டு பின்புலத்[...] வாழ்க்கை முறையால் ஏற்[...] கொண்டுள்ள மலையகத் தமிழ் ம[...] அவற்றை முற்றாக துடைத்தெ[...] மலையகத் தமிழ் மக்களிடை[...] சமத்துவத்தை நிலைநாட்[...] பண்பாட்டம்சங்களை வளர்த்தெ[...] வேண்டியுள்ளனர். அவர்களின் வர்[...] இனத் தன்னடையாளங்கள[...] ஆரோக்கியமான பக்கம் கூர்[...] படுத்தப்பட வேண்டியுள்ளது.

●

# மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் கையெழுத்தியக்கம்

மலையகத்தமிழ் மக்களின் இருப்பிற்கும் சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தப் போகின்ற மேல்கொத்மலைத் திட்டத்தை நிரந்தரமாகக் கைவிடும்படி வற்புறுத்தி மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் முன்னெடுத்து வரும் கையெழுத்து இயக்கத்திற்கு மேலும் மக்களின் ஆதரவு அதிகரித்து வருகிறது. இதுவரை 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளதாக தெரிகிறது. அக் கையெழுத்துக்கள் வெகுவிரைவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும், நீர்மின்சக்தி அமைச்சர் கருஜயசூரியவிடமும், கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவரிடமும் கையளிக்கப்படவிருக்கின்றன.

இதனையடுத்தும் அத்திட்டம் கைவிடப்படாவிடின் மேலும் பல போராட்ட இயக்கங்களை முன்னெடுக்கப் போவதாக மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் அறிவித்துள்ளது. இவ்வியக்கத்தில் புதிய-ஜனநாயகக் கட்சி, புதிய மலையகம், புதிய பண்பாட்டு அமைப்பு அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக ஆசிரியர் சங்கம் உட்பட பல அமைப்புகள் இணைந்து செயற்படுகின்றன.

1979ஆம் ஆண்டு முதல் புதிய-ஜனநாயகக் கட்சி (அப்போது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற பேரில் இயங்கியது.) மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான போராட்டங்களை பல விதங்களில் முன்னெடுத்

## மக்கள் மத்தியில் புதிய ஜனநாயக கட்சி

துள்ளது. மேல்கொத்மலைத் திட்டத்தினால் தலவாக்கொல்லை நகரில் பெரும் பகுதியும், தலவாக்கொல்லை நதிக் கரையில் மரக்கறி செய்கை பண்ணப்படும் நிலப்பரப்பும் நீரில் மூழ்கடிக்கப்படவுள்ளது பற்றியும், அதனால் அங்கு வாழும் மலையகத்தமிழர்கள் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படுவது பற்றியும், அதனால் நுவரெலியா மாவட்டத்தில் மலையகத்தமிழ் மக்களின் குடிப்பரம்பலில் வீழ்ச்சி ஏற்படும் என்பதன்னையும், நீர்த்தேக்கத் திட்டத்தைச் சுற்றி பெரும்பான்மை இனக் குடியேற்றம் ஏற்படுத்தப்படும் அபாயம் பற்றியும் சூழலுக்கு ஏற்படப் போகின்ற பாதிப்பு பற்றியும் தொடர்ச்சியாக மக்களுக்கு கல்வியூட்டி வந்துள்ளது.

ஐ.தே.கட்சி காலத்திலும், பொது ஜன ஐக்கிய முன்னணி காலத்திலும் மேல் கொத்மலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எதிரான போராட்டங்களை செய்து வந்துள்ளது.

தற்போது ஐ.தே.மு. அரசாங்கத்தின் நீர்மின்சக்தி அமைச்சர் கருஜயசூரியவும், பெருந்தோட்ட பிரதியமைச்சர் நவீன் திசநாயக்கவும் மேல்கொத்மலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எடுத்துவரும் முயற்சிகளுக்கு எதிரான போராட்டங்களிலும் புதிய-ஜனநாயகக் கட்சி முக்கிய பங்கை வகித்து வருகிறது.

ம.ம.மு. தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரம் அத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமானஆறுமுகம் தொண்டமான் எதிர்ப்பதாக தெரிவித்த போதும் அவரின் தொழிற்சங்கத் தலைவர்களில் சிலர் மேல்கொத்மலைத் திட்ட ஒப்பந்த வேலைகளை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்நிலைப்பாடுகளுக்கு எதிராக ஐக்கியப்படக் கூடிய தொழிற்சங்கங்கள், கலை இலக்கிய அமைப்புகள், அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புகள் என்பவற்றை அணிதிரட்டி மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் கட்டப்பட்டுள்ளது. அவ்வியக்கம் அத்திட்டத்திற்கு எதிராக மக்களிடமும், அமைப்புகளின் பிரதிநிதிகளிடமும் கையெழுத்தைப் பெற்று வருகிறது. அவ்வியக்கத்தில் மக்கள் நேரடியாக பங்கெடுத்து வருகின்றனர்.

இதற்கு அப்பால் தலவாக்கொல்[...] நகரில் மேல்கொத்மலைத் திட்டத்தி[...] எதிரான மறியல் போராட்டமொ[...] நடைபெற்றுள்ளது. அதில் அதிக[...] சிங்கள மக்களும் கலந்து கொ[...]ள்ளனர். இதனை நுவரெலியா மாவ[...] ஊடகவியலாளர்களும், சூழலியலா[...]களும் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஆகஸ்ட் 12ம் திகதி கொழு[...] கோட்டை புகையிரத நிலையத்தி[...] முன்பாக 1953 ஆகஸ்ட் 12ம் தி[...] ஹர்த்தால் போராட்ட நினைவ[...] இடதுசாரிகளால் நடாத்தப்பட்ட மறி[...] போராட்டத்தில் கலந்து கொண்ட பு[...] ஜனநாயகக் கட்சி மேல்கொத்மலை[...] திட்டத்தை கைவிடுமா[...] வலியுறுத்தியது.

மக்களின் போராட்டப் பாதையி[...] உரிமைகளை வென்றெடுக்கவும், ச[...] மாற்றத்தை ஏற்படுத்தவும் முடியுமெ[...] நம்பிக்கையில் புதிய-ஜனநாயகக் க[...] தோழர்கள் மிகப் பொறுப்புடனு[...] அர்ப்பணிப்புடனும் நம்பிக்கையுடனு[...] அரசியல் நடவடிக்கைகளில் ஈடுப[...] வருகின்றனர். தோட்டத் தொழிலா[...]கள் மத்தியிலும் பரவலாக மலைய[...] தமிழ் மக்கள் மத்தியில் மக்கள் போரா[...] இயக்கங்களை கட்டி வளர்ப்பத[...] ஈடுபட்டுள்ள மக்கள் நடவடிக்[...] சக்திகளுக்கு மேல்கொத்மலைத் தி[...]துக்கு எதிரான மக்கள் இயக்[...] நம்பிக்கை தருவதாக அமைந்துள்ள[...]

www.padippakam.com



புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 செப்டம்பர் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 50

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117, 335844 பாக்ஸ்: 01-473757

# விலைகளின் உயர்வும் வற் (VAT) வரியும்

முதலாளித்துவ ஆட்சி முறையில் வருமான சமநிலையை பேணுவதற்கு அல்லது கூடிய வருமானம் பெறுபவர்களுக்கும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்குமான இடைவெளியைக் குறைப்பதற்காகவே பொதுவாக வரிகள் அறவிடப்படுவதாக முதலாளித்துவ பொருளியலாளர்கள் கூறுவதுண்டு. சோஷலிஸ அரசுகள் அமைக்கப்பட்ட பிறகு முதலாளித்துவ அரசுகளாலும் பிரஜைகளின் சேமநலனில் பொது அக்கறை செலுத்தாமல் இருக்க முடியவில்லை. பெரும்பான்மையான பிரஜைகளின் சேமநலனைக் கவனிப்பதற்காக அடிப்படை தேவைகளான கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற துறைகளை சேவைத் துறைகளாக வைத்திருக்க வேண்டுமெனின் மக்களிடமிருந்து வரி அறவிட வேண்டும் என்று கூறப்பட்டது.

மக்களின் அடிப்படை வாழ்க்கைக்கு உத்தரவாதமளித்து வந்த சோஷலிஸ அரசுகள் முதலாளித்துவ அரசுகளாக மீள மாற்றப்பட்ட பிறகு, முதலாளித்துவ அரசுகளின் நெருக்கடியின் காரணமாகவும் பிரஜைகளின் சேமநலன்களைக் கவனிக்க வேண்டிய பொறுப்பைத் தட்டிக் கழித்து வருகின்றன. அதனை மூன்றாம் உலக வறிய நாடுகளும் தட்டிக் கழிக்க வேண்டுமென பெரிய முதலாளித்துவ நாடுகள் விரும்புகின்றன. மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவி வழங்கும் பெரிய முதலாளித்துவ நாடுகளும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்களும் உதவி வழங்குவதற்காக விதிக்கும் நிபந்தனைகளில் முக்கியமானதாக பிரஜைகளின் சேமநலன்களை அரசுகள் கவனிப்பதை கைவிட வேண்டும் என்பது முக்கியமானதாக இருக்கிறது. அதாவது கல்வி. சுகாதாரம், போக்குவரத்து போன்ற சேவைத் துறைகளை அரசாங்கம் கொண்டு நடத்தாமல் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதாகும். அத்துடன் அரசாங்கத்திற்கு வருவாய் தரக் கூடியதாக இருக்கும் பொது தொழில்துறைகளை 'மீள புனரமைத்தல்' என்ற பெயரில் தனியார் கம்பெனிகளும், பல்தேசியக் கம்பெனிகளுக்கும் குறைந்த விலையில் விற்றுவிட வேண்டும் என்பது இன்னொரு நிபந்தனை ஆகும்.

அதனால் இலங்கை போன்ற வறிய மூன்றாம் உலக நாடுகள் அரசை கொண்டு நடாத்த அரச வருமானம் இல்லாது போகவே, பெரும்பாலும் வரிகளையே அரச வருமானமாக கொள்ள வேண்டியிருக்கின்றன.

எனவே நாட்டு மக்கள் அனைவரிடமிருந்து அறவிடக் கூடிய வரியாக ஐ.தே.க. எண்ணிக் கொண்டிருந்த ஜீ.எஸ்.ரீ. வரியையும், தேசிய பாதுகாப்பு வரியையும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மக்களிடமிருந்து அறவிட்டது. அவ்வரிகளை நீக்கப்போவதாக வாக்குறுதியளித்திருந்த ஐ.தே.மு. ஆட்சிக்கு வந்த பிறகு வற் (VAT) என்ற வரியை அறவிடத் தொடங்கியுள்ளது. இவ்வரி முன்னைய வரிகளை விட கூடிய விகிதாசாரத்தில் அறவிடப்படுவதுடன் சாதாரண மக்கள் அனைவரையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்பதாக அமைந்துள்ளது.

என்றுமிலலாத அளவிற்கு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. ஆனால் பொருட்களின் விலைகள் குறையும் என்றே சாதாரண மக்கள் ஐ.தே.மு. அரசாங்கத்தில் நம்பிக்கை வைத்தனர். உள்நாட்டு சிறுவியாபாரிகள் வியாபாரம் நன்கு நடைபெறும் என்று நம்பினர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் ஐ.தே.மு. அரசிற்குமிடையிலான யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன நாட்டில் இயல்பு வாழ்க்கையை தோற்றுவித்து சாதாரண மக்களுக்கு சுமையற்ற வாழ்வைக் கொண்டு வரும் என்று சாதாரண மக்கள் நம்பினர்.

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பிழையான பொருளாதார கொள்கையினாலேயே தற்போது பொருளாதார தேக்க நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐ.தே.மு. அரசாங்கத்தினர் மட்டுமன்றி சாதாரண மக்களும், வியாபாரிகளும் கூட பேசுகின்றனர். ஐ.தே.கட்சி முன்னெடுத்த தாரள பொருளாதார கொள்கையையே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் முன்னெடுத்தது. அதனால் ஐ.தே.கட்சிக்கு மாறான பொருளாதார கொள்கையை முன்னெடுத்தது என்று கூற முடியாது. ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகள் தாராள திறந்த பொருளாதாரக் கொள்கையினாலேயே ஏற்பட்டன என்று கூறுவதே சரியானது.

வற் போன்ற மக்களை வதைக்கும் வரிகளை அறவிடவும், மேலும் தனியார் மயத்தையும் தாராள கொள்கைகளையும் முன்னெடுப்பதற்காக பொதுஜன ஐக்கிய முன்னணி மீது ஐ.தே.மு. குற்றம் சாட்டுகிறதேயன்றி அடிப்படையில் பொருளாதாரக் கொள்கைகளில் இரண்டு அரசாங்கங்களுக்கும் வேறுபாடு கிடையாது.

பெரிய முதலாளித்துவ நாடுகளில் வரவு செலவுத் திட்டத்தினால் வரிச்சலுகைகள் கிடைக்குமா என்ற ஏக்கத்துடனேயே பொது மக்கள் வரவு செலவுத் திட்ட உரையை எதிர்நோக்குவர். வறிய மூன்றாம் உலக நாடுகளில் பொருட்களின் விலை குறைக்கப்படுமா என்றிருந்த நிலைமை மாறி பொருட்களின் விலைகள் கூட்டப்படாதிருக்குமா என்ற நிலைமை வந்துள்ளது. அதனால் மூன்றாம் உலக நாட்டு அரசாங்கங்கள். பொருட்களின் விலைகளை வெளிப்படையாக உயர்த்தாமல் வரிகளை விதிக்கின்றன. வருமானவ வரி, சொத்து வரி என்பவற்றுடன் வற் போன்ற (பொருட்கள் சேவைகள் மீதான பெறுமானம் கூட்டப்பட்ட வரிகளை) வரிகளை விதிக்கும் போது சாதாரண மக்களிடமிருந்தும் வரிகளை அறவிட முடிகிறது. அதன் மூலம் அரசிற்கு வருமானம் கிடைக்கிறது.

அந்த வகையில் அரசாங்கம் முகம் கொடுக்கின்ற பொருளாதார நெருக்கடிகளை சமாளித்துக் கொள்வதற்காக அதிகப் பெரும்பான்மையான மக்களை மறைமுகமாக வரி செலுத்த வைக்கும் வற் வரியை ஐ.தே.மு. அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளது.

இதிலிருந்து மீள்வதற்காக சம்பள உயர்வுகளை கோருவது உடனடி நிவாரணத்துக்கான கோரிக்கையாக அமைந்த போதும், சம்பள உயர்வுகள் கிடைக்காத போது தீர்வாக அமைய முடியாது.

எனவே சாதாரண மக்களை வதைக்கும் வற் வரியை நீக்கும்படி கோருவதும், நீக்கக் கோரும் மக்கள் இயக்கங்களை முன்னெடுத்து அதனை நிரந்தரமாக நீக்கிக் கொள்வதுமே சரியான தீர்வாக முடியும்.

- ஆசிரியர் குழு-

# இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீடு

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை கடந்த இரண்டு தசாப்த கால யுத்தத்திற்குப் பின் இன்றைய பேச்சுவார்த்தைக் கட்டத்தை அடைந்து நிற்கிறது. இதன் உள்ளார்ந்தம் பேரினவாத ஒடுக்குமுறையாகும். அதனை வளர்த்து தமது நிலவுடமை முதலாளித்துவ உயர் வர்க்க நலன்களுக்கும் தேவைகளுக்கும் அரசியல் நடைமுறைகளின் ஊடாகப் பயன்படுத்திக் கொண்டவர்கள் சொத்து, சுகம் படைத்த இந்நாட்டின் மேட்டுக் குடியினர். பௌத்த சிங்களப் பேரினவாதத்தை வெறித்தனமாக சிங்கள மக்களிடையே ஊட்டி வளர்த்து இனப் பகையை மூட்டிக் கொண்டனர். பேரினவாத ஒடுக்குமுறை ராணுவ வடிவத்தைப் பெற்று பல்வேறு நிலைகளிலும் தமிழ் மக்கள் ஒடுக்குதல்களுக்கு ஆளாக்கப்பட்டு கொன்றொழிக்கப்பட்டு வந்தனர்.


பேரினவாத ஆளும் வர்க்கத்திற்கு பக்க பலமாக நின்று தமது பொருளாதார நலன்களையும் முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பு முறைகளையும் பாதுகாத்துக் கொள்ள இன முரண் பாட்டை பயன்படுத்திக் கொண்டவர்கள் ஏகாதிபத்திய சக்திகள். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் ஆயுதங்களை அள்ளிக் கொடுத்து ஆலோசனைகள் பயிற்சிகள் வழங்கி இணைந்து வாழ வேண்டிய மக்களை பிளவுபடுத்தி யுத்த முனையில் எதிரும் புதிருமாகப் போரிட வைத்தவர்கள் இந்த ஏகாதிபத்திய சக்திகள். நமக்கு மட்டுமன்றி கொலனித்துவத்திடமிருந்து விடுதலை பெற்ற பெரும்பாலான ஆசிய ஆபிரிக்க தென்னமெரிக்க நாடுகள் ஒவ்வொன்றுக்கும் இவ்வாறான கதியையே ஏற்படுத்தி வந்தார்கள்.

இரண்டவாது உலக யுத்தத்திற்கு பின்பு அமெரிக்கா உலகின் முதலாம் தர வல்லரசாக வளர்ச்சி பெற்று வந்தது. கொலனித்துவத்திடமிருந்து விடுதலை பெற்ற இன்றைய மூன்றாம் உலக நாடுகளில் தமது ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் நிலை நிறுத்துவதில் அமெரிக்கா முழு முயற்சி எடுத்துக் கொண்டது. அந் நாடுகளிலே தமக்கு விசுவாசிகளாகவும் ஏகபோக மூலதனத்திற்கு பாதுகாப்பு வழங்கக் கூடியவர்களாகவும் ஒரு அடிவருடிக் கூட்டத்தை வளர்த்துக் கொண்டது.

இலங்கையில் தமது நலன்களுக்கும் ஆதிக்கத்திற்கும் முழுமையான இடம் தருவதில் தேசிய முதலாளித்துவ கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட பெருமுதலாளித்துவக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையே முழுமையாக அமெரிக்கா நம்பி வந்தது. ஆனால் பண்டாரநாயக்கா குடும்ப ஆட்சியை நம்பிக் கொள்ளவில்லை. அதேவேளை பிரித்தானிய விசுவாசத்தைப் பெரிதும் கொண்டிருந்த சேனநாயக்க குடும்பம் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் இருந்து மறையும் மட்டும் அமெரிக்கா பொறுமை காத்து வந்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை நம்பிக்கையோடு வளர்த்துக் கொண்டது. ஜே.ஆர். இறுதி வரை அமெரிக்க விசுவாசியாக இருந்தே உயிர் துறந்தார்.

பதினேழு வருடகால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் ஜே.ஆர். கேட்ட சகலதையும் அமெரிக்கா மறுப்பின்றி வழங்கியது. அவ்வாறே அமெரிக்கா கூறிய ஒவ்வொன்றையும் ஜே.ஆர். நடைமுறைப்படுத்திக் கொண்டார். அரசியலமைப்பை மாற்றியது முதல் தாராளமயம், தனியார் மயம், இன ஒழிப்பு யுத்தம் வரை ஜே.ஆரும் அமெரிக்காவும் மனமொத்து செயல்பட்டனர். ஜே.ஆருக்குப்பின் பிரேமதாசாவும் டி.பி.விஜயதுங்காவும் அவ்வழி தொடர்ந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருடகால இருண்ட ஆட்சி அம்பலமாகி நின்ற சூழலில் பொதுசன முன்னணியும் சந்திரிகாவும் பதவிக்கு வந்தபோது அமெரிக்கா அவர்களையும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாதையில் தொடர வைப்பதில் வெற்றி கண்டது. சமாதான முயற்சிகளை முறியடித்து யுத்தத்தின் மூலம் சமாதானம் என்று கூறி யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டது. அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் மூலமாக ஆலோசனை வழங்குவதில் பொதுசன




முன்னணிக் காலத்தில் அமெரிக்கா தனது காய்களை நகர்த்தி வந்தது. அதேவேளை தமது நம்பிக்கைக்குரிய ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருவதற்குரிய வாய்ப்பான சூழலுக்கும் வழி வகுப்பதில் அமெரிக்கா தன் பங்காற்றியது.

இன்று அமெரிக்கா தேசிய இனப் பிரச்சனையின் தீர்வு முயற்சியில் தனது முழுமையான தலையீட்டை செய்து வருகின்றது. ரணில் விக்கிரமசிங்காவின் செயற்பாட்டிற்குப் பின்னால் அமெரிக்காவின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இருக்கின்றன என்பது தெளிவாகிறது. அதனை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரின் திட்டமிட்ட நடவடிக்கைகளும் அறிக்கைகளும் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன. இரண்டு வருடம் முன்பாக யாழ்ப்பாணத்தில் அவர் ஆற்றிய உரையில் இருந்து ஆரம்பித்த அவரது செயற்பாடுகள் அண்மையில் கண்டிக்குச் சென்று மகாநாயக்கர்களைச் சந்தித்தது ஊடாக அமெரிக்காவின் தலையீட்டை தெளிவுபடுத்தி வருகின்றன.

இனப்பிரச்சினை ஊடாக அமெரிக்கா பொருளாதார நலன்களை விட ராணுவ நலன்களைக் கொண்ட இலக்குகளையே முனைப்புடன் நாடி நிற்கின்றது. அதற்கு பலாலி படைத்தளம், திருகோணமலைத் துறைமுகம் என்பவற்றின் மீதான அதன் திட்டங்கள் உள்ளார்ந்த ரீதியில் பூர்த்தியடைந்துள்ளன என்றே நம்பப்படுகின்றது. தென் ஆசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்திற்கான தளமாக இலங்கையைப் பயன்படுத்தும் அதன் நீண்ட காலக் கனவு நிறைவேறி வருகின்றது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலே பின்பற்றப்படுகின்றது. முன்பு டெல்கியை எதிர்பார்த்திருந்த நிலை மாறி இப்போது வாஷிங்டனை பார்த்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வாஷிங்டன் சென்று சந்திக்க வேண்டியவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார். அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மிகுந்த மகிழ்ச்சியோடு ரணிலை அரவணைத்து "உங்களின் பின்னால் நான் இருக்கிறேன்" என்றே அர்த்தம் மிகுந்த வாக்குறுதியை வழங்கி அனுப்பினார்.

ரணிலை விட அமெரிக்கா நம்பும் விரும்பும் ஒருவர்தான் அமைச்சர் மிலிந்த மொறகொட. அமெரிக்காவிலே படித்து பயிற்சி பெற்றவர். அவரது மனைவி கூட ஒரு அமெரிக்கர். இன்று பொருளாதார ராணுவ விடயங்களில் அதிக அக்கறை காட்டி அவ்வப்போது அந்தந்த இடங்களுக்கு சென்று ஆலோசனைகள் உத்தரவுகள் உற்சாகங்கள் கொடுத்து வருபவராக மிலிந்த மொறகொட இருந்து வருகிறார். அண்மையில் அமெரிக்காவிலிருந்து வெளியிடப்பட்ட உலக நாடுகளில் வளர்ந்து வரும் தலைவர்கள் நூறு பேர்களது பட்டியலில் மிலிந்த மொறகொடவின் பெயர் காணப்படுவது தற்செயலான தொன்றல்ல.

பேச்சுவார்த்தையில் இனப்பிரச்சினைக்கு எவ்வகையான தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதில் அமெரிக்காவிற்கு சொந்த முடிவு உண்டு. அத்தகைய முடிவு இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி பேரினவாத பெருமுதலாளித்துவ அரசாங்கத்திற்கு பாதகமில்லாத ஒன்றாகவே இருக்கும். அதனை முன் கூட்டியே உணர்ந்து கொண்டதாலேயே பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தால் யுத்தத்திற்கு தயாராக இருக்குமாறு ராணுவத்திற்கு மிலிந்த மொறகொட கூறியிருக்கிறார். அவ்வாறான யுத்தத்தில் அமெரிக்கா வகிக்கும் பாத்திரத்தை ரணிலும் மிலிந்தவும் அறிவார்கள். ஆனால் இதுவரை வெளிப்படையான அமெரிக்காவை எதிர்க்காத, கண்டிக்காத புலிகள் இயக்கம் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்பதே முக்கிய எதிர்பார்ப்பாகும்.

# கொக்கா கோலாவின் கொலை வெறியாட்டம்

கொக்கா கோலா பானத்தை போத்தல்களில் அடைக்கும் தொழிற்சாலைகளை அமெரிக்க கொக்கா கோலா நிறுவனம் நடத்தி வருகிறது. அங்கு பணியாற்றும் தொழிற்சங்க முன்னோடிகளை கடத்திச் சென்று சித்திரவதை செய்தும் கொலை செய்தும் வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கொக்கா கோலா நிறுவனத்தின் கொலைகளை எதிர்த்து அனைத்துலக தொழிலாளர் உரிமை நிதியம் என்ற அமைப்பும், அமெரிக்க உருக்கு தொழிலாளர் சங்கமும் இணைந்து மியாமி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளன. இவ் வழக்கிற்குப் பிறகு கொக்கா கோலா நிறுவனத்தின் கொலை வெறியாட்டங்கள் அம்பலமாகத் தொடங்கியுள்ளன.

கொலம்பியாவிலேயே அதிகமான தொழிற்சங்கத் தலைவர்கள் கொல்லப்படுகின்றனர் எனவும் அதில் கொக்கா கோலா தொழிற்சாலைகளிலேயே பெருமளவு தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

1989இல் பாஸ்டோ நகரில் ஜோஸ் அவலினோ சிகானோவும் 1996இல் கேர்பா எனுமிடத்தில் லியோனார்டோ கிரானடோவும், ஜோஸ் டேவிட்டும் கூலிப்படையினரால் ஆலைக்குள் வைத்து கொல்லப்பட்டனர். 1996 டிசம்பரில் ஜேர்பா நகரில் ஆலையின் வாயிலில் வைத்து இசிட்ரோ செகுண்டோ கில் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தொழிற்சங்கங்களை கலைத்து விடும்படி குண்டர் படைகளும் இராணுவப் படைகளும் அடிக்கடி கொக்கா கோலா நிறுவன தொழிலாளர்களை அச்சுறுத்தியும் தாக்கியும் வருவது நாளாந்தச் செய்திகளாகின்றன.

தொழிற்சங்க காரியாலயங்களும் தாக்கப்படுவதுண்டு. போராட்டங்களில் ஈடுபடும் தொழிலாளர்களை குண்டர் படையினரும் இராணுவப் படையினரும் கடத்திச் சென்று சித்திரவதை செய்வதுண்டு.

போராட்டங்களில் ஈடுபடும் கொக்கா கோலா நிறுவன தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்று கேட்ட போது கொலம்பியா அரசாங்கம் பாதுகாப்பை வழங்க மறுத்து வருகிறது கொலம்பியாவில் அமெரிக்க

தொடர்ச்சி 8ம் பக்கம்...

www.padippakam.com



# அதிகாரப் போட்டியில் ஐயாவும் அம்மையாரும்

அ. பூபதி

ஒரு வருட இடைவெளியில் ஏற்கனவே இரண்டு தேர்தல்கள் இடம்பெற்றன. அவ்வாறே இந்த வருட முடிவிலும் தேர்தல் ஒன்று நடைபெறக் கூடிய நிலைமையை நோக்கி அரசியல் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு அடிக்கடி தேர்தல் நடாத்தப்படுவது மக்களின் நலன்களுக்காகவோ அன்றி ஜனநாயகம் பாதுகாக்கப்படுவதற்காகவோ அல்ல. இரண்டு கட்சிகளுக்கிடையிலான ஆளும் வர்க்க அதிகாரப் போட்டி காரணமாகவேதான் நடைபெறுகிறது.

இலங்கையின் வடிகட்டிய பிற்போக்குவாதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த அரசியலமைப்பு முறையானது பாராளுமன்றத்திற்கும் அப்பால் நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதியிடம் ஒப்படைத்துக் கொண்டது. தனிக் கட்சி தனிநபர் சர்வாதிகாரம் நிலைக்கும் என்றும் அது தமது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடம் தொடர்ந்து இருக்குமென்றே அன்று ஜே.ஆர். தப்புக் கணக்குடன் அரசியலமைப்பை கொண்டு வந்தார். ஆனால் அது பிழைத்து விட்டது. ஜே.ஆர். விதைத்தவற்றை அவரது மருமகனான ரணில் விக்கிரமசிங்கா அறுக்க முற்பட்டு அவதிப்படுகின்றார்.

இன்று ரணில் பாராளுமன்றத்தின் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நின்று கொண்டு எதனையும் முழுமையாக நிறைவேற்ற முடியாது திண்டாடுகின்றார். காரணம் நிறைவேற்று அதிகார பீடத்தில் எதிர்க்கட்சியின் ஜனாதிபதியாக சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க இருந்து வருகின்றார். இவ்வாறு பாராளுமன்ற அதிகாரம் ஐயாவின் கைகளிலும் நிறைவேற்று அதிகாரம் அம்மையாரின் கைகளிலும் இருப்பதனால் இரு தரப்புக்குமிடையே கடுமையான அதிகாரப் போட்டி வலுவடைந்து வருகின்றது.

அன்று பாராளுமன்றத்திடம் இருந்து வந்த அதிகாரங்களைப் பறித்து ஜனாதிபதி என்ற தனிமனிதரிடம் ஒப்படைத்த அரசியலமைப்புக்கு ரணில் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியினரே முன் நின்றனர். இன்றோ தமக்கு வாய்ப்பும் வசதியும் இல்லாத நிலையில் ஜனாதிபதி தனது அதிகாரங்களை மீளவும் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை எப்பொழுதும் தாம் நினைத்தவாறு அதிகாரம் தமது கைகளில் இருக்க வேண்டும் என்பதுதான். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கா வெற்றி பெற்றிருந்தால் மனமுவந்து ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைக் குறைத்து அவற்றைப் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்க முன் வந்திருப்பாரா? நிச்சயம் அவ்வாறு நடைபெற்றிருக்கமாட்டாது. ஏனெனில் சந்திரிகா அம்மையாரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பதாகக் கூறியே பதவிக்கு வந்தார். ஆனால் அவர் அவ்வாறு செய்து கொள்ள ஒருபோதும் முன் வந்ததில்லை.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் ரணிலும் ஜனாதிபதி



தனது அதிகாரங்களை விட்டுத் தர வேண்டுமென வற்புறுத்துகின்றார்கள். அல்லாதுவிடில், தேர்தல் ஒன்றுக்குச் சென்று பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று ஜனாதிபதியை அகற்றப் போவதாகவும் கூறி வருகின்றனர்.

பதிலுக்கு ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தனது அதிகாரங்கள் எதையும் விட்டுத் தரப்போவதில்லை என்பதுடன் நாட்டு நலன் கருதி அவற்றைப் பயன்படுத்தப் போவதாகவும் தெரிவித்து வருகின்றார். இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் நிறைவேற்றி வரும் சட்ட மூலங்களின் நடைமுறைக்கு தடைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அது மட்டுமன்றி அமைச்சரவைக்கும் ஜனாதிபதியே தலைமை தாங்க வேண்டியவராகவும் இருந்து வருகின்றார்.

இந்நிலையில் ஐயா ரணிலுக்கும் அம்மையார் சந்திரிகாவுக்குமிடையிலான அதிகாரப்போட்டி உச்ச நிலையை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கின்றது. இத்தகைய அதிகாரப்போட்டி என்பது முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி அதிகாரத்தின் கீழ் புதுமையானதொன்றல்ல.

## மாமனார் விதைத்துச் சென்றார் மருமகனார் அவஸ்தைப் படுகிறார்!

ஏற்கனவே இருந்து வந்த அரசியலமைப்பின் கீழ் அமைதியாகத் தமது ஆளும் வர்க்க அதிகாரத்தை முன்னெடுக்க முடியாத நிலையிலேயே ஜே.ஆர். புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையினைக் கொண்டு வந்தார். அதுவும் தற்போது நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பது மட்டுமன்றி அதன் இயலாமையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இவ் அரசியலமைப்பு தனது இருபத்தி நான்கு வருட ஆயுளில் பதினேழு திருத்தங்களைச் சேர்த்திருக்கின்றது. இன்று ரணில் கோருவது மேலும் திருத்தங்களையே ஆகும். ஆனால் அதற்குரிய மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவரிடத்தில் இல்லாததன் காரணமாகவே பொதுத் தேர்தல் பற்றிய சிந்தனைக்கு வந்துள்ளார்.

உண்மையாகவே இன்று நடைபெற்று வரும் அதிகாரப்போட்டியும் அதற்கு காரணமான அரசியலமைப்பும் இலங்கையின் ஏகப் பெரும்பான்மையான மக்கள் நலன் சார்ந்த ஒன்றல்ல. அடிப்படையில் இந்நாட்டின் சொத்து, சுகம் படைத்த சுரண்டும் உயர் வர்க்க சக்திகளின் தேவைக்கும் பாதுகாப்பிற்குமே இன்றைய அரசியலமைப்பு சேவையாற்றுகிறது. அதன் கீழ் எவர் ஆட்சிக்கு வந்தாலும் எவர் நிறைவேற்று அதிகாரம் படைத்த ஜனாதிபதியாக இருந்தாலும் ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் எவ்வித பயனும் ஏற்பட்டதில்லை. இனி மேலும் எதுவும் ஆகப் போவதில்லை.

இதே அரசியலமைப்பின் கீழ்தான் ஐக்கிய தேசியக் கட்சி பதினேழு வருட கால இருண்ட ஆட்சியை நடாத்தியது. அக்காலக் கொடுமைகள் எழுத்தில்,



பேச்சில் அடக்க முடியாதவை. அதன் காரணமாகவே பொதுசன ஐக்கிய முன்னணியும் சந்திரிகாவும் இரட்சகர்கள் போன்று வேடமணிந்து பதவிக்கு வந்தனர். யுத்தம் உக்கிரமாகி நாடு பொருளாதார நாசங்களைக் கண்டது. மக்களது அன்றாட வாழ்க்கையை யுத்தம் ஒரு புறத்தாலும், பொருளாதார நெருக்கடிகள் மறு புறத்தாலும் அமுக்கி பாழாக்கி வந்தன.

அன்று ஜே.ஆர். தொடக்கி வைத்த தாராள பொருளாதார கொள்கையும் தனியார் மயமும் தடைகள் எதுவுமின்றி முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இதனால் பொருளாதாரப் பின்னடைவுகளும் மக்கள் மீதான சுமைகளும் அதிகரித்த போதும் பொதுசன ஐக்கிய முன்னணியும் சந்திரிகா அம்மையாரும் மாற்று வழிகள் தெரியாது அந்நிய ஏகாதிபத்திய சக்திகளிடம் மீண்டும் மீண்டும் சரணடைந்தே வந்தனர். யுத்தத்தை உக்கிரப்படுத்தி அதனையே காரணம் காட்டி தமது பொருளாதாரத் தோல்விகளை மறைத்துக் கொண்டனர்.

யுத்தத்தின் இருபது வருடத் தொடர்ச்சியாலும் பொருளாதார வீழ்ச்சியாலும் விரக்தியடைந்த மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் பதவிக்கு கொண்டு வந்தனர். ஒரு தற்காலிக யுத்த நிறுத்த-சமாதானச் சூழல் நிலவுகின்ற ஒன்றைத் தவிர வேறு எவ்வித மாற்றங்களும் இடம்பெறவில்லை.

நாடு முற்று முழுதாக அந்நிய சக்திகளுக்கு தாரை வார்க்கப்படும் ஒப்பந்தங்கள் பல ஒப்பமிடப்பட்டுள்ளன. உலக மயமாதலின் சகல நச்சுத்தனங்களும் வாரி அணைக்கப்படுகின்றன. இன்றைய சாதாரண தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் பாரிய விலை ஏற்றங்கள், கட்டண உயர்வுகளால் கடுமையான பாதிப்புகளை எதிர் நோக்கி நிற்கின்றனர். அவர்களுக்கு ஐயாவும் அம்மையாரும் மல்லாடும் அதிகாரப் போட்டியால் எவ்வித பயனும் ஏற்பட மாட்டாது.

அடிப்படையில் இலங்கையின் ஆளும் வர்க்க குடும்பங்கள் இரண்டினதும் வாரிசுகளாகவே ஐயா ரணிலும் அம்மையார் சந்திரிகாவும் நிற்கின்றனர். இவர்களது குடும்ப ஆளும் வர்க்க அதிகாரப்போட்டியில் பெருமுதலாளிகள், அந்நிய ஆதிக்க சக்திகள், தத்தமது பணப்பைகளை நிரப்பிக் கொள்வோர், பதவி அந்தஸ்து தேடுவோர் இருபுறமும் மும்முரமாகி நிற்கின்றனர்.

ஆனால் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் அனைத்து மக்களும் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையின் சுமைகளையே சுமந்து வருகின்றனர். எனவே மக்கள் இந்த அதிகாரப்போட்டியின் உள்ளார்ந்தங்களை விளங்கிக் கொண்டு தமக்கான ஒரு தெளிவுடைய அரசியல் பாதையில் சிந்திக்கவும் வழி நடக்கவும் முன் வரல் வேண்டும். இல்லாதுவிடின் மக்களுக்கு விடுதலையும் விமோசனமும் கிடைக்க மாட்டாது.

---

# யூ.என்.பி. அமைச்சர்களின் பஞ்சப் பாட்டு!

**வர்த்தக சமூகத்திற்கு வரிச்சலுகை**
**வசதியானோருக்கு வருமான வரி விலக்கு**
**கம்பனிகளுக்கு வரிச் சலுகை**
**கறுப்புப் பணத்திற்கு சட்ட விடுவிப்பு**
**ஊழல்காரர்களுக்கு கைகொடுப்பு**
**இன்னும்.... இன்னும்......**

சிறி

வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க சகல விதமான விலைவாசி உயர்வுக்கும் கடந்த அரசின் ஏழாண்டு ஆட்சியே காரணம் என்று கூறி சில புள்ளி விபரங்களை வெளியிட்டு தனது கூற்றுக்கு ஆதாரம் தேடினார். 17 வருட காலம் ஆட்சி செய்த யூஎன்.பி. 1994ல் என்னத்தை விட்டுச் சென்றது என்று பார்த்தால் பொதுக்கடனானது மொத்த தேசிய உற்பத்தியின் 91மூ என அமைச்சரே தெரிவித்துள்ளார். பொதுசன ஐக்கிய முன்னணியினர் ஏழு வருட ஆட்சியில் முழு அளவில் யுத்தத்தை நடாத்தி பொதுக்கடனை 103வீதமாக்கி யூஎன்.பியிடம் ஒப்படைத்துள்ளனர். மாறிமாறி வந்த இரண்டு அரசாங்கமும் நாட்டு மக்களையும்-முழு நாட்டையும் கடனாளியாக்கிவிட்டனர் என்பதே உண்மை. இரண்டு ஆட்சியாளராலும் நாட்டின் பொருளாதாரத்தை மக்களுக்குப் பயன்தரும் ஒன்றாகக் கட்டியெழுப்ப முடியாது என்பதே உண்மை. தங்கள் கையாலாகாத் தன்மையை மறைக்க ஒருவரை யொருவர் திட்டித் தீர்த்த வண்ணம் உள்ளனர்.

யூஎன்.பி. ஆட்சி பீடமேறினால் நாடு செழிப்படையும்-வியாபாரம் விருத்தியடையும் எனக் கனவு கண்டிருந்த வர்த்தக சமூகம் இன்று புறுபுறுக்கத் தொடங்கிவிட்டது. ஆனால் பகிரங்கமாக அரசை விமர்சிக்க அவர்கள் தயாராயில்லை. இந்த அரசு பதவிக்கு வந்து முழுமையாக ஆறு மாதங்கள் முடிவடைந்த நிலையில் மின் கட்டணம், நீர், எரிபொருள் விலையேற்றம், வீட்டுப் பாவனைக்கான காஸ் விலை அதிகரிப்பு, தனியார் போக்குவரத்து பஸ் கட்டண அதிகரிப்பு, அன்றாடப் பாவனைப் பொருட்களின் விலையேற்றம் என்பவற்றையே மக்கள் அனுபவிக்கின்றனர். அம்மா ஆட்சியில் இருந்த விலையிலும் பார்க்க ஐயாவின் ஆட்சியில் மேலும் அதிகரித்துள்ளது. இந்த ஆறு மாதத்தில் எந்தவொரு பொருளினதும் விலை குறையவில்லை என்பதே கசப்பான உண்மை.

இன்று யுத்தம் நடைபெறாத போதும் சென்ற ஆண்டில் ஒதுக்கிய தொகையையே இந்த ஆண்டிற்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வீண் விரயம் என்பது அம்மாவுக்கு ஐயா சளைத்தவரல்ல. விமானப் படைத் தளபதி-இராஜினாமாச் செய்த-விருந்தின் பின் வரும் வழியில் லொறியுடன் மோதி ஒருவர் இறக்க காரணமாயிருந்த சம்பவத்தில் அவர் "உத்தியோக அலுவல்கள்" நிமித்தம் சென்று கொண்டிருந்ததாக கூறியிருந்தார். நாடு சீரழிந்த நிலையிலும் அரசின் உயர் பதவிகளில் இருப்பவர்கள் தாராளமாக அரச வசதிகளைப் பயன்படுத்துவதுமல்லாமல் வீண் விரயமும் செய்கின்றனர்.

அமைச்சர் ரவி கருணாநாயக்க வேறு ஒரு விடயத்தையும் அண்மையில் பேட்டியின்போது குறிப்பிட்டார். மற்ற அமைச்சர்களின் கவனக்குறைவால் ஏற்படும் விளைவுகளுக்கும் தாமே பொறுப்பேற்க வேண்டுமென்றார். அதாவது தான் மட்டுமே அர்ப்பணிப்புடன் பெரும் கஷ்டங்களின் மத்தியிலும் சிறப்பாக செயற்படுகின்றார் என்ற தொனியில் குறிப்பிட்டிருந்தார்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்க அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை பற்றி நிதி அமைச்சர் கே.என்.சொக்சி நாட்டு மக்களுக்கு யூலை 7ம் திகதி ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவர் உடனடியாக விலைக்குறைப்பை அறிவிக்கவில்லை. காலப்போக்கில் குறையுமென்றும் சகல விலை அதிகரிப்பிற்கும் ஏழாண்டு ஆட்சியே காரணம் என்றும் நிதி அமைச்சர் கூறினார். வாழ்க்கைச் செலவு கூடியதன் காரணமாகவே ஏழாண்டு ஆட்சி முடிவுக்கு வந்தது. இதைப் பிரதமர், வர்த்தக அமைச்சர், நிதி அமைச்சர் விசேட ஒலிபரப்பின் மூலம்-ஆறு மாதங்களின் பின்-நாட்டு மக்களுக்கு வெளியிட வேண்டிய தேவையில்லை. ஏனெனில் அக்கு வேறு ஆணி வேறாக தேர்தல் பிரசாரத்தின் போது இவை வெளியிடப்பட்டுவிட்டன. மக்கள் வேண்டுவதெல்லாம் விலைக் குறைப்பேயன்றி விலைகூடியதற்கான காரணமல்ல.

நிதி அமைச்சர் தனது உரையில் அரசாங்கத்தின் வருமானம் வீழ்ச்சியடைந்ததைக் குறிப்பிட்டுள்ளார். வருமானம் ஏன் குறைந்தது என்பதற்கான உண்மைக் காரணத்தை அவர் கூறவில்லை. வர்த்தக சமூகத்திற்கு வரிச் சலுகை, கம்பெனிகளுக்கு வரிச் சலுகை, கறுப்புப் பணத்திற்கு சட்டத்தின் பிடியிலிருந்து விடுவிப்பு, இலாபத்தில் இயங்கிய நிறுவனங்களை தனியார் மயமாக்கியது போன்ற நடவடிக்கைகளாலேயே அரசாங்கத்திற்கு வருமானம் குறைந்தது. இலாபத்தில் இயங்கி வந்த அரச நிறுவனங்களை அரசியல் கட்சிகளின் நியமனங்களால் அவை நட்டமேற்பட யூஎன்.பி.யும், பொதுசன முன்னணியுமே காரணம். தேவைக்கு அதிகமானவர்களையும், திறமையற்றவர்களையும், ஊழல்காரர்களையும் அரச நிறுவனங்களில் நியமித்து அவற்றை நாசமாக்கியவர்கள் இவ்விரு கட்சியினருமேயாவர்.

இதன் காரணமாகத்தான் அரச நிறுவனங்கள் நட்டமடைந்தன, ஊழல்கள் மலிந்தன, திறன் குறைந்துள்ளது, வருமானம் குறைந்து காணப்படுகின்றது. கட்சியின் மேல் மட்டத்தவருக்கும் ஏப்பமிடுவோருக்கும் எதுவித விதி முறையுமின்றி கடன்களை வழங்கி-வங்கிகளை நிதிப் பற்றாக்குறைக்குத் தள்ளினர். இன்றுவரை அரச வங்கிகளில் கடன் பெற்று அவற்றைச் செலுத்தத் தவறியவர்களின் முழு விபரத்தையும் நிதி அமைச்சர் நாட்டு மக்களுக்குத் தருவாரா? அதைச் செய்யாமல் ஏழு ஆண்டு ஊழல் பற்றி மட்டும் பேசுவதில் அர்த்தமில்லை.

உலக வங்கி மற்றும் வெளிநாட்டுக் கடன்களை மீளப் பெறும் போது அதன் நிபந்தனைகளை மக்களுக்கு நிதி அமைச்சர் பகிரங்கப்படுத்துவாரா? பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானபோது இருந்த சொத்தையும் அவர்களுக்கு இன்று இருக்கும் சொத்துக்களையும் மக்கள் முன் வைப்பார்களா?

தொடர்ச்சி 11ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (5)

வீரகேசரி இந்திய வம்சாவழி முதலாளி மாருடைய மூலதனத்துடன் தொடங்கப் பட்ட ஒரு பத்திரிகை. பெரும்பாலான பத்திரிகை முதலாளிகள் போல விற்பனை, விளம்பர வருமானம்–லாபம் என்கிற இலக்குகளுக்கு அப்பால் சமுதாய மாற்றம் பற்றிய அக்கறை இல்லாத ஒரு பத்திரிகையாகவே வீரகேசரி இருந்து வந்தது. வீரகேசரி வளர்ச்சி பெற்ற காலம் தமிழில் வாசிப்புப் பழக்கம் அதிகமான காலமாகும். பரபரப் புச் செய்திகளைப் போட்டு விற்பனை யை வளர்க்கும் மரபு உருவாகாத காலமாக இருந்ததால், செய்திகளும் செய்தித் தலைப்புகளும், அன்றைய சூழலில் தினகரனுக்கும் வீரகேசரிக்கும் இடையில் இருந்த கடும் போட்டியின் நடுவிலும், மிக நிதானமாகவே இருந்து வந்தன. வீரகேசரி வணிக விளம்பரங் களை நம்பியிருந்த சூழலில் அதன் நலன்கள் அந்த விளம்பரங்களை வழங்கு வோரின் நல்லெண்ணத்தையும் சார்ந்தே இருந்தன. அதனைவிட வீரகேசரி நிறுவனமே முதலாளிய நலன் சார்ந்த நிறுவனம் என்பதும் அதன் செய்தி வெளியீட்டுக் கொள்கையை இடதுசாரிகட்கு விரோதமாக வைத்திரு ந்ததில் வியப்பில்லை. எவ்வாறாயினும்ஒரு நடுநிலையான தன்மையைக் காட்டும் விதமாக எல்லாத் தரப்புச் செய்திகளை யும் வெளியிடுகிற ஒரு தோற்றம் பேணப்பட்டது.

வீரகேசரி நிறுவனத்துக்கு மலையகத் தில் ஒரு தளம் இருந்தது. வடக்கிலும் கிழக்கிலும் தினகரனே முன்னால் நின்றது. வீரகேசரியின் செய்தி வெளியீட்டுக் கொள்கை மலையகத்தில் தொண்டமான் தலைமையை பாது காக்கும் முறையிலேயே அன்று முதல் இன்றுவரை அமைந்திருப்பதை யாரும் மறுக்க விட முடியாது. தமிழ்த்தேசியவாதம் பற்றி வீரகேசரிக்கு என்ன கொள்கை இருந்து வந்தாலும் அரசாங்கங்களைப் பகைப்பது பற்றிய கவனம் வீரகேசரிக்கு மிகுதியாகவே இருந்தது. சத்தியாக்கிர கப் போராட்டக் காலத்தில் வீரகேசரி சத்தியாக்கிரகம் பற்றிய செய்திகளைத் தினகரனை விடச் சிறிது அதிகமாகத் தமிழரசுக்கட்சிக்குச் சாதகமாக வெளியிட்டது. இந்தக் காலத்தின் பின் வீரகேசரியின் விற்பனை வடக்கிலும் கிழக்கிலும் சிறிது வளர்ந்தது.

வீரகேசரியின் விற்பனையின் வளர்ச்சிக் குத் தமிழ்ப் பத்திரிகை வாசிப்பின் பரவலாக்கம் ஒரு காரணம் என்றோ. அந்த வளர்ச்சியிலோ வாசிப்பின் தரத்தின் வளர்ச்சியிலோ வீரகேசரிக்கு முன்னோடியான பங்கு இருந்ததாகக் கூற முடியாது. சிங்களப் பேரினவாத யூஎன்.பி., முதலாளிக்குச் சொந்தமான லேக்ஹவுஸ் நிறுவனம் தினகரன் ஆசிரியர் என்ற வகையில் கைலாசபதி யின் நடவடிக்கைகளில் குறுக்கிடாத தற்கு, தினகரனின் விற்பனையின் வளர்ச்சிக்கு அவரது பங்களிப்பு ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம். எனினும் இந்தவாறான வரையறுக்கப் பட்ட ஆசிரிய சுதந்திரம் பின்னரும் தொடர்ந்தது. இவ்வாறான சுதந்திரம், லேக்ஹவுசை விட மோசமான பச்சை யான சிங்களப் பேரினவாத நிறுவன மான எம்.டி.குணசேனவின் 'தவஸ' பத்திரிகை நிறுவனத்தின் தமிழ் ஏட்டிற்கும் இருந்தது. இதனாலேயே சுதந்திரனில் இருந்த எஸ்.டி.சிவநாயகம் தமிழரசுத் தலைமையுடன் பகைத்துக் கொண்டு வெளியேறி வீரகேசரியில் நிலைக்க முடியாமல் தினபதியை நாடினார்.

கோரிக்கைகளையோ போராட்டங் களையோ பற்றிய நியாயத்தை உலகறியச் செய்வது அரச கட்டுப்பாட்டி லிருந்த தினகரனுக்கு இயலாதிருக் கலாம். சுயாதீனமான ஏடான வீரகேசரி யால் இயலாமற் போனது ஏன்?

ஆங்கில ஏடுகளில் வரக்கூடிய தகவல் கட்கும் மேலாக வீரகேசரி எதையும் வெளியிட்டது என்று கூறுவது கடினம். வட பிரதேசப் பத்திரிகையான ஈழநாடு தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைகளை தேசிய வாதக் கண்ணோட்டத்துடனும், துணிவாக எடுத்துக் கூறியதாலேயே, அதன் அச்சகம் தாக்கப்பட்டு அச்சியந்திரத்தினுள் ஆயுதப்படைகள் மண் கொட்டினர். வியாபாரத்துக்குப் பங்கமின்றி நடப்பதில் வீரகேசரி எப் போதும் போல் கவனமாகவே இருந்து கொண்டது.

வீரகேசரியாலும் தினகரனாலும் இட்டு நிரப்ப முடியாது போன ஒரு இடை வெளியை என்.ஜி.ஓ. நிறுவனமான 'மேர்ஜ்' தனதாக்கும் முயற்சியில் 'சரிநிகர்' என்ற ஏட்டை வெளியிட முன்வந்தது. இத்தகைய ஒரு ஏடு தலை தூக்கிய சூழலில் சனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான குரல்கள் தெற்கில் வலுப்பெறத் தொடங்கிவிட்டன என்பதும் கவனிக்கத்தக்கது. 1994க்குப் பின்பு, முந்திய 17 வருடக் கெடுபிடிகள் சிறிது தளர்வான போதுங் கூட வீரகேசரி தன் 'கவனமான' நடத்தை யைக் கைவிடவில்லை என்பதற்கு, மூன்று ஆண்டுகள் முன்னம் அதன் வன்னி நிருபர் 'புலி' என்ற பேரில் பொலிசாரால் பிடித்து வைக்கப்பட்ட போது நிருவாகமோ ஆசிரியப் பீடமோ அதை எதிர்த்துத் தன் சுட்டு விரலையேனும் அசைக்கவில்லை என்பதே ஒரு நல்ல சான்றாகும்.

பக்கங்களை நிறைக்கின்றன. மக்களுக் குப் பகுத்தறிவையோ, விஞ்ஞான அறிவையோ சமகால உலகம் பற்றிய முழுமையான சமூக அறிவையோ வழங்குவதில் வீரகேசரிக்கு அக்கறை இல்லை என்பது போக, அதன் இலக்கி யப் பக்கங்களும் சமூக அக்கறையற்ற பழமைவாத நோக்குகளையே அதிகம் ஆதரிப்பதைக் காணலாம்.

வீரகேசரியில் உலக நடப்புப் பற்றி எழுதுகிறவர் முன்னர் ஒரு இடதுசாரி ஆதரவாளர் என்று சொல்லப்படு கின்றது. வாராவாரம் அவர் எழுதுவ தெல்லாம் இந்திய மேலாதிக்க ஆதரவான சிந்தனைகளை மட்டுமே தான். இந்திய அணுகுண்டைப் பாராட்டும் அதே பத்தியில் அவர் பின்பு பாகிஸ்தான் அணுகுண்டை வன்மை யாகக் கண்டிப்பார். இந்துத்துவம் இன்று நடத்துகிற வெறியாட்டத்தை விமர்சிக்காமல் பாரதிய ஜனதாக் கட்சியில் உள்ள "நிதானமான" பேர்வழிகளுக்கு வக்காலத்து வாங்குவார். வீரகேசரியின் உலகச் செய்தி விமர்சனம் இந்திய மேலாதிக்கத்தின் நலனை முன் நிறுத்தி எழுதுவது ஏன்? இது வெறும் வணிக நோக்கிற்கு அப்பாலானதும் ஆகும்.

இன்று வீரகேசரிக்குப் போட்டியாகத் தினக்குரல் தலையெடுத்துள்ள போது, தமிழ்த் தேசியவாதத்தை தனக்கு வசதியாகப் பாவிக்க வீரகேசரி முன்வந்துள்ளது. இந்தப் புதிய அக்கறை வெறுமனே தமிழ் மக்களது உணர்வு களை நாடி பிடித்துப் பார்த்து நடக்கிற ஒரு வணிக நோக்கின் வெளிப்பாடே ஒழிய வேறெதுவுமில்லை. தமிழ்மாறன் என்கிற ஒரு உதிரிப் புத்திசீவியை வைத்து எழுதுகிற பத்திகளின் தொடர்பாக நடந்த விவாதம் பலருக்கு நினைவிருக்கலாம். எவ்விதமாகச் சில கண்டனங்கள்காலந்தாழ்த்தி வெளியிடப் பட்டன என்பது பற்றி மட்டுமே பலர் அறிவார்கள். ஒரு முக்கியமான கட்டுரை வெளியிடப்படவில்லை. இதனாலேயே புதியபூமியில் இ.தம்பையா தமிழ்மாறனின் பத்தி பற்றி அண்மையில் எழுத நேர்ந்தது.

யூஎன்.பிக்கு கொடுக்கிற முக்கியத் துவத்தை தொடர்ந்தும் தமிழ்க் கட்சிகளுக்கு வீரகேசரி கொடுத்து வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றியும் தமிழ் மக்களின் கோரிக்கை பற்றியும் வெளிவரும் செய்திகள் வீரகேசரியின் முதலாளித் துவ, வர்த்தக நலன்களுக்குட் பட்டவையே.

வீரகேசரி இதுவரை உறுதியாகக் கடைப்பிடித்து வந்த ஒரு அரசியல் நிலைப்பாடு என்று ஒன்று இருந்தால் அது இடதுசாரி எதிர்ப்பு மட்டுமேதான். அண்மையில் புதிய ஜனநாயகக் கட்சியின் ஒரு அறிக்கை அதில் அமெரிக்க – இலங்கை அரசாங்கங் களைக் கண்டித்து எழுதப்பட்ட போதும், "டெய்லி நியூஸ்" ஏட்டிற் பிரசுரமானது. ஆனால் வீரகேசரியோ அதை அப்படியே இருட்டடிப்புச் செய்தது. புதிய ஜனநாயகக் கட்சியே இன்று இலங்கையில் உள்ள அதி முக்கியமான மார்க்சிச லெனினிசக் கட்சி என்பதை யும் வீரகேசரி புதிய ஜனநாயகக் கட்சியின் செய்திகளைக் கவனமாகக் குறைத்தும் மறைத்தும் வருவதையும் யாரும் பிரித்துப் பார்க்க முடியுமா?

## வீரகேசரி முதலாளிய நலன்களின் பாதுகாவலன் யூ.என்.பி.யின் விசுவாச நண்பன்

வீரகேசரி ஒரு வணிக நிறுவனம் மட்டுமே என்பதற்கு அதன் 'இலக்கியப் பகுதியில்' பங்கு பற்றி வீரகேசரி ஆதரவில் நூல்களை வெளியிட்ட எத்தனையோ இலக்கியவாதிகள் சாட்சி கூறியுள்ளார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு தினகரனில் தரமான இலக்கியம் பற்றிய அக்கறை கைலாசபதி விட்டுச் சென்ற பிறகும் நீண்ட காலமாகத் தொடர்ந்ததோ அதற்கு எதிர்மாறான போக்கு வீரகேசரியின் இலக்கியப் பக்கங்களிலும் நூல் வெளியீட்டிலும் காணப்பட்டது.

தமிழ் மக்கள் மீதான படுமோசமான பயங்கரவாதமும் அடக்குமுறையும் கட்டவிழ்த்து விடப்பட்ட காலங்களிலும் வீரகேசரி மௌனம் காத்தது. இதற்கான காரணம் வீரகேசரியின் அனுதாபமின்மை என்பதை விடத் தனது வணிக நலன்கள் மீதான அக்கறை என்பது பொருந்தும். 1977–1994 வரையிலான யூ.என்.பி.யின் இருண்டகால மக்கள் விரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதில் வீரகேசரி நிறுவனம் நேர்மையாக யூஎன்.பி. எதிர் நிலைப்பாட்டை எடுத்தது என்று கூற முடியாது. 1983ற்கு பிறகு தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்குமுறை உட்பட சகல விடயங்களை தவிர்க்க முடியாமல் வெளியிட வேண்டியிருந்தது. அங்கு பத்திரிகையாளர்களாக கடமையாற்றியவர்களின் தனிப்பட்ட அர்ப்பணிப்பு, நேர்மை காரணமாகவே அவ்விடயங்கள் தொடர்ந்து அம்பலப் படுத்தப்பட்டன எனலாம். சிங்கள, ஆங்கில ஏடுகள் யாவும் அரச தரப்பி லிருந்து பேரினவாத நியாயத்தை வற்புறுத்திய போதும் தமிழ் மக்களுடைய

இன்று ஞாயிறு வீரகேசரி அயல்நாடு களில், குறிப்பாக ஐரோப்பாவிலும் கனடா விலும், நன்கு விற்பனையாகக் காரணம், செய்திகள் அல்ல. மரண அறிவித்தல் கள், வாழ்த்து மடல்கள், நினைவுகூரல் கள் போன்ற விளம்பரங்களால் நல்ல வருமானம் கிடைப்பதுடன் இவற்றை வாசிக்கவே ஒரு வகைச் சனக்கூட்டம் இருப்பதும் தான். இதைவிட ஆன்மீகம் என்ற பேரில் சமுதாயத்துக்குப் பயனற்ற புனைவுகள் பரபரப்பூட்டும் செய்திகளின் பாணியில் வருவதும் பிற கிளுகிளுப் பூட்டும் செய்திகளும் வீரகேசரியின்

இடதுசாரிகள் எழுதும் எதுவும் இ.தொ.கா. அரசியலுக்கு ஏதாவது உதவும் என்று நினைத்தால் மட்டும் அதற்கு வீரகேசரி இடம் தரும் என்பது என்னவோ உண்மை. தற்போது சந்திரசேகரனின் அறிக்கைகளுக்கும் போதுமான இடம் கொடுக்கப்படுகிறது.

வீரகேசரியில் எத்தனையோ முன்னாள் முற்போக்காளர்களும் இன்னமும் முற்போக்கு முகங் காட்டுகிறவர்களும் உள்ளனர். இவர்களது ஆற்றல் வீரகேசரிக்குத் தேவை. ஆனால் இவர்களுக்கு வீரகேசரி தரும் ஊதியம் அதைவிட அதிகம் தேவை என்பது போல எசமான விசுவாசத்துடன் பல தவறான நடவடிக்கைகளுக்குப் பணிந்தும் கண்டும் காணாமலும் நடந்து கொள்வது மிகவும் மனம் வருந்தச் செய்கிற காரியமே. அத்துடன் சிலர் வீரகேசரியில் பத்திரிகையாளர்கள் என்ற பண்பாட்டிற்குட்படாமல் இடதுசாரி களுக்கு எதிரான வக்கிரத்திற்கும், தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளுக்கும் ஆட்பட்டு தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற் குட்பட்டு நடந்து கொள்வதாலும் ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழ்நிலையில் "சாத்தியமான பத்திரிகை தர்மத்தை" கூட கொலை செய்து வருகின்றனர்.

## நடுநிலை என்பது சுத்த ஏமாற்று!

எப்படியிருந்தாலும் வீரகேசரி போல ஒரு ஏட்டிலிருந்து சமூக நீதிக்காகப் போராடுகிறவர்கள் அதிகம் எதிர்பார்க்க முடியாது. தமிழ்ப் பெருமுதலாளிகள் ஐவரின் மூலதனத்துடன் சுரண்டலுக் காகவும் முதலாளிய அமைப்பைப் பாதுகாக்கவும் ஆளும் வர்க்கத்தைப் பேணவும் நடாத்தப்படும் தமிழ்ப் பத்திரிகையே வீரகேசரியாகும். இத்தகைய வீரகேசரியின் போலியான 'நடுநிலை' பற்றித் தமிழ் மக்கள் எச்சரிக்கப்பட வேண்டும் என்பதில் மறுவார்த்தைக்கு இடமில்லை.

---

## பெண்களின் உழைப்பை உறிஞ்சி எடுக்க புதிய சட்டமூலம்

உலகமயமாதலின் கீழ் பல்தேசிய நிறுவனங்களும் பெரும் முதலாளிகளும் தமது சுரண்டலை விரிவுபடுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக யூஎன்.பி. அரசாங்கம் மேலும் பல சட்டங்களைக் கொண்டு வரவுள்ளது. அதில் ஒன்றாகவே பெண்களுக்கு கட்டாய மேலதிக வேலை ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு மணி நேரமாக இருக்க வேண்டும் என்ற சட்டத் திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறது. ஏற்கனவே இருந்து வரும் தொழிற்சாலைச் சட்டத்தின்படி ஒரு பெண் உழைப்பாளி க்கு வருடமொன்றிற்கு 60 மணி நேர மேலதிக வேலை என்பதாக மட்டுமே இருந்து வந்தது. ஆனால் இப்போது புதிய சட்டத்தின்படி ஒரு மாதத்திற்கு குறைந்தது 60 மணி நேர மேலதிக வேலை கட்டாயமாகச் செய்ய வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது. இதனை மறுத்தால் அது வேலை நீக்கத்திற்கும் காரணமாகலாம்.

பெண்களுக்கு கட்டாய மேலதிக வேலை நேரத்தைக் கூட்டுவதென்பது பெண் உழைப்பாளர்களின் உழைப்பை கடுமையாக சுரண்டுவதற்கேயாகும். இன்று பல்தேசியக் கம்பனிகளில் குறிப்பாக சுதந்திர வர்த்தக வலய தொழிற்சாலைகளில் பெண்களே பெரு மளவில் வேலை செய்து வருகிறார்கள். மிக குறைந்த சம்பளத்தில் வேலை செய்யும் பெண்களில் பெரும் பங்கினர் இளம் யுவதிகளாகும். கிராமப் புறங்களில் இருந்து வந்து தொழிற்சாலைகளுக்கு அண்மையாக மோசமான வசிப்பிடங் களில் வாழ்ந்து கொண்டே இவர்கள் தொழில் புரிகின்றனர். இவர்களில் எட்டு மணி நேரத்திற்கு அப்பாலும் கட்டாய வேலை வாங்குவதற்கு முதலாளிகள் விரும்பியதாலேயே அரசாங்கம் மேற்படி சட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்திருக் கிறது.

இச்சட்டமூலம் உலக மயமாதலின் கீழ் காலத்தின் தேவையென விளக்கமளித் துள்ள தொழில் அமைச்சர் இக் கட்டாய மேலதிக வேலையால் உற்பத்தி கூடும் என்றும் பெண்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்றும் காரணம் கூறி இருக்கிறார். உற்பத்தி கூடுவதால் நமது நாட்டிற்கோ மக்களுக் கோ எவ்வித பயனும் வரமாட்டாது. அந்நியக் கம்பெனிகள் அதன் சகல பயன்பாடுகளையும் அபரீதமான லாபத்தையும் எடுத்துச் சென்று வருகின்றன. தொழிலாளர்களுக்கு மேலதிக நேர வேலைக்கு வழங்கப்படும் சம்பளம் என்பது கூட மிக மிக அர்ப்பமானதாகும்.

இன்று வர்த்தக வலய தொழிற்சாலை களில் பெண்களுக்கு குறைந்த சம்பள மும் அடிப்டை வசதிகள் அற்ற நிலையும் காணப்படுகின்றது. சலம் கழிக்கப் போவதற்குக் கூட கார்ட் முறை வைத்து நேரம் கணிக்கப்படுகின்றது. எவ்வித தொழிற்சங்க நடவடிக்கை களையும் மேற்கொள்ள முடியாது. சுகாதார மற்றும் நலன்பேண் வசதிகள் பலவும் மறுக்கப்படுகின்றன. அதே வேளை பலவித நவீன கண்காணிப்புகள் மூலம் கடுமையான வேலை வாங்கப் படுகிறது.

இவற்றுக்கும் மேலாக தொழிற்சாலை களுக்குள்ளேயும் வெளியேயும் பெண் தொழிலாளர்கள் ஊழியர்கள் பாலியல் சேட்டைகள் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். கட்டாயத்தின் பேரில் இடம்பெறும் இப் பாலியல் வன்முறைகளால் பலர் பாதிக்கப்பட்டு ள்ளதுடன் பலவித பாலியல் நோய்களுக் கும் ஆளாக்கப்பட்டுள்ளனர். பெருமளவி லான வர்த்தக வலய உழைக்கும் இளம் பெண்களுக்கு எச்.ஐ.வி. வைரஸ் கிருமிகள் தொற்றியிருப்பதாக ஆய்வுகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

குறைந்த சம்பளம், அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முடியாத பற்றாக்குறை, கிராமத்தில் உள்ள குடும்பத்தினருக்கு செய்ய வேண்டிய பண உதவி போன்றநிர்ப்பந்த சூழலால் பல பெண் தொழிலாளர்கள்மேலதிகப் பணம் தேடும் குறுக்கு வழிகளில் சென்று சீரழியும் போக்கு வளர்ந்து வருகின்றது. இதனை ஊக்குவிக்குமாறு உலகமயமாதலின் சீரழிவுக் கலாசாரம் பரப்பப்பட்டும் வருகின்றன.

இவற்றுக்கு தீர்வு தேடவும் சம்பள உயர்வு ஏனைய நலன் பேண் சலுகைகளைப் பெற்றுக் கொடுக்கவும் பல்தேசிய நிறுவனங்களிடமோ முதலாளிகளிடமோ வற்புறுத்தி நிற்க அரசாங்கம் தயாராக இல்லை. அதற்குப் பதிலாக மேலும் பெண் உழைப்பாளர் களின் உழைப்பை மூலதன முதலாளி கள் உறிஞ்சி எடுப்பதற்கே வழி வகுத்து நிற்கின்றது. அதன் வழிப்பட்டதே மேற்படி பெண்களுக்கான கட்டாய மேலதிக வேலைக்கான சட்டமாகும்.

இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்த போது கடுமை யான எதிர்ப்பைக் காட்ட எந்தவொரு கட்சியும் முன் நிற்கவில்லை. மலையகத் தைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டும் எதிர்த்து குரல் கொடுத்தார். ஏனையோர் சம்பிரதாயத் திற்கு சில திருத்தங்களுடன் ஏனோ தானோ என்று இருந்துவிட்டனர். இச்சட்டமூலத்தை அம்பலப்படுத்தி எதிர்க்க நேர்மையான ஒரு இடதுசாரி தானும் பாரளுமன்றத்தில்

11ம் பக்கம் பார்க்க..

படிப்பகம்

www.padippakam.com



# தொண்டமான் பாதை தொடரப்படுகிறது.

## தோட்டத்தொழிலாளர்கள் ஏமாற்றப்படுகிறார்கள்

மறைந்த தொண்டமான் மலையகத்தின் தோட்டச் சொந்தக்காரரர். அத்துடன் தொழிற்சங்க அரசியல் துறைகளில் சம்பாதித்தவர். சாதியிலும் உயர் சாதி. இவற்றை வைத்து மலையகத் தலைமையை கையகப்படுத்திக் கொண்டவர். அவரது தொழிற்சங்க அரசியல் தலைமையால் தமக்கு ஆபத்து இல்லை என்பதை நன்கு புரிந்து கொண்ட வெள்ளைத்துரைமார் முதல் இந்நாட்டு ஆளும் வர்க்க கறுப்புத்துரைமார் வரை அவருக்கும் அவரது தொழிற்சங்க வளர்ச்சிக்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுத்தனர். ஊடகங்களும் குறிப்பாக வீரகேசரி பத்திரிகை போன்றன மலையகத்தின் தன்னி கரில்லாத் தலைவர் தொண்டமான் என்ற தோற்றத்தை வளர்த்து தரிசனத் திற்குரிய நிலையைத் தோற்றுவித்தனர். ஆனால் தொண்டமான் ஆளும் வர்க்கத் தரப்போடு சொத்து, சுக நிலையில் இணைந்து நின்றார்.

மலையக மக்களின் அடிப் படை ஜீவாதாரப் பிரச்சினைகள் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை என்று வந்த போதெல்லாம் தொண்டமான் தொழிலாளர்களுக்கு முதுகைக் காட்டி துரைமார்கள் பக்கமே நின்றார் என்பது வரலாறு. தொழிலாளர் பக்கம் நிற்பது போன்று காரசாரமான அறிக்கைகள். எச்சரிக்கைகள். காலக் கெடுக்கள் என விட்டுக் கொள்வார். பிரார்த்தனை. ஒத்துழையாமை, சட்டப்படி வேலை என்று கூவிக் கொள்வார். அதே வேளை வேலை நிறுத்தப் போராட்டம் என்பதை மிகக் கவனமாகத் தவிர்த்துக் கொள்வார். இத்தகைய ஒருவர் தான் ஆளும் சொத்துடைய வர்க்கத்திற்கு மலையகத்தில் தேவைப்பட்டவர். அதற்குப் பிரதி உபகாரமாக அமைச்சர் பதவிகளும் அவரைச் சுற்றிய வர்களுக்கு பதவிகள், சலுகைகள் தாரளமாகச் செய்யப் பட்டன. ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை அதள பாதாளத்தில் தான் தொடர்ந்தது.

தொண்டமான் மறைவுக்குப் பின் இந்த நிலையில் மாற்றம் எதுவும் ஏற்பட வில்லை. அவரது வாரிசுகளாக ஆறுமுகம் தொண்டமானும் சந்திர சேகரனும் தலைமைக்கு தனித்தனியாக வந்தனர். ஏட்டிக்குப் போட்டி போன்று காட்டிக் கொண்டு அந்த இருவரும் தொடர்வது தொண்டமானின் திருப்பணியைத்தான். தோட்டத் தொழிலாளர்களை திசை திருப்பி ஏமாற்றி வைத்திருக்க கிடைத்த இரண்டு புதிய தலைமுறைத் தலைவர்கள் தான் ஆறுமுகனும் சந்திர சேகரனும். இருவருமே அமைச்சரவை அமைச்சர்கள். இந்த இருவரையும் வைத்தே இரண்டு பேரினவாத ஆளும் வர்க்க சக்திகளும் பெருந்தோட்ட முதலாளிகளும் தமது காரியங்களைச் சாதித்து வருகின்றனர். இந்த இரு கோடாரிக் காம்புகளும் தமது பணிவான வர்க்க சேவையை வழங்கும் அதேவேளை தங்களுக்கும் தங்களைச் சுற்றியவர்களுக்கும் வேண்டியவற்றைத் திரட்டியும் சுருட்டியும் பெற்றுக் கொடுக்கின்றனர். ஆனால் கூட்டத்தில் பத்திரிகை அறிக்கைகளில் தோட்டத் தொழிலாளர்களுக்காக மார் அடித்து முதலைக் கண்ணீர் விட்டுக் கொள்வர். இவர்களைச் சுற்றி நிற்கிறது ஒரு புல்லுருவிப் புத்திசீவிக் கூட்டம். அவர்களுக்கு அமைச்சுகளில் திணைக்களங்களில் மற்றும் அரசாங்க உயர் நிலைகளில் உயர் பதவிகள், மேலதிக பதவிகள், கொழுத்த சம்பளம் அவற்றுக்கு மேலால் கிம்பளங்கள். தங்கள் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கு வேண்டிய உயர்வுகளைக் கவனமாகப் பேணிக் கொள்கிறார்கள். மலையக மக்கள் மீது நேர்மையான அக்கறை கொண்ட சமூக நிலைமைகள் மாற வேண்டும் என்று விரும்புகின்ற அதற்காக தம்மாலானவற்றைச் செய்து வருகின்ற புத்திசீவிகளைத் தவிர ஏனையோர் ஆறுமுகத்தின் சந்திரசேகரத்தின் பின்னால் கை பிசைந்து காக்கா பிடிக்கும் கூட்டமாகவே காணப்படு கின்றது. பெரும் வர்த்தகப் புள்ளிகளோ தேர்தல் காலத்தில் அள்ளிக் கொடுத்து ஏனைய காலங்களில் அதற்குப் பதிலீடாக மீட்டுத் திரட்டிக் கொள்கிறார்கள்.

இத்தகைய கூட்டம்தான் மலையகத் தேசிய இனத்தை ஒரு தேசிய இனமாகக் காண மறுக்கிறது. மலையகம் என்ற தனித்த அடையாளத்தை நிராகரிக்கிறது. அற்ப சலுகைகளுக்காக ஆலாய்ப் பறப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. மலையக மக்களின் தேசிய இன அடிப்படைக்கான பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு, கல்வி விடயங்களில் தூர நோக்குடன் செயல்படுவதில் அக்கறையின்றித் தத்தமது சுய ஈடேற்றத்திற்கு முன் நிற்கின்றனர்.

இன்று இலங்கையில் பேரினவாதத்தால் ஆளும் வர்க்கத்தால் இன வர்க்க அடிப்படையில் ஒடுக்கப்படும் தேசிய இனமாக மலையகத் தமிழ்த் தேசிய இனம் இருந்து வருகின்றமை யதார்த்தமானதாகும். ஆனால் மலையகத் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் உள்ள அரசியல் தலைமைகளும். புத்திஜீவிகளும் மற்றும் உள்ளோரும் எத்தனை பேர் மேற்கூறிய ஒடுக்குமுறை யதார்த்தத்தை உணர்ந்து செயல்படுகிறார்கள் என்பது கேள்விக்குரியதாகும். இவ்வாறு மலையக மக்களை ஏமாற்றி அரசியல் பிழைப்பும் அதன் மூலமாக பேரினவாத ஆளும் வர்க்கங்களுக்கு அடிமை சேவகமும் செய்து வரும் தலைமைகளிடம் மலையக மக்கள் எதிர்பார்க்க இனிமேலும் எதுவும் இல்லை. மலையக மக்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடிய புதிய தலைமுறையினரிடையே ஓர் விழிப்புணர்வு சக்தி எழ வேண்டும்.



அத்தகைய சக்தி தூர நோக்குடனான தெளிவுள்ள அரசியல் மார்க் கத்தில் வழி நடக்கத் தம்மை தயார்படுத்த வேண்டும்.

நிலவுடமை வழிவந்த தரிசனத் தலைமைத்துவ வழிபாடு என்பது முதலாளித்துவ பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலில் நீடித்து வரும் ஒன்றாகும். முன்னேறிய தாகக் கூறப்படும் சிங்கள-தமிழ் சமூக அரசியல் பரப்பிலும் கூட அந்த உயர் வர்க்க-சாதிய ஆதிக்க அரசியலே இன்றும் கொடிகட்டிப் பறக்கின்றது. அவ்வாறு இருக்கும் போது பின் தங்கிய மலையக சமூகத்தில் தரிசனத் தலைமைகளை நம்பி எதிர்பார்த்து நிற்கும் போக்கு தவிர்க்க இயலாத ஒன்று தான். ஆனால் இது நீடித்து நிலைக்கவல்ல ஒன்றல்ல. சரியானதும் உறுதியானதுமான அரசியல் வழிகாட்டலும் தலைமைத்துவமும் கடுமை யான வேலைகளும் முன் செல்லும் போது பரந்துபட்ட மலையக மக்கள் உண்மைகளின் பக்கம் அணிதிரள் வார்கள். நடைமுறைப் போராட்டங்களில் பற்பல அனுபவங் களையும் பாடங் களையும் படித்துக் கொள்வார்கள். அவ்வேளை அவர்களது போராட்டப் புயலுக்கு முன்னால் சகல பிற்போக்கு சக்திகளும் சருகாகிக் கொள்ளவே செய்வார்கள். அதற்குரிய முன் உதாரணத்தை அறுபதுகளின் நடுக் கூறிலே மலையகம் கண்டது. உழைப்பைத் தவிர வேறு எந்த சுகத்தையும் கண்டறியாத தோட்டத் தொழிலாளர்களின் உறுதியையும் போராடும் உத்வேகத்தையும் கண்டு வெள்ளைத்துரைமாரும் கறுப்புத்துரை மாரும் கதிகலங்கி நின்ற ஒரு சூழல் அன்று காணப்பட்டது. சமூக மாற்றத் தில் நம்பிக்கை கொண்டு செயல்படும் ஒவ்வொருவருக்கும் அந்த நம்பிக்கை அசைக்க முடியாதவாறு உண்டு.

மலையகத் தமிழ் தேசிய இனத்தின் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டுத் தனித்துவங்களின் ஒவ்வொரு அம்சங்களையும் அதே போன்று அவர்களது புவி சார் வாழ்விடங்களையும் தூர நோக்குடன் வரையறை செய்து உரிய அரசியல் திட்டமும் மார்க்கமும் வரைந்து முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்கான செயற்திறனும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் மிக்க முன்னணி. சக்தியொன்று கட்டியெழுப்பப்படல் வேண்டும். அத்தகைய சக்தியினால் மட்டுமே தொண்டமான் கொள்கையைத் தொடரும் அவரது வாரிசுத் தலைமைகளின் பிடியில் இருந்து மலையக மக்களை விடுவித்து போராட்டப் பாதையில் அழைத்துச் செல்ல முடியும். அதற்குரிய அடிப்படைகளைத் தேடுவதே இன்றைய தேவையாகும்.

### கொக்கா....

5ம் பக்க தொடர்ச்சி..

ஆதரவு சர்வாதிகாரிகள் ஆட்சியே நடைபெறு கிறது.

இலங்கையிலும் கொக்கா கோலா நிறுவனம் ஆட்குறைப்பு என்ற பேரில் தொழிலாளர்களை வேலையிலிருந்து அடிக்கடி நீக்குவதுண்டு. உரிய நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை. தொழில் திணைக்களத்தின் மூலம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குரிய நிவாரணத்தைப் பெற முடிவதில்லை. தொழிலாளர்களின் முறைப்பாட்டை விசாரித்து தொழிலாளர்களுக்கு எதிராக தீர்ப்பளித்த ஒரு உதவி தொழில் ஆணையாளர் கொக்கா கோலா நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஜேர்மனியிலுள்ள ஒரு பல்தேசியக் கம்பெனியில் ஆளணி முகாமையாளராக நியமனம் கிடைத்துச் சென்றதாக பரவலாக பேசப்படுகிறது.

இவ்வாறு கொக்கா கோலா தொழிலாளர்களின் உரிமைகளை மறுக்கும் தொழிற்சங்கத் தலைவலவர்களை கொலை செய்யும் கொக்கா கோலா நிறுவனத்தின் பானத்தை குடிக்கவும் வேண்டுமா? தொழிலாளர்களின் ரத்தத்தாலும் வெயர்வையாலும் பெரு லாபமீட்டி நிற்கும் கொக்கா கோலா பானத்தில் தொழிற்சங்கத் தலைவர்களின் கொலைகளால் வடிந்த ரத்தமும் கலந்து நிற்கின்றது.

## வடபுலத்தில் கண்டதும் கேட்டதும்

ஊரோடி

### யாழ் மாநகர முதல்வருக்கு சாதி சொல்லி அடி உதை!

கடந்த மாத நடுப் பகுதியில் யாழ் மாநகர முதல்வர் செல்லன் கந்தையனுக்கு அவரது அலுவலகத்தில் வைத்து கடுமையான அடி உதை கொடுக்கப்பட்டது. இதனால் காயமடைந்த முதல்வர் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இவ்வாறு முதல்வர் மேல் தாக்குதல் தொடுத்தவர்கள் வேறு யாரும் அல்ல. மாநகர சபையின் உறுப்பினரான எஸ்.அரவிந்தன் என்பவரும் அவரது அடியாட்களான மூவருமாவர். இந்த அரவிந்தன் தமிழர் கூட்டணியின் இளம் பிரமுகராவார். கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பின் வேட்பாளராகப் போட்டியிட்டவர். வடமராட்சியைச் சேர்ந்தவர். வாக்குகள் பெறுவதற்காக தாழ்த்தப்பட்ட மக்களிடம் நல்லவர் போன்று நடித்தவர். ஏற்கனவே யாழ் மாநகர சபையின் உறுப்பினர். நெருக்கடிக் காலத் தேர்தலில் குறைந்த வாக்குகளுடன் உறுப்பினரானவர். முன்னைய முதல்வர் என். ரவிராஜ் பா.உ.ஆன பின்பு அப்பதவிக்கு கடுமையாக முயன்றவர். ஆனால் எதிர்ப்பு வரும் என்பதாலும் சில நாட்களில் மாநகரசபை கலைக்கப்படும் என்ற கணிப்பிலும் கூட்டணித் தலைமை செல்லன் கந்தையனை மாநகர முதல்வராக்கியது. அன்றிலிருந்து அரவிந்தனுக்கு முதல்வரின் மீது கடும் கோபம் இருந்து வந்ததாக பேசிக் கொள்ளப்படுகின்றது. சந்தர்ப்பம் கிடைத்தது அண்மையில்தான். முதல்வரின் அலுவலகத்தில் வைத்து சுவரோடு வைத்து அடியும் உதையும் கொடுக்கப்பட்டது. கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் சாதியின் பெயர் சொல்லி முதல்வர் தாக்கப்பட்டு இரத்தம் ஒழுக ஒழுக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். முன்பு வளவுக்கு கூப்பிட்டு மரத்தில் கட்டி வைத்து அடிப்பது பழைய ஆண்டைகளின் மரபு. இப்போது அறையைப் பூட்டி வைத்து அடித்து உதைப்பது நவீன ஆண்ட பரம்பரையினரின் மரபு. இந்த அடி உதை பற்றி முதல்வர் செல்லன் கந்தையன் பொலிசில் புகார் செய்யப் போவதில்லை என்றும் கூட்டணித் தலைமைப் பீடம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். பாவம் செல்லன் கந்தையன். அடித்தாலும் உதைத்தாலும் நான் உந்தன் அடிமை அல்லவா? என்பதை பலத்த நோவின் மத்தியிலும் வெளிப்படுத்தியுள்ளமை பரிதாபத்தை அல்ல அடிமைத்தனத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது. கூட்டணித் தலைமையும் தலைவர் ஆனந்த சங்கரியும் இப்படித்தான் சொல்லி விடயத்தை சமாளிப்பார்கள். "கந்தையன் சரி. சரி. இதைப் பெரிசாக்கக் கூடாது. நம்ம பொடியன்தானே. எல்லாம் பேசித் தீர்த்துக் கொள்ளுவம். பெரிதுபடுத்தினால் தமிழருக்குத்தானே அவமானம். இப்பவும் நீ தானே முதல்வர். கூட்டணிக்கு மறுப்பே". இவ்வாறு கூறி முதல்வரின் முதுகில் தடவிவிட்டால் விசுவாசிக்கு தேகமெல்லாம் குளிர்ந்து விடும். அடிமை எசமான் உறவும் பங்கமின்றி தொடரவும் செய்யும். யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிந்துவிட்டது என யாரோ சொன்னான் மடையன்.

### அமைச்சர் நிலையில் ஆனந்த சங்கரியார்

தமிழர் கூட்டமைப்பின் தலைவர் ஆனந்த சங்கரியார் இப்போது அமைச்சர் போன்றே நடந்து கொள்கிறார் என கூட்டணி வட்டாரங்களில் பேசப்படுகிறது. பிரதமருக்கும் அமைச்சர்களுக்கும் வேண்டியவராகி நிற்கும் சங்கரியார் தனது செல்வாக்கின் மூலம் செய்ய வேண்டியவற்றை எல்லாம் தம்மவர்களுக்கு செய்து கொடுத்து வருகிறாராம். அத்துடன் பிரதமர் அவரை யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராகவும் தெரிவு செய்துள்ளதால் வடபுலத்திற்கான அமைச்சர் போன்றே நடந்து கொள்கிறாராம். இதனால் அமைச்சர் மகேஸ்வரன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறதையும் காண முடிகிறது. தனக்கே அந்தப் பதவி கிடைக்கும் என எதிர்பார்த்த மகேஸ்வரனுக்கு ஏமாற்றமாகி விட்டது. ஆற்றாக்கடைசியில் அபிவிருத்திக் குழுவிற்கு இணைத்தலைவர்கள் தானும் சங்கரியாரும் என ஒரு கரடி விட்டும் பார்த்தார் எதுவும் பலிக்கவில்லை. அதன் முதலாவது கூட்டத்திற்கு சமூகம் அளிக்கவில்லை. சங்கரியாரின் முகத்தில் முழிக்க விரும்பாத மாவையாரும் அக் கூட்டத்திற்கு போகவில்லை. இப்போது சங்கரியாரைச் சுற்றி ஒரு கூட்டம். தமிழர் விடுதலைக்கோ போராட்டத்திற்கோ அல்ல. வேலைவாய்ப்பு. பதவி உயர்வு. பதவி நீடிப்பு. புதிய பதவிகள். வர்த்தக வியாபார அனுமதிகள். ஒப்பந்தங்கள். இப்படி பற்பல சுயதேவைகள் முன்னேற்றங்களுக்காகும். சங்கரியாரும் கூட்டமைப்பும் தேர்தல்காலத்தில் வெளியிட்ட துண்டுப் பிரசுரங்களையும் வாக்குறுதிகளையும் வாக்களித்த மக்கள் படித்துப் பார்ப்பது பயன் உள்ளதாகும். ஏமாற்றுவோர் தமிழர் தலைமைகள் ஏமாறுவோர் சாதாரண தமிழ் மக்கள். இந்நிலை மாறாத வரை தமிழர் விடுதலை என்பது வெறும் கனவு மட்டுமே.

### வியாபார வர்த்தகப் புள்ளிகளின் கடைவிரிப்பு

நடைபாதை வியாபாரிகள் முதல் பெரு வர்த்தகப் புள்ளிகள் வரை இப்போது வடபுலத்தில் புகுந்து கொள்ளை லாபம் பெறுவதில் கொடி கட்டி நிற்கின்றனர். எந்தெந்த வழிகளில் மக்களிடமிருந்து உறந்து கொள்ளலாமோ அந்தளவிற்கு அங்கே பன்முகச் செயற்பாடுகள் மூலம் பணம் பண்ணிக் கொள்கின்றனர். அண்மையில் யாழ் மத்திய கல்லூரியில் பெரும் வர்த்தகக் கண்காட்சி வைக்கப்பட்டு மக்களைக் கவர்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது. வடபுலத்து மக்களின் மீள் வாழ்வை மறுசீரமைத்து சமாதான சூழலின் ஊடாக இயல்பு நிலைக்கு உதவும் முகமாக வெளிநாடுகளின் உறவுகள் அனுப்பும் பணத்தை ஈவிரக்கமற்ற விலைகளின் மூலம் அபகரிப்பதற்கு தென்னிலங்கை வியாபார வர்த்தக புள்ளிகள் சகலவற்றையும் கொண்டு வந்து கடை விரித்து நிற்கின்றனர்.

### புனர்வாழ்வு அமைச்சு தங்கச் சுரங்கம்

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு என்பது ஒரு தங்கச் சுரங்கமாகும். அதற்குப் போட்டி போட்டு அதனைப் பெற்றுக் கொள்வதில் வெற்றி பெற்றவர்கள் சிலர் மட்டுமே. மறைந்த அஷ்ரப் முன்பு அமைச்சராக இருந்தார். பின்பு டக்ளஸ் தேவானந்தா இருந்தார். இப்போது டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இருக்கின்றார். இந்த அமைச்சர் பதவிக்கு கடும் முயற்சி செய்து தோற்றுப் போனவர் யாழ் மாவட்ட யூஎன்.பி. பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன். என்றாலும் நன்றி மறக்காத பிரதமர் ரணில் மகேஸ்வரனுக்கு இந்து கலாச்சாரத் திணைக்களத்தை கையளித்து அமைச்சரவையில் இல்லாத அமைச்சராக்கி விட்டார்.

ஆனால் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா பற்றி யூலை 28ம் திகதி வெளியான 'சண்டே லீடர்' வாரப் பத்திரிகை பல விடயங்களை அம்பலத்திற்கு கொண்டு வந்திருக்கிறது. அதற்கு முன்பும் இப் பத்திரிகை அமைச்சரோட உள்ள ஊழல்கள் பற்றிய விளக்கங்களைப் பிரசுரித்திருந்தது. அதற்குப் பதிலாக அமைச்சரின் சகோதரி தயார் கடிதங்களை விளக்கம் எனக் கூறி எழுதினார்கள். இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன. புனர்வாழ்வு அமைச்சு தங்கச் சுரங்கம் என்பதும் அங்கே வெட்டவெட்ட வருவது எவை என்பதும் புரியும்.

இங்கே ஒரு விடயத்தை கவனிப்பது அவசியம். முன்பு டக்ளஸ் புனர்வாழ்வு அமைச்சராக இருந்த போது ஊழல் முறைகேடு எனத் துள்ளிக் குதித்த கூட்டணி கூட்டமைப்புக் கூட்டம் இப்போது மௌனமாக இருந்து வருவதன் மர்மம் என்ன? மௌனம் சம்மதத்தின் அறிகுறி அல்லவா? இவை மட்டுமா இன்னும் எத்தனை எத்தனை திரை மறைவில் நடக்கின்றன. எல்லாம் தமிழ் மக்களுக்காகவே தான்.

படிப்பகம்

www.padippakam.com






## மாக்ஸியமும் தேசியமும்

தமிழ்த் தேசியவாதிகள் பலர் மாக்ஸியவாதிகளுக்குத் தேசிய விடுதலை பற்றிப் பகைமையான உணர்வே உள்ளது என்று விடாது பிரசாரம் செய்து வருகின்றனர். அவர்கள் தேசிய விடுதலை பற்றி வைத்திருக்கிற கண்ணோட்டம், தேசிய விடுதலையைப் பிற சமூக விடுதலைக் கோட்பாடுகளிலிருந்து விலக்கியும் மற்றைய பாதிப்புக்கள் எதுவுமே இல்லாமல் வென்றெடுக்கக் கூடியதாகவும் காணுமாறு நிர்ப்பந்திக்கிறது.

மாக்ஸியத்திற்குத் தேசியம் பற்றிய ஒரு உறுதியான நிலைப்பாடில்லை என்று குறை கூறப்படுகிறது. தேசியம் என்பது ஒரு சமூகத்தில் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை வைத்தே தேசியத்தை மாக்ஸியவாதிகள் நோக்குகின்றனர். வர்க்க அடையாளமற்றதும் முழுத் தேசத்தையோ தேசிய இனத்தையோ ஒன்றுபடுத்தக் கூடிய தேசியவாதம் எதுவும் இல்லை. தேசியவாதம் தேசிய இனம் ஒன்றின் பேரால் ஒரு குறிப்பிட்ட வர்க்க நலன்களையே வற்புறுத்துகிறது. பொதுவாக, இது மூன்றாமுலக நாடுகளில் தேசிய முதலாளி வர்க்கத்தின் நலனாகவும் முன்னேறிய முதலாளிய நாடுகளில் அதிகாரத்திலுள்ள பெரு முதலாளி வர்க்க நலனையுமே குறித்து நிற்கிறது. ஒடுக்குமுறை வலுக்கிற ஒரு சூழலில், ஒடுக்குதல் ஒரு தேசிய முரண்பாட்டின் வடிவாக நடைமுறைப்படுத்தும் போது, ஒரு மாக்சியவாதி தேசியவாதக் கண்ணோட்டத்தில் நோக்க முடியுமா? முடியுமாயின் 1930களிலும் 1940களின் முற்பகுதியிலும் ஒரு ஜேர்மன் மாக்ஸியவாதி ஃபாஸியத்தின் தரப்பிலல்லவா நின்றிருக்க வேண்டும். ஒரு அமெரிக்க மாக்ஸியவாதி அமெரிக்காவின் ஒவ்வொரு போரிலும் அமெரிக்காவையல்லவா நியாயப்படுத்தியிருக்க வேண்டும்.

ஒரு மாக்ஸியவாதியால், தேசியவாதி போல தேசியப் பிரச்சினையை நோக்க முடியாது. ஏனெனில் ஒரு மாக்ஸியவாதி சமூக நீதியின் அடிப்படையிலேயே பிரச்சனையை அணுகுகிறார். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் முற்போக்கானதாய் விளங்கிய தேசியம் இன்னொரு சூழ்நிலையில் அதற்கு எதிர்மாறானதாகலாம். இதற்கு கொலனிய ஆட்சிக் காலத்தில் பெரும்பான்மைத் தேசிய இனங்களின் தேசியவாதத் தலைமைகளின் நடத்தை கொலனிய ஆட்சி போன பின்பு நடந்து கொண்ட முறையிலிருந்து காண முடியும். ஏன், ஈழத்துத் தமிழ்த் தேசியவாதிகள் கூட, விடுதலைக்கு முன்னமே ஒரு ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடியவாறே இன்னொரு ஒடுக்குமுறையை நிறைவேற்றி நியாயங் கற்பிக்கக் கூடியவர்கள் என்று நாம் கண்டறிவோம்.

ஒரு உண்மையான மாக்ஸியவாதி தேசிய விடுதலைப் போராட்டங்களை நிபந்தனையின்றி ஆதரிக்கிறார். அரச ஒடுக்குமுறைக்கு துணைபோகிற ஒருவர், தன்னை மாக்ஸியவாதி என்று சொல்லிக் கொள்ளலாமே ஒழிய மாக்ஸியவாதியாக நடந்து கொள்ள முடியாது. எனவே திரிபுவாதிகளையும் பிற சந்தர்ப்பவாதிகளையும் முன்நிறுத்தி மாக்ஸிய நிலைப்பாட்டை விமர்சிப்பது அரசியற் கோழைத்தனமே ஒழிய வேறல்ல.

தேசிய சுயநிர்ணயம் என்ற கருத்தாக்கமும் முதல் முதலாக லெனினால் முன்வைக்கப்பட்டதுதான். லெனின் சுயநிர்ணயக் கோட்பாட்டை முன்வைத்ததே சுயவிருப்பின் அடிப்படையில் தேசங்களும் தேசிய இனங்களும் ஒருங்கிணைவதற்காகவே ஒழியப் பிரிவினையை விரும்பியதால் அல்ல. அதுவே இன்றும் உலகின் பல நாடுகளிற் சரியானதுங் கூட. எங்கே பேரினவாத ஒடுக்குமுறை ஒரு தேசிய இனத்தின் இறைமையை மறுக்கிறதோ, அங்கே, ஒடுக்கப்பட்ட தேசிய இனம் தனக்கு மறுக்கப்பட்டதை வெல்லப் போராடுகிறது. பிரிவினையை அவசியமாக்குவது சுயநிர்ணய உரிமையின் மறுப்பே ஒழிய வேறெதுவுமல்ல.

தனி நாடாகப் பிரிந்து போக இயலாத நிலையிலுள்ள தேசிய இனங்களுக்கும் தமது தேசிய இன அடையாளத்தையும் தனித்துவத்தையும் பேணவும் ஒவ்வொரு தேசிய இனமும் ஒரு சமூகமாக விருத்தி பெறவுமான உரிமை சோவியத் யூனியனில் முதலிலும் பின்னர் அதனிலும் விரிவாகச் சீனாவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. நிக்கராகுவாவின் முன்னைய புரட்சிகர அரசாங்கமும் இதே அணுகுமுறையைக் கடைப்பிடித்தது. இது எதைக் காட்டுகிறதெனில், ஒரு மாக்ஸியவாதி ஒரு பிரச்சனையைத் தான் எந்தத் தேசிய இனத்தின் உறுப்பினர் என்ற அடிப்படையில் நோக்காமல் தான் எந்த வர்க்கத்தின் பிரதிநிதி என்ற அடிப்படையிலேயே நோக்குகிறார் என்பதையேதான்.

இதனாலேயே ஒரு ரஷ்யக் கம்யூனிஸ்டால் ரஷ்யப் பேரரசின் ஆக்கிரமிப்பையும் தேசிய ஒடுக்குமுறையைக் கண்டிக்கவும் ஒரு சீனக் கம்யூனிஸ்டால் சீனப் பேரரசுகளின் ஆக்கிரமிப்பையும் தேசிய இன ஒடுக்கலையும் கண்டிக்கவும் இயலுமானது. இலங்கையிலும், ஒரு கம்யூனிஸ்டால் மட்டுமே, விதிக்கப்பட்ட சமூகம் தன்னை அடையாளங் காணும் தேசிய இன, சாதி, பிரதேசம், தான் கடைப்பிடிக்காததான மதம் போன்ற எந்த அடையாளத்திற்கும் அப்பால் சமூக நீதிக்கான ஒரு நிலைப்பாட்டை எடுக்கவும் எந்த ஒரு ஒடுக்குமுறையையும் தயங்காது கண்டிக்கவும் முடிந்துள்ளது.

தமிழ்த் தேசியவாதிகள் தாங்கள் பிரிவினை கேட்டபோது கம்யூனிஸ்டுகளும் பிரிவினை கேட்காததையிட்டு அவர்களைத் தேசிய விடுதலைக்கு எதிரானவர்கள் என்று குற்றஞ் சாட்டினார்கள். எனினும் பிரிவினைக் கோரிக்கைக்கு காரணமாக அமைந்த எந்தத் தேசிய இன ஒடுக்குமுறையையும் பற்றித், தமிழ்த் தேசியவாதிகளை விடவும் வேறெந்தத் தேசியவாதிகளை விடவும், கம்யூனிஸ்டுகள் தெளிவுடனும் உறுதியுடனும் இருந்துள்ளனர்.

சுயநிர்ணயக் கோட்பாட்டை அன்றும் இன்றும் வற்புறுத்தி வந்துள்ளவர்கள் மாக்ஸிய-லெனினிய வாதிகளே ஒழியத் தேசியவாதிகளல்லர். இன்றுதான் சுயநிர்ணயம் என்றால் என்ன என்ற விசாரணை தமிழ்த் தேசியவாதிகளிடையே எழுந்துள்ளது. இதற்கிடையில், சுயநிர்ணயத்தை எப்படி ஒரு நாட்டில் வெவ்வேறு சூழ்நிலைகளில் வாழும் தேசிய இனங்கட்குப் பாவிக்கலாம் என்பது பற்றி மாக்ஸிய-லெனினிய வாதிகள் மிகவும் தெளிவானதும் ஆழமானதுமான சிந்தனை வழிப்பட்டு ஒரு உறுதியான நிலைப்பாட்டில் நின்று அதற்காகப் பிரசாரம் செய்து வந்துள்ளனர்.

தேசிய இனப் பிரச்சனையைப் பொறுத்தவரை, மாக்ஸியம் எந்தச் சூத்திரத்தையும் பாவிப்பதற்கில்லை. மாக்ஸியம் என்றுமே வரட்டுச் சூத்திரகாரருடைய புகலிடமுமல்ல. ஒரு மாக்ஸியவாதி தேசிய இனப் பிரச்சனைகளை ஒன்றுக்கும் மேற்பட்ட கோணங்களினின்றும் நோக்க வேண்டியுள்ளது. ஒடுக்குமுறைக்கு மாறான ஒரு நியாயமான போராட்டம் வெளியிலிருந்தோ உள்ளிருந்தோ இன்னொரு பெரிய ஒடுக்குமுறையாளனுக்குச் சாதகமாகத் திருப்பப்படாமல் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. வியற்நாமில் பிரெஞ்சுக் கொலனி ஆட்சியின் போது ஏற்பட்ட யப்பானிய ஆக்கிரமிப்பில் பிரதான எதிரி யார் என்ற கேள்வியின் மீதே விடுதலைப் போராட்டத்தின் பாதை நிருணயமானது. இது போன்றே யப்பானிய ஆக்கிரமிப்பின் போது கோமின்டாங் ஆட்சிக்கு எதிரான போராட்டம் கம்யூனிஸ்டுகளால் மறுபரிசீலனை செய்யப்பட்டது.

தேசிய இன விடுதலையை சும்மா தமிழர்-சிங்களவர் மோதல் என்ற விதமாக விளங்கிக் கொள்வதன் மூலம் இரண்டு தசாப்த காலப் போராட்டத்தின் பயன்கள் வேறொருவருக்குப் போக இடமுண்டு என்று தொடர்ந்தும் எச்சரித்து வருவோர் மாக்சிய வாதிகள் மட்டுமே.

தேசியவாதம் பற்றியும் தேசிய விடுதலை பற்றியும் மாக்ஸியவாதிகள் ஓர் தெளிவான அடிப்படையைக் கொண்டிருந்தாலும், நடைமுறையில் தவறுகள் நேர' இடமுண்டு. இது எந்த நடைமுறை சார்ந்த இயக்கத்துக்கும் நிகழக் கூடியது. ஆயினும், அடிப்படையிற் சரியான ஒரு நிலைப்பாடு உள்ளவரையும், தவறுகளை அடையாளங் காண்பதும் திருத்துவதும் இயலுமானது.

இதுவரை காலமும் பிற்போக்குவாதிகளும் அவர்களுக்கு உடந்தையான தேசியவாதிகளும் மாக்ஸியத்தின் போதாமைகள் என்று சுட்டிக் காட்ட முயல்வதெல்லாம் மாக்ஸிய நிலைப்பாடுகளை அவற்றுக்குரிய கால-இடச் சூழல்களில் வைத்து நோக்காத நேர்மையற்ற செயல்களாக அல்லது அரசியல் தந்திரோபாயத் தவறுகளை அடிப்படைத் தவறுகளாகத் திரிக்கும் செயல்களாக அமைவது ஏன் என்று நாம் சிந்திப்பது நல்லது.

தேசியம் என்ற கோட்பாடே மிகக் குறுகியகால வரலாற்றையுடையது. தேசிய விடுதலைப் போராட்டம் என்பது தேசிய ஒடுக்குதல் என்பதன் எதிர்வினையாகும். தேசியமும், தேசிய ஒடுக்கலும் காலத்துடன் மாறி வருகின்றன. அவற்றுக்கு உலகளாவிய ஒரு வடிவம் இல்லை. எனவே, ஒரு மாக்ஸியவாதியின் நிலைப்பாடும், குறிப்பிட்ட பிரச்சனையின் முழுமையின் அடிப்படையில் அதன் உள், வெளி விளைவுகள் பற்றிய கணிப்புடன் அமைய நேருகிறது. அது வேறு விதமாக அமைய இடமுமில்லை. ஒடுக்கப்பட்ட ஒரு தேசிய இனத்தின் விடுதலை போராட்டத்தை ஆதரிப்பது என்பதில் என்றுமே மறு பேச்சுக்கு இடமில்லை. எனினும் ஒரு போராட்டத்தை ஆதரிப்பது, அதன் தவறான போக்குகளையும் விளைவுகளையும் சேர்த்தே ஆதரிப்பது அல்ல. இங்கே மாக்ஸியத்தின் போதாமையென்று தேசியவாதிகள் சிலர் காட்ட முயல்வது மாக்ஸியத்தின் அறஞ் சார்ந்த நிலைப்பாட்டுக்கும் தமது குறுகிய, விறைப்பான நோக்குக்கும் உள்ள வேறுபாட்டையே.

# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் (7)

**ஆணாதிக்க சிந்தனா முறையும் பெண்களை ஆராதிக்கும் பாசாங்கும்**

**செண்பகன்**

'தமிழ்த்தாய் தலைவிரிகோலமாய் நிற்கிறாள். கண்ணீர் சிந்துகிறாள். தன்மானத் தமிழர்கள் தலைநிமிர வேண்டுமெனில் தமிழ்த்தாயின் துயர் துடைக்கப்பட வேண்டும். ஐம்பெருங் காப்பியங்களை அணியாய்ப் பூண்ட தமிழ்த்தாயின் பேரில் தமிழர்கள் அனைவரும் அணிதிரள்வோம்' என்றிவ்வாறெல்லாம் பெருமுழக்கம் செய்தவர்கள் தமிழ்த் தலைவர்கள்.

இந்து மதத்திலே இறைவன் சிவனார் தனது இடது பக்கத்திலே உமையை அமர்த்தி அந்தஸ்து வழங்கி அர்த்த நாரீஸ்வரராக காட்சியளிப்பார். ஆலயத்திலே வீதிவலம் வரும்போது அம்மையப்பன் ஒருருவில் இருப்பினும் அப்பன் அமர்ந்திருக்கும் வலப்பக்கமாகவே வீதிவலம் வருவது பக்தர்களின் பரவச நடத்தையாகும்.

நற்காரியங்களிலும் சடங்கு சம்பிரதாயங்களிலும் வலதுகாலை முன்வைத்து பழகிப் போனவர்கள் தமிழர்கள். திருமணங்களிலும் வீடியோப் படங்களிலும் போட்டோக்களிலும் ஆண் வலப்பக்கமே நின்று போஸ் கொடுப்பது வழக்கமான சடங்காகிவிட்டது.

ஆண் பெண் வேலைப்பிரிவினையே முதலாவது உற்பத்தி முறையிலேற்பட்ட பிரிவினையாகும். வலதுசாரிகளின் வரலாறும் பண்பாடும் தேசியமும் ஆணாதிக்க முதன்மையையே வலியுறுத்தி வந்தமையே நிதர்சனமாகும்.

பெண்களின் வாழ்வும் வரலாறும் பண்பாடும் இடதுசாரிகளின் சங்கதிகளாகவே கண்டுகொள்ளப்படுவதே உண்மையாகிறது. இதற்குத் தமிழ்த் தேசியவாதிகளும் என்ன விதிவிலக்காகவா போகிறார்கள்? வர்க்க நலனும் ஆணாதிக்க நலனும் இணைபிரியா உடன்பிறப்புக்களாக உலாவருவதை நாம் சமகாலச் சம்பவங்களின் மூலம் அன்றாட வாழ்வில் கண்டு அனுபவிக்கலாம்.

அம்மையப்பன் முதல் அனுராதாவரை; அழகு ராணி ஐஸ்வர்யா முதல் பாளையத்து அம்மன்வரை கடவுள் முதல் பரத்தையர் வரை ஆணாதிக்கத்தின் வணிக உலகின் விளம்பர யுக்திகளுக்கு விலைபோனவர்களாகவே பெண்கள் கணிக்கப்படும் அவலம், சர்வதேசச் சமூகம் முதல் தமிழ்த்தேசியம் வரை வியாபித்துள்ளதை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

'நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்ற பாரதியின் புதுமைப் பெண்ணைப் புரிந்து கொண்டவர்களாகவோ 'பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீராது' என்ற பாரதிதாசனின் தமிழ்த்தேசிய நவீனப் போக்கின் மீது அக்கறை கொண்டவர்களாகவோ தமிழ்த்தேசியத் தலைவர்கள் தமிழ்ச் சமூகத்தில் தம்மை அடையாளப் படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர்.

சிங்களப் பேரினவாதத்தின் மீது வெறுப்பை ஏற்படுத்தும் மையமாகத் தமிழ்ப் பெண்கள் மீது அக்கறை கொண்டவர்கள்போல் தமிழ்த் தலைவர்கள் தம்மைக் காட்டிக்கொண்டனர்.

1958 முதல் 1983 வரை இனவன்முறைகளின் போதும் அவ்வப்போது யுத்த முன்னெடுப்புக்களிலும் தமிழ்ப்பெண்களின் பாதிப்புக் கவனிக்கப்பட்டதும் இன உணர்வை ஊட்டி வளர்ப்பதற்கு 'கற்பு'ம் காணிக்கையாக்கப்பட்டு வெறி கொண்ட தமிழ் உருவேற்றத்திற்கு தமிழ்ப் பெண்கள் பயன்படுத்தப்பட்டனர்.

இனமுரண்பாடு முதல் குடும்பமுரண்பாடுகள் வரை தமிழர் சமூகத்தில் சாதியப் பிரச்சினை, ஊர்ப்பிரச்சினைகளில் பெண்களையே பண்பாட்டு மையப் பொருளாகக் கருதி, உண்மையான பிரச்சினைகளை ஊதிப்பெருக்க வைத்து உருக்குலைத்து சீரழிப்பதே வரலாறாகியதே தவிர, பெண்களின் வர்க்க-பாலியல் சிக்கல்களை தெளிவுபடுத்தி தமிழர் சமூகத்தில் பெண்களின் ஸ்தானத்தை உறுதிப்படுத்த இயலாது போய்விட்டது.

பொதுவாழ்வில் பெண்களின் பங்களிப்புக்கு கௌரவம் வழங்கப்படாமை மட்டுமன்றி அங்கீகாரம் வழங்குவதே அருகிவிட்டது.

தனிப்பட்ட சொந்த-சுயலாபம் ஈட்டக் கூடியதும் தொழில்சார் வருமானந்தரக் கூடியதுமான செயல்களில் பெண்கள் ஈடுபடவேண்டிய பொருளாதார நிர்பந்தம் சமூகச் சூழலில் ஏற்பட்டமை தவிர்க்க இயலாத நிலையென்பதனால் அதனைச் சகித்துக்கொள்ளத் தமிழர் சமூகம் பழகிக்கொள்ள வேண்டியதாயிற்று.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளிநாட்டுப் பயணங்கள் பல மாதங்களாக முன்பின் தெரியாத முகவர்களுடன் பெண்கள் தனித்துச் செல்வதும் முகவர்களுடன் முறைக்காமல் - கோவிக்காமல் நடந்து பயணத்தை நிறைவு செய்யும்படி பெற்றோர் முதல் கணவன் வரை சகலரின் ஆசீர்வாதமும் ஆலோசனையும் வழங்கும் நடப்பியல் தோன்றிவிட்டது. எனினும் 'கற்பு' பற்றிய ஐதீகங்கள் இன்றுவரை கட்டுடைக்கப் படவில்லை.

பொதுவாழ்வில் பெண்களின் ஈடுபாடு தமிழ்த்தேசியத்தில் 'விளம்பரப்' பாணியில் அங்கீகரிக்கப்படுவதே தவிர- நெருக்கடி நேர நிவாரணியாகக் கருதப்படுவதேயொழிய எக்காலத்திலும் குடும்ப-சமூகச் சூழலில் அங்கீகரிக்கப்படாமை மட்டுமன்றிச் சகிக்கப்படுவதனைக்கூட காணமுடியாது.

தமிழர் வாழ்வில் சமகாலத்தில் அரசியலில் ஈடுபட்ட மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம் அரசியல் அநாதையாக்கப்பட்டுள்ளார். சரோஜினி யோகேஸ்வரன், ராஜினி திரணகம ஆகியோரின் எழுத்தும் வாழ்வும் இல்லாதொழிக்கப்பட்டது. இயக்கவரலாற்றில் ஊர்மிளாவின் வரலாறு மறைந்து விட்டது. பூதி அன்னை பூதியானார்.

தமிழர் விடுதலை இயக்கங்களில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதும் பெண்களுடன் தொடர்பு வைப்பதும் தவறு என கண்டிக்கப்பட்டதுமான சிந்தனைமுறை ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும் பின்னாட்களில் இராணுவமாக அங்கீகரிக்கப்பட்டமையும் சிறுவர் பராமரிப்பு நிருவாகிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையும் 'நெருக்கடி நிவாரணியாக' கொள்ளப்பட்டதே தவிர தமிழர் சமூகத்தில் அத்தகைய பெண்களுக்கான சமூக அங்கீகாரம் இன்றுவரை மறுக்கப்பட்டே வருகிறது. குடும்பவாழ்வில் அவர்கள் போராளிகளால் ஏற்கப்படுவார்களே தவிர தமிழர் சமூகத்தால் அல்ல.

பெண்களை ஏற்பதும் நிராகிரிப்பதும் என்பது ஆண்சார், சமூகக் கடமையாகிறதேயொழிய, 'தியாகம்' எனப் பட்டம் சூட்டப்படுகிறதே தவிர பெண்களின் ஸ்தானம் இன்றுவரை நிதானிக்கப்படவில்லை.

திருமணம் மட்டுமே பெண்களுக்கான சமூக அங்கீகாரம் ஆகும். அல்லது பெண்களை தெய்வங்களாக்கி வழிபடுவதே கௌரவமாகும். அவ்வாறில்லையெனில் துர்க்கையம்மனின் தோற்றத்தை வெளிப்படுத்திய துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் உருவப்படத்துக்கு உயிருடன் வாழும் போதே பொட்டிட்டு மாலைசூட்டும் அவலம் கொழும்பில் ஏற்பட்டிருக்காது.

பெண்களுக்கு பூவும் பொட்டுமே பொதுச்சின்னமாகி விட்டது. சீதன முறைமைபற்றிச் சிறிதும் சிந்தனையிலேனும் பாதிப்பேற்படுத்தப்படவில்லை. சில 'தியாகங்கள்' அவ்வப்போது பேசப்பட்டாலும் சீதனம் சமூக நியதியாகிவிட்டது.

பெண்கள் 18 வயதில் சட்ட அங்கீகாரம் பெற்றாலும் தேசவழமைச் சட்டத்தின் கீழ் அவர்கள் 40 வயதில் திருமணமானாலும் தமது தனித்துவ ஆளுமையை இழந்தவர்களாக கருதப்பட்டு பராயமற்றவர்களாகவே (Minors) கணிக்கப்படுவர். அப்பெண்மணி தாரமாகி, தாயாகி, பேத்தியானாலும் தனது சொத்துரிமை தொடக்கம் சகல சட்ட நடவடிக்கைகளிலும் தனது நாயகனின் பூரண சம்மதத்துடனேயே கருமங்களை ஆற்றலாம். கைம்பெண்னால் மட்டுமே விலக்குண்டு.

தமிழ்த்தலைவர்கள் பலர் சட்டமேதைகளானபோதும் தமிழ்ப்பெண்களின் உரிமை-கடமைகள் பற்றிய தேச வழமைச் சட்டத்தின் பாதிப்புக்களைப் பாராமுகமாகவே இருந்துள்ளனர்.

வீட்டுவேலைகளுடன் முடக்கப்படுவதும் அல்லது சற்று அதற்கு மேலாய் எனில் ஆசிரியராகவோ, தாதியாகவோ வேலை பார்ப்பதும் ஏற்றுக்கொள்ளப் படலாம். கூலித்தொழிலாளர்கள் மத்தியில் ஆண்-பெண் சம்பள வேறுபாடு முதல் அனைத்து தனியார் நிறுவனங்களிலும் பெண்கள் மீது பாரபட்சம் காட்டப்படுவதே தமிழர் வாழ்வியலின் இயல்பாகிவிட்டது. பெண்கள் மீது வீட்டு வேலை திணிக்கப்பட்டுள்ளதுடன் 'பூவையர்க்கு பொது ஞாயம் கூடாது' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 12ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com



# சவுதி அரேபியாவில் புதிய எழுச்சிக்கான அடையாளங்கள்

தென்னவன் கலை

11 செப்டம்பர் 2001 அன்று நியூயோர்க்கில் அமெரிக்காவிலேயே உயரமான கட்டடங்களான வர்த்தக கழக கோபுரங்களை இரு விமானங்கள் இடித்துச் சரித்ததை இப்போதும் பலர் மறந்திருக்கமாட்டார்கள். சிலர் மறக்கத் தான் விரும்பினாலும் அமெரிக்க தொலைக்காட்சி சேவைகள் அவர்களை மறக்கவிடாது. ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கும். அன்று நடந்த சம்பவத்தை உலகம் முழுவதும் தொலைக்காட்சியில் பார்த்த சிலர் கோபமுற்றனர். சிலர் சந்தோஷப் பட்டனர், சிலர் அதிர்ச்சியுற்றனர். இப்படி பல தரப்பட்ட உணர்வுகளை உலக மக்கள் காட்டினர். விமர்சனத்திற்குட்பட்ட மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் பாலஸ்தீன சிறுவர்களின் வீடியோப் படத்தைக் காட்டிய "உலகத் தொலைக்காட்சி" சி.என். என். மறைமுகமாக அமெரிக்க மக்கள் மனதில் பாலஸ்தீனர் மீதான வெறுப்பை அதிகரிக்க விஷமத்தனமாக முயற்சித்தது. ஆனால் இவை எல்லாவற்றையும் விட யாருமே எதிர்பாராத ஒரு நாட்டு மக்கள் அன்றைய தினம் ஆடு வெட்டி விருந்து கொடுத்து மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்கள். "எங்களுடைய பெடியன்கள் சாதித்து விட்டார்கள்" என்றும் பெருமை பேசினார்கள். இதைப் பற்றி (தெரிந்திருந்தும்) இதுவரை எந்தவொரு செய்தி நிறுவனமும் தெரிவிக்கவில்லை. உங்களில் பலர் இப்போது தான் கேள்விப்படுவீர்கள். இவ்வாறு மூடி மறைக்கப்பட்ட செய்திக்குரிய அந்த மக்கள் யார்? சவூதி அரேபியர்கள்!

அதிர்ச்சியாகவிருக்கலாம். ஆனால் உண்மை. விமானக் கடத்தலில் ஈடுபட்ட அந்த வாலிபர்களில் பெரும்பான்மையானோர் சவூதி அரேபியாவின் வசதி படைத்த குடும்பங்களில் இருந்து வந்தவர்கள். அவர்கள் மத நம்பிக்கையாளர்களும் அல்ல. மது, மாதில் மயங்கிக் கிடக்கும் சாதாரண பணக்கார இளைஞர்கள். இன்னுமொன்றையும் குறிப்பிட வேண்டும். அமெரிக்க அரசு வெளியிட்ட விமானக் கடத்தல்களின் பட்டியலில் இடம்பெற்ற ஒரு நபர் முஸ்லிம் அல்ல, கிறிஸ்தவர்! லெபனானைச் சேர்ந்தவர். இவ்வளவிருந்தும் சவூதி அரேபியா மீது எந்தவொரு குற்றச்சாட்டும் வராமல் அமெரிக்க அரசு பார்த்துக் கொண்டது. முறையின்படி அமெரிக்கா சவூதி அரேபியா மீது தான் குண்டுகள் போட்டிருக்க வேண்டும். ஆனால் மக்களின் கவனத்தை திசை திருப்பி ஆப்கானிஸ்தானைக்காட்டி, ஏற்கனவே யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட மக்கள் மீது தானும் குண்டு போட்டு பழி தீர்த்துக் கொண்டது. இதைத்தான் பழி ஓரிடம், பாவம் இன்னொரு இடம் என்று சொல்வார்களோ. இப்போது உங்கள் முன்னாள் உள்ள கேள்வி : எதற்காக சவூதி அரேபியாவை மறைக்க வேண்டும்?

ஆங்கிலேயரிடமிருந்து தானமாகப் பெற்ற அரேபிய நிலப்பரப்பிற்கு "சவூதி அரேபியா" என பெயரிட்டு இன்று வரை நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆண்டு வரும் மன்னர் பரம்பரை' ஊதாரித்தனத்திற்கு பெயர் போனது. முழு நாட்டையும் குடும்பச் சொத்து போல ஆண்டு வருகின்றனர். மந்திரிகள் முதல் உயர் அதிகாரிகள் வரை அனைவரும் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். சவூதி அரேபியாவின் அரசியலமைப்பு இரண்டு எழுதப்படாத ஒப்பந்தங்கள் மீது ஏற்படுத்தப்பட்டது. ஒன்று. மன்னர் குடும்பத்திற்கும் குடிமக்களுக்கு மிடையில்: குடிமக்களுக்கு தேவையான வாழ்க்கை வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்படும். எண்ணை விற்ற வருமானத்தில் இலவச வீடு, இலவச மருத்துவம் என மானியங்கள் அள்ளி வீசப்பட்டன. அதற்குப் பதிலாக மக்கள் மன்னராட்சிக்கெதிராக பேசக் கூடாது. தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், சுதந்திர ஊடகங்கள், கருத்துச் சுதந்திரம், கூட்டம் கூடும் உரிமை, சிறுபான்மை மதங்கள் இவை எல்லாவற்றுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது. ஒப்பந்தம் மன்னர் குடும்பத்திற்கும் மதத் தலைவர்களுக்கு மிடையில் : மதத் தலைவர்கள் என்றால் பழமைவாதத்தை பேணும் வாஹபிஸ பிரிவைச் சேர்ந்தவர்கள் மட்டுமே. பள்ளிவாசல்கள் கூட பொலிசாரின் கண்காணிப்புக்குட்படுவதுண்டு. இந்த பழமைவாத மதத்தலைவர்கள் தான் சவூதி அரேபியா இன்றும் மத அடிப்படைவாத நாடாக இருப்பதற்கு காரணம். அரசியல் தலைமையும், மதத் தலைமையும் ஒருவரில் ஒருவர் தங்கியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தாலிபான் இயக்கம் மதம் என்ற பெயரில் நவீன உலகத்தோடு ஒத்துப்போகாத புராதன பழக்க வழக்கங்களைப் பின்பற்றிய போது அதை மேற்குலக அரசியல்வாதிகளும் செய்தி நிறுவனங்களும் உலகம் முழுவதும் பிரசாரப்படுத்தினர். ஆனால் தாலிபான் என்ன செய்தார்களோ அவற்றை விட மோசமான சட்டங்கள் சவூதி அரேபியாவில் நடைமுறையில் இருந்து வருவதை யாரும் கண்டு கொள்வதில்லை. வேறு எந்த அரபு நாட்டிலும் இல்லாத கட்டுப்பாடுகள் அங்கே உண்டு. பெண்கள் வாகனம் ஓட்ட முடியாது. தலை முதல் பாதம் வரை கறுப்பு ஆடை அணிந்தே வெளியே செல்ல வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் எனத் தனித்தனி உணவு விடுதிகள், பூங்காக்கள் உள்ளன. சினிமா தியேட்டர்கள் கிடையாது. மதுபானம் மணத்தாலே சிறைத்தண்டனை. வீட்டினுள் கூட பிற மதக் கடவுளரின் படங்களை வைத்திருக்கத் தடை... இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இதைவிட களவெடுத்தால் கை வெட்டுதல், விபசாரம் செய்தால் கல்லெறிந்து கொல்லுதல் போன்ற சட்டங்கள் சர்வசாதாரணம். இவற்றை கண்காணிக்கவென தனியாக மதப் பொலிஸ் கூட இருக்கின்றது. அண்மையில் ஒரு முறை மெக்காவில் ஒரு மகளிர் பாடசாலை விடுதி தீ விபத்துக்குள்ளான போது அரைகுறை ஆடைகளுடன் அலறியடித்துக் கொண்டு வெளியேறிய இளம் பெண்களை மறித்த மதப் பொலிஸ் உள்ளே போய் உடலை மூடும் ஆடை அணிந்து வருமாறு விரட்டியது. திரும்பிப் போன பெண்கள் தீக்கிரையாகி இறந்து போனார்கள். இது மதப் பொலிஸ் நடத்தும் காட்டுத் தர்பாருக்கு சாட்சியம்.

சவூதி அரேபியாவில் சுமார் 60 இலட்சம் வெளிநாட்டு தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். சவூதி அரேபியா அடித்தட்டு தொழிலாளர் சமூகத்தை இவர்கள்தான் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். ஆனால் ஒப்பந்த தொழிலாளர்களான இவர்கள் பல உரிமைகளற்றவர்களாக வைக்கப்பட்டுள்ளனர். சவூதி அரேபியாவின் உழைக்கும் வர்க்கம் முழுவதும் வெளிநாட்டவர் என்பதால், சாதாரண கல்வி, தொழில்நுட்ப அறிவற்ற சவூதி அரேபியர்கள் கூட கீழ் மத்தியதர வர்க்கத்திற்குள் அடங்கி விடுகின்றனர். அரச ஊக்குவிப்பினால் முன்னுக்கு வந்தவர்கள் பலர். உதாரணமாக ஒரு சவூதி பிரசை மருத்துவக் கல்வியை முடித்தால் அவருக்கு 2500 அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கப்படும். பல முகாமைத்துவ பதவிகளில் உரிய தகுதியில்லாவிட்டாலும் சவூதி பிரசைகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. இவ்வாறு சவூதி அரேபியாவில் குறுகிய காலத்திற் குள்ளேயே படித்த மத்தியதர வர்க்கம் உருவானது. பழமைவாத நிலப் பிரபுத்துவ ஆட்சியை விரும்பும் மன்னர் குடும்பம் தவிர்க்க வியலாது இப்படி ஒரு மத்தியதர வர்க்கத்தை உருவாக்கியமை காலத்தின் கட்டாயம் என்றே சொல்ல வேண்டும்.

முன்பு ஐரோப்பியாவில் உருவான மத்தியதர வர்க்கத்தின் எழுச்சியானது தத்தமது நாட்டு மன்னர்களோடு முரண்பட்டுப் பின்னர் புரட்சிக்கு வழி வகுத்தமை வரலாறு சொல்லும் பாடம். மத்திய கிழக்கு அரபு நாடுகளிலும் அது போன்றதொரு மத்தியதர வர்க்கம் இப்போது வளர்ந்து வருகின்றது. வளைகுடா நாடுகளின் மன்னர் குடும்பங்கள் அரசியல் என்றால் அது தாங்கள் மட்டும் தான் என்று கைகளில் வைத்திருந்தனர். அண்மைக் காலங்களில் குவைற், பாஹ்ரையின் போன்ற சிறிய நாடுகள் காலத்திற்கேற்ப பாராளுமன்றங்களை அங்கீகரித்து மத்தியதர வர்க்கப் பிரதிநிதிகளுடன் அதிகாரத்தைப் பங்கு போட்டு வருகின்றனர். அங்கே பொருளாதார ரீதியாகவும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக பாஹ்ரையினில் முக்கிய வருமானம் தருவது

> **செப்டம்பர் 11 தாக்குதலை ஆதரித்து பின்லேடனைப் போற்றும் சவுதி அரேபியர்கள் அமெரிக்காவிற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள் மத்தியதர வர்க்கம் புதிய எழுச்சிக்கு தயாராகிறது.**

இன்று எண்ணை விற்பனையல்ல, வங்கிகளேயாகும். டுபாய், ஆயிரம் ஆண்டு கால பழமை வாய்ந்ததுமான, சர்வதேச வர்த்தக மையம் என்ற பெயரை பெறப்பார்க்கின்றது. ஓமான் குறைந்த தர தொழில்களில் கூட வெளிநாட்டவரை அகற்றி விட்டு உள்ளூர் ஓமானியரை அமர்த்தி வருகின்றது.

ஆனால் சவூதி அரேபியா மட்டும் மிகப்பெரிய நாடாக வந்திருந்தபோதும் இத்தகைய ஜனநாயக மாற்றங்களுக்கு இடம் கொடுக்க இன்றுவரை முன்வரவில்லை. பெட்ரோல் பணத்தில் மக்களுக்கு சுகபோக வாழ்க்கையை கொடுத்துக் கொண்டிருந்த வரை மக்கள் வாய் மூடி மௌனிகளாக விருந்தார்கள். ஆனால் கடந்த 10 வருடங்களாக நிலைமை மாறி வருகின்றது. மன்னர் பஹ்த்தின் சுகயீனம் காரணமாக பல பொறுப்புக்களை ஏற்றிருக்கும் இளவரசர் அப்துல்லா கூட, "எழுபது, எண்பதுகளில் இருந்த பொற்காலம் போய் விட்டது". என்று பகிரங்கமாக ஒப்புக் கொள்ளும் நிலை வந்துள்ளது. அந்தப் பொற்காலத்தின் போது சவூதி அரேபியா அமெரிக்காவுக்கு நிகரான தனிநபர் வருமானம் பெறும் நாடாகவிருந்தது. இன்று சராசரி தனிநபர் வருமானம் மெக்சிகோவின் நிலைக்கு தாழ்ந்து விட்டது. ஏழைகளே இல்லையென்ற காலமிருந்தது. ஆனால் இன்று ஒரே நகரத்தில் பணக்காரக் குறிச்சி, ஏழைக் குறிச்சி எனப் பிரிந்து விட்டதுடன், பணக்கார வீடுகள் வெளியே கொட்டும் எஞ்சிய உணவில் ஏழைகள் வயிற்றுப் பசி போக்கும் அவலம் நடக்கிறது. இந்த மாற்றம் எப்போது, எப்படி ஏற்பட்டது?

சவூதி அரேபியா இன்றும் கூட உலகில் எண்ணை வளம் கூடிய நாடுதான். நிலத்தின் அடியில் இருக்கும் எண்ணையை இன்னும் எவ்வளவு காலத்திற்கு எடுக்க முடியும்? எண்ணைக் கிணறுகள் வற்றிக் கொண்டு வருவதால் எடுக்கும் அளவை குறைக்க வேண்டியுள்ளது. அதன் அர்த்தம் வருமானமும் குறையும். மேலும் அடிக்கடி தளம்பும் எண்ணை விலை, முன்னரைப் போல் விலையை அதிகரிக்க விடாமல் செய்து விடுகின்றது. மறுபக்கத்தில் பெருகிவரும் சனத்தொகையும் அதற்கு ஈடு கட்ட முடியாத, வளராத தேசிய பொருளாதாரம், இது போதாதென்று குவைத் மீதான ஈராக்கின் படையெடுப்பு. அதைத் தொடர்ந்த வளைகுடா யுத்தம், யுத்தச் செலவில் கணிசமான பகுதியை சவூதி அரேபியா பொறுப்பேற்க வேண்டியேற்பட்டது. விளைவு மக்களின் வருமான இழப்பில் போய் முடிந்தது. வழக்கம் போலவே வருமான இழப்பால் பாதிக்கப்பட்ட மக்களை வறுமை கவ்விக் கொண்டது. வாய் நிறைய கிடைத்த காலத்தில் அரசியல் பேசாத மக்கள் இப்போது வயிற்றுப் பாட்டுக்கு கஷ்டம் வந்த பின்னால் கலகக்குரல்களை எழுப்புகிறார்கள். அங்கே எவ்வளவு தூரம் அரசுக்கெதிரான எதிர்ப்பு வலுத்திருக்கின்றது என அறிவது கடினம். ஆனால் அவ்வப்போது இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்கள் நிலைமை எவ்வளவு தீவிரமாக விருக்கின்றது என்பதை உணர்த்தியது. சந்தேக நபர்கள் பலர் சிறைப்பிடிக்கப் பட்டாலும், இவற்றின் சூத்திரதாரிகள் பற்றிய விபரங்கள் இன்னும் மர்மமாகவே இருக்கின்றன.

'இம்' என்றால் சிறைவாசம் என்றிருக்கும் நாட்டில் மக்கள் தமது அரசாங்கத்தை எதிர்க்கத் துணிய மாட்டார்கள் என்றுதான் ஆட்சியிலுள்ளவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் கடுமையான தண்டனைகளுக்கு அஞ்சாமல் பலர் எதிர்க்கத் துணிந்திருப்பது குறிப்பிடத்தக்கது. உள்ள பிரச்சனைகள் போதாதென்று அந்நிய நாட்டு இராணுவமான அமெரிக்கப் படைகள் அங்கு நிரந்தரமாகவே தங்கிவிட்டன. இது குறித்து தான் சவூதி பிரசை பின்லாடனுக்கும், சவூதி அரசுக்கு மிடையில் முரண்பாடுகள் வெடித்து இன்று நிரந்தப் பகையாளிகளாகி விட்டனர். இன்று பின்லாடனைப் பிடிப்பதற்காக அமெரிக்காவைவிட சவூதி அரேபியா மும்முரமாக நிற்கின்றது. பின்லாடன் கூட தனது போராட்டத்தை "சவூதி அரேபியாவின் ஊழல்வாத ஆட்சியாளர்களுக்கெதிரான விடுதலைப் போராட்டம்" என்றே அறிவித்து வந்தார். பின்லாடன் மதத்தின் மேல் காட்டிய பற்று, நேர்மை என்பன பல சவூ அரேபியர்களைக் கவர்ந்தது. இவற்ற விடப் பல காலம் எதிர்ப்பதற் ஆளில்லாமல் இருந்த மன்ன குடும்பத்தை தட்டிக் கேட்க ஒருவ வந்து விட்டான் என்ற பிரமிப்பு பரவலாக உள்ளது. சவூதி அரேபி கடுமையான நடவடிக்கை எடுக்க தயங்குவதற்கு பின்லாடனுக் சாதாரண மக்கள் மத்தியில் உள் ஆதரவு மட்டுமல்ல, அரசின் அதிகா கள் மட்டத்தில் உள்ள செல்வாக்கு ஒரு காரணம். பின்லாடன் ஆப்கானிஸ் தானில் இருந்த காலத்தில் கூட சவூ அரேபிய தூதுவரகத்தில் இருந் உதவிகள் கிடைத்தன.

"எனது தேசத்தை விடுதலை செய்வதை நீங்கள் பயங்கரவாதம் என்று சொன்னால், அந்தப் பட்டத்தை ஏற்றுக் கொள்ள விரும்புவேன்" என்று ஒரு பத்திரிகையாளருக்கு பேட்டியின் போது பின்லாடன் தெரிவித்தார் பின்லாடனை ஆயிரக்கணக்கான சவூதி இளைஞர்கள் பின்பற்றிய போதும் பின்லாடனுக்கு சவூதி அரேபியாவின் விடுதலைப் போருக்கு தலைமை தாங்க தகுதி கிடையாது என வாதாடுவோரும் உள்ளனர். பின்லாடன் குடும்பம் சவூதி அரேபிய மன்னர் குடும்பத்திற்கு ஒரு வகையில் உறவினர்கள் என்பதுதான் காரணம். இதுவரை பல இரகசியக் குழுக்களும், தனி நபர்களும் சவூதி அரசுக்கொதிராக போராடி வந்த போதிலும், யாருமே பின்லாடன் அளவுக்கு நிறுவனமாகவுமில்லை, பிரபலமாகவுமில்லை. சவூதி மன்னருக்கு எதிராகக் கூட ஃபத்வா (ஒரு மதத் தலைவரால் பிறப்பிக்கப்படும் மரண தண்டனை உத்தரவு) பிறப்பிக்க ஒரு மதத் தலைவர் துணிவுடன் முன்வந்தார். ஆனால் சவூதி, அமெரிக்க அரசுகள் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும், பின்லாடனுக்கு எதிராக ஃபத்வா உத்தரவு போட இதுவரை எந்தவொரு மதத் தலைவரும் முன்வரவில்லை. இதிலிருந்து சவூதி அரேபியாவில் எந்தளவிற்கு பின்லாடனுக்கு செல்வாக்கு இருக்கின்றது என்பது தெளிவாகும்.

பின்லாடன் இப்போது தனது ஜிகாத்தை சவூதி அரேபியாவில் இருந்து "இஸ்லாமிய சர்வதேசியம்" என விரிவுபடுத்தி விட்டபோதும், சமயம் கிடைக்கும் போதெல்லாம் சவூதி அரேபியாவின் ஊழல்வாதிகளான மன்னர் குடும்பத்தை தாக்க தயங்குவதில்லை. அமெரிக்கா மீது போர் தொடுத்ததற்கும் நீண்டகாலமாக இருந்துவரும் அமெரிக்கா, சவூதி அரேபியாவுக்கிடையிலான "புனித உறவு" ஒரு முக்கிய காரணம். நியூயோர்க் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் எவ்வளவு தூரம் பின்லாடனோடு தொடர்புடையவர்கள் என்பது தெரியாது. இதுவரை கவனிக்கப்படாத வேறோரு சக்தி கூட இயங்கலாம். அவர்கள் தருணம் வரும்போது வெளிப்படலாம். உலகின் பெரிய உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. கூட இன்று வரையில் பல உண்மைகள் தெரியாது தடுமாறிக் கொண்டுதான் இருக்கின்றது.

எது எப்படியிருந்த போதிலும் சவூதி அரேபியாவின் மத்தியதர வர்க்கத்தின் எழுச்சி ஊழல் மயமான மன்னராட்சிக்கு சவாலாகவிருப்பதை நீண்டகாலத்திற்கு மறைக்க முடியாது. அமெரிக்கக் கல்வி, பணம் என்பன கூட இந்த எழுச்சியை அடக்க அல்லது திசை திருப்ப உதவவில்லை. ஏனெனில் இது அரசியல் விழிப்படைந்த சமூகம். அவர்கள் கேட்பது அதிகாரப் பகிர்வு. இஸ்லாம் இந்த அரசியல் இலக்கை அடைய அவர்கள் தேர்ந்தெடுத்த பாதை. உலக வரலாறு இது போன்ற முன்னோடியை ஐரோப்பாவில் கண்டுள்ளது. இங்கிலாந்தில் 16ம் நூற்றாண்டில் மன்னராட்சியை ஒழித்து குடியரசை நிறுவிய குரொம்வெல்லும் அவரது ஆதரவாளர்களும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதவாதிகளாக விருந்தனர். அரபு நாடுகளின் நிலப்பிரபுத்துவ மன்னர்களுக்கெதிராக எழுந்து வரும் மக்கள் அலை அங்கே பல அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த உள்ளது. வளைகுடாப் போரில் ஈராக் மீதான இராணுவ நடவடிக்கையை அமெரிக்கா "பாலைவனப் புயல்" என்றழைத்தது. அந்தப் புயல் இன்று திசை மாறி சவூதி அரேபியாவில் வீசிக் கொண்டிருக்கிறது. ● ● ● ● ●

படிப்பகம்

www.padippakam.com



# நித்தியானந்தனின் சித்து விளையாட்டுக்கள்

ஒரு காலத்தில் தமிழ்த் தேசிய வாதத்தின் சூட்டில் குளிர் காய்ந்த மு. நித்தியானந்தன் ஒரு விசயத்தில் மட்டும் இடம் புரளாமல் இருக்கிறார். அதுதான் இவருடைய இடதுசாரி எதிர்ப்புச் சதி வேலை. இப்போது, இந்திய அரசாங்கத்தின் அரவணைப்பில் இலண்டன் மாநகரில் இயங்குகிற தொலைக்காட்சி நிறுவனமொன்றில் தமிழ் நிகழ்ச்சிகளில் உதவியாளராக இருக்கிறார் இந்த மாஜி மனிதர்.

இடதுசாரிகளுக்கு எதிராக நேராகப் போர்க்கொடி தூக்கத் திராணியில்லாத இவர் பினாமிகளை வைத்தே காரியம் நடத்தி வந்திருக்கிறார். ஐரோப்பாவிலிருந்து கைலாசபதியையும் சிவத்தம்பியையும் தாக்குவதற்கு எஸ்.பொன்னுத்துரை என்ற அண்டப் புளுகனுடைய கட்டுக் கதைகளுக்கு மேலே தன்னுடைய சொந்தச் சரக்குகள் சேர்த்து ஐரோப்பாவில் புகல் அடைந்த புது எழுத்தாளக் குஞ்சுகள் மூலம் பிரான்ஸ் முதல் கனடா வரை பரப்புவதில் மும்முரமாக இருந்தார். இவர் சொன்னதை நம்பிக் குஞ்சுகள் தமது பெயரைக் கெடுத்துக் கொள்ள ஆயத்தமாக இல்லாததால், இந்தக் கதைகளை மாறிமாறிப் புனைபெயரிலேயே எழுதி வந்தன. என்றாலும் விசயம் தெரிந்த வட்டாரங்களில் கதைகள் எதுவும் எடுபடவில்லை. பிறகு மு. நி. தானே ஒரு புனைபெயரில் கைலாசபதி மீது ஒரு தாக்குதலை எழுதி நன்றாக வாங்கிக் கட்டிய பிறகு அந்தப் புனைபெயரும் மாஜியாகி விட்டது.

தன்னை ஒரு இலக்கியப் பிரமுகராகக் காட்டிக் கொள்ள விரும்பினாலும் அதற்கு அவசியமான சரக்கு இல்லாததால், அவர் கூட்டங்களில் வக்கணையாகப் பகிடி விடுவதன் மூலம் தனக்கென்று ஒரு இடத்தைப் பிடிக்க முயற்சித்தாலும் அவரை ஒரு இலக்கியப் பிரமுகராக இன்னமும் யாருமே ஏற்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் இவர் இருந்த காலத்தில் மார்க்சிச எதிர்ப்புடையவர்களுடன் இவருக்கும் இவருடைய முன்னாள் மனைவியான நிர்மலாவுக்கும் நல்ல நெருக்கம் இருந்தது. தமிழ்த் தேசிய வாதம் எழுச்சி பெற்ற 1970 களின் பின் பகுதியிலும் 1980களிலும் விடுதலைப் புலிகளின் முதுகில் சவாரி செய்து தனக்கென்று ஒரு இடத்தைத் தேடப் போய் பயங்கரவாதி என்று கைது செய்யப்பட்டார். புலிகள் உதவியால் சிறையிலிருந்து தப்பித் தமிழ்நாடு போன போது இவருக்கு இலங்கையில் ஒரு "மாவீரர் இமேஜ்" இருந்தது. என்றாலும் இவருடைய கணக்குப் பிழைத்து விட்டது. போராளிகளுக்குத் தன் பல்கலைக்கழகப் பதவியைக் காட்டி வழி தெரிவிக்கும் பிரமுகராக இருந்து வரலாம் என்ற கணக்குப் பிழையாகி விடவே, புலிகளுடன் முரண்பாடாகி அரசியல் அஞ்ஞாதவாசம் போய் ஐரோப்பா போய்ச் சேர்ந்தார்.

புலிகளிடமிருந்து பாதுகாப்பான தொலைவில் இருந்த தைரியத்தில் புலிகளுக்கு எதிராகக் கொஞ்சம் பேசிப் பார்த்தார். இங்கே புலிகளுடைய உறுமல் கேட்ட பின்பு பேச்சை மெல்ல நிறுத்திவிட்டு பினாமிகள் மூலம் காரியம் பார்க்கத் தொடங்கினார். இவருடைய புலி எதிர்ப்பு யோக்கியதையை ஐரோப்பாவில் பலர் கேள்விக் குறியாக்கினார்கள். புலிகளுடன் பிரச்சினைப்பட்ட சில மாஜி புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். பேர்வழிகளுக்கும் இவருக்கும் அப்போது தான் புது நேசம் வந்தது. என்றாலும் இவர் தேடுகிற சிநேகிதங்களும் மரியாதைகளும் அற்ப ஆயுளிலேயே போய் முடிவது வழக்கம். ஏனென்றால் இவருடைய சிண்டு முடிகிற வேலைகள் இவருக்கே கடைசியில் ஆபத்தாகி விடுகின்றன.

இலங்கையில் இருந்த போது, பாலேந்திராவின் அவைக்காற்றுக் கலைக் கழக நிழலில் ஒண்டியிருந்தார். இவருடைய பங்களிப்பு என்று குறிப்பிட்டுச் சொல்லும்படி இலங்கையில் எதுவுமே இருக்கவில்லை. பாலேந்திரா லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தார். பிறகு போன நிர்மலா நித்தியானந்தன் லண்டனில் அவைக்காற்றுக் கலைக் கழகத்தில் மீண்டும் இணைந்து பங்களித்து தனிப்பட்ட காரணங்களால் விலகிப் போனவுடன், இவர் அவைக் காற்றுக் கலைக் கழகத்துடன் போய் ஒட்டிக் கொண்டார். லண்டனில் இவருடைய பங்களிப்பு முன்னிலும் அற்பமானதாகிவிட்டது. இவருடைய குழிபறிப்பு வேலைகள் மட்டும் வழக்கம் போல தொடர்ந்தன. அப்படியும் இவரால் எதையுமே சாதிக்க முடியவில்லை. அவர்களும் இவரை ஓரங்கட்டி விட்டார்கள்.

புலிகளின் செல்வாக்குள்ள இடங்களில் இவரை யாரும் அண்டவில்லை.

**மார்க்சிசத்தை எதிர்த்து தாக்க பின் நவீனத்துவ மொட்டைக் கத்தியுடன் நிற்கிறார் மு. நி.**

ஆனாலும் எதிர்ப்புக் கருத்துக்களுடன் இயங்கிய உயிர்ப்பு, எக்ஸிஸ்–உயிர் நிழல், அதிலிருந்து பிரிந்த எக்ஸில் போன்ற எதிலுமே இவருக்கு இடம் இல்லை. மிகவும் தனிமைப்பட்டுப் போன இவருக்கு இப்போது ஒரே ஒரு இலக்கியப் புகலிடம் பத்மநாப ஐயர் என்கிற நூல் வெளியீட்டாளர் மட்டுமே. ஐயர்வாளுக்கும் நித்தியானந்தனுக்கும் பொதுவாக உள்ள ஒரு சில விசயங்களில் கைலாசபதி எதிர்ப்பும் மார்க்சிச எதிர்ப்பும் முக்கியமானவை. இப்போதைக்கு ஐயர் தயவில் நித்தியானந்தனுக்கு இடைக்கிடை கூட்டங்களில் பேசக் கிடைக்கும். ஐயர் வருசாவருசம் வெளியிடுகிற தொகுப்பு நூலில் இந்த முறை இரண்டு கட்டுரைகளும் எழுதக் கிடைத்திருக்கிறது.

மாக்சிசத்தை எதிர்க்கப் பின் நவீனத்துவம் என்கிற அஸ்திரம் பிரான்சிலிருந்து இந்தியா போய் அங்கேயும் மொட்டையான பிறகு இப்போது நித்தியானந்தனிடம் வந்து கிடைத்திருக்கிறது. அந்த மொட்டைக் கத்தியால், அது என்ன விசயம் என்று கூட விளங்காமல், எதையெல்லாமோ எழுதித் தள்ளியிருக்கிறார். நித்தியானந்தனுக்கு எந்த இலக்கியக் கொள்கை பற்றியும் எழுத குறைந்த பட்ச அறிவு கூட இல்லை என்பதை "கண்ணில் தெரியுது வானம்" என்ற தொகுப்பு நூலில் உள்ள கட்டுரை தெளிவாகக் காட்டியிருக்கிறது. கூட்டத்தில் பேசும்போது நக்கல் அடிக்கிறதும் கட்டுரை எழுதுவதும் வேறு விசயம் என்று இவருக்கு விளங்கியதால்தான் இவ்வளவு காலமும் யாருடைய கருத்தையாவது இரவல் வாங்கித் தன்னுடையது போல பேசிப் பேசி வந்தார். நுணலும் தன்னுடைய வாயாலே கெடும் என்கிறது போலே நித்தியானந்தனும் தன்னுடைய பேனையாலே கெட்டார்.

நித்தியானந்தனுடைய இன்னொரு ஆயுதம் அவருடைய மலையக அடையாளம். தன்னை மலையக இலக்கியத்தின் ஒரு பிரமுகராக காட்டிக் கொள்ள இவர் எடுத்த முயற்சிகள் இவருக்கு ஒரு சில விசுவாசிகளை உண்டாக்கியிருக்கிறது. இலங்கையில் ஒரு புத்தகத்தைப் பத்மநாப ஐயர் உதவியுடன் போட்டதன் மூலம் தெளிவத்தை ஜோசப்பை வளைத்துப் போட்டார். தன்னுடைய தகப்பனார் 'சுடரொளி' முத்தையா பிள்ளை பேரில் ஒரு சிறுகதைப் போட்டியும் நூல் வெளியீடும் இன்னொரு "சாதனை". மலையக மக்களுடைய வாழ்வை வறறச் சுரண்டுகிற ஒரு அரசியலுக்கு எதிராக இந்த நித்தியானந்தன் எப்போது, என்ன செய்திருக்கிறார்? 1990க்குப் பின் லண்டனில் இருந்த முன்னாள் போராளிக் குழுக்களிடையே மலையக மக்கள் முன்னணிக்கு ஆள்பிடித்துக் கொடுக்கிற வேலையில் இறங்கினார். மலையக மக்கள் முன்னணி காதர் அங்கே உறவுகளை ஏற்படுத்த முன்னாலேயே ம.ம.முவுக்குள் பிளவும் ம.ம.மு.வுடைய அரசியல் வங்கலோட்டும் அம்பலமாகி எல்லாமே குழம்பி விட்டது.

நித்தியானந்தன் மலையக அடையாளத்தைப் பாவித்து தனக்கு ஒரு இடம் தேடப் பார்க்கிறார். அது பற்றி நமக்குக் கவலையில்லை. கருத்து வேறுபாட்டைப் பாராமல் மலையக எழுத்தாளர்களை ஊக்குவிககத் தம்மாலான உதவி செய்த துரை விஸ்வநாதன் (துரைவி) போல நல்லவர்கள் பலர் மலையகத்தில் இருந்திருக்கிறார்கள். நித்தியானந்தனிடமோ ஒரு இடதுசாரி விரோத வன்மம் இருக்கிறது. அவர் என்றைக்குமே நேர் நேராக விவாதிக்கிறதற்குப் பதிலாக அங்கொன்றும் இங்கொன்றுமாக மார்க்சிச எதிர்ப்புக் கருத்துக்களைத் தூவுவதும் ஆள் வைத்த அடிக்க முயல்வதும் ஏன்?

நித்தியானந்தனுடைய வர்க்க அடிப்படை வசதி படைத்த சிறு முதலாளியுடையது. தன்னை ஒரு முற்போக்காளராகக் காட்டிக் கொள்ள முயற்சித்த காலத்திலும் யாழ்ப்பாணத்தில் இருந்த மார்க்சிச எதிர்ப்புப் புத்திசீவிக் கூட்டத்துடன்தான் இவருக்கு நேசம் இருந்தது. தேசியவாத அலை எழுந்த போது அதில் ஏறி மேலே வர முயற்சித்துக் கவிழ்ந்து விழுந்தார். அப்போது கூட இடதுசாரிப் போக்கு இருந்த தமிழ் இளைஞர் இயக்கங்களை விட்டு இவர் புலிகளை நாட இரண்டு நோக்கங்கள் இருந்தன. ஒன்று புலிகளிடம் வலிமை இருந்தாலும் புத்திசீவிகள் குறைய என்பதால் ஆலை இல்லா ஊருக்கு இலுப்பம் பூச் சக்கரை மாதிரி புத்திசீவி நாட்டாண்மை பண்ணலாம் என்ற அற்ப ஆவல். மற்றது அவருடைய வர்க்க சுபாவமான இடதுசாரி எதிர்ப்பு.

பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்த போது கூட தனது துறையில் ஒரு ஆராய்வும் செய்யாத பெருமை இவருடையது. என்றாலும் ஐரோப்பாவிற்கு வந்து சேர்ந்த பிறகு இவர் வளைத்துப் பிடித்த எழுத்தாளக் குஞ்சுகள் இவரைப் பேராசிரியர் என்று சொல்வதை மறுக்கவோ தடுக்கவோ இவருக்கு மனம் வந்ததில்லை. தன்னை ஒரு போராளியாகக் காட்டித் தமிழ் இளைஞர்களை ஏமாற்றலாம் என்ற ஆசையிலும் மண் விழுந்தது. இன்று இவருடைய நடத்தைக்கு விரக்தியை விட்டால் வேறு விளக்கமே இல்லை.

**- ராஜா -**

# உயிர்நிழல் ஒரு நோக்கு




புகலிட சஞ்சிகைகள் புற்றீசல் போல் வெளிவந்த காலகட்டம் ஒன்று இருந்தது. இன்று அப்படி இல்லை. அவற்றில் பல நின்று போய்விட்டன. காரணம் காண்பது நீண்ட ஆராய்வாகலாம். தொடர்ந்து வருவனவற்றில் உயிர்நிழல் ஒன்றாகக் காணப்படுகின்றது. அதன் ஏப்பிரல்-யூன் 2002 இதழ் வெளி வந்துள்ளது. பாரிஸ் நாட்டிலிருந்து வெளி வரும் இச் சஞ்சிகையின் தொகுப்பாசிரியர்கள் லஷ்மி கலைச்செல்வன். பக்கங்கள் 102. நேர்த்தியும் கவர்ச்சியும் கொண்ட அட்டைப் படங்கள். எட்டுக் கட்டுரைகள், நான்கு சிறுகதைகள், நான்கு கவிதைகள், புத்தக விமர்சனம், அறிமுக விமர்சன நிகழ்வுத் தொகுப்பு, எதிர் வினைகள், விவாதக்களம் உட்பட மற்றும் எழுத்துக்களுடன் உயிர்நிழல் வெளிவந்துள்ளது. மேலும் பாரிஸ் நகரில் இடம்பெற்ற கே.டானியல் நினைவுக் கருத்தரங்கின் தொகுப்பு விரிவாக எழுதப்பட்டுள்ளது.

கலையரசன், அகரன் கட்டுரைகள் கடந்த கால சமகால வரலாற்றுக் குறிப்புகளுடன் பயன் உள்ள வகையில் எழுதப்பட்டுள்ளது. வாசுதேவன் எழுதியுள்ள புலம்பெயர்ந்தோர் மொழித் தேய்வு கட்டுரை எதிர்காலம் பற்றிய ஆழமான சிந்தனையைத் தூண்டும் ஒன்றாக அமைந்திருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத சித்திரவதை முகாம்கள் – லஷ்மியின் கட்டுரை பெண்கள் மீதான ஒடுக்குமுறையின் கோரத்தனத்தை வெளிக் காட்டுகிறது. கவிதைகள் காலத்தின் யதார்த்தங்களைச் சுட்டுகின்றன. வாழ்வின் துயரங்களை மீட்டுப் பார்க்கின்றன. டானியல் நினைவுக் கருத்தரங்கு பொறுப்போடு தொகுக்கப்பட்டுள்ளது. அதன் தாக்கம் மேலெழுந்து காணப்படுகின்றது. எதிர்வினையில் சேரனுக்கு தகுந்த அளவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனை வாங்கித் தெளியும் ஆற்றல் அந்த உதிரிப் புத்திசீவிக்கு இருக்குமோ தெரியாது. புலம்பெயர்ந்த சூழலின் பன்முக நெருக்கடிகள் மத்தியலும் கடுமையான உழைப்பின் மத்தியில் உயிர்நிழல் தொடர்ந்து வெளி வருவது வரவேற்க வேண்டியதாகும்.

இருப்பினும் உயிர்நிழலின் திக்கு திசை என்ன? அதன் இலக்கு எத்தகையது? எவ்வாறான வாசக அடித்தளத்தை நோக்கி வெளியிடப்படுகின்றது? ஒட்டு மொத்தமான கேள்வியாவது அதன் உலக நோக்கு என்ன என்பதேயாகும். இவற்றை அறிந்து கொள்ள ஆசிரிய பக்கங்கள் எழுதப்படுவதில்லை என்பது ஒரு பலவீனம். அவ்வப்போது கிடைப்பவற்றை மட்டும் கொண்டு பக்கங்களைக் கட்டுவதால் உயிர்நிழல் முழுமையாகவோ பயன்தருவதாகவோ அமைந்து விடாது. சமூக மேம்பாடு என்பதற்கும் அப்பால் சமூக மாற்றத்திற்கும் அதற்கான உலக நோக்குடனும் உயிர் நிழல் வெளிவருமாயின் காலத்தின் தேவையையும் கடமையையும் நிறைவு செய்வதாக அமைந்து கொள்ளும்.

**~ குகன் ~**

# சட்டமும் சமுதாயமும்

*சட்டம்*

*நிபுணர்களதும் நீதவான்களதும் வழக்கறிஞர்களதும்*
*காவந் துறையினரதும் கைகளில் பத்திரமாகவே உள்ளதால்,*
*கையும் மெய்யுமாக அகப்பட்ட கள்வனால்*
*சட்ட நுணுக்கங்களின் இடைவெளிகளில் நுழைந்து*
*தப்பி ஓட இயலுமாகிறது,*
*பட்டப்பகலில் நடுத்தெருவிற் கொலை செய்தவன்*
*சட்ட நூலேணியிலேறி நழுவ முடிகிறது,*
*குடிவெறியில் காரோட்டிய யம தூதனை*
*அளவோடு குடி என்று*
*செல்லமாய்க் கண்டிக்க நீதவானுக்கு முடிகிறது.*
*சட்டம் இருக்க வேண்டிய இடத்தில்*
*இருக்க வேண்டியவர்களின் வசம் இருக்கிறது.*
*அதை வைத்திருக்கிறவர்கள்*
*இருக்கிறவர்களின் கையில் இருக்கிறார்கள்.*

*சட்டம் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தும்*
*உரிய வேலையைச் செய்யவில்லை என்றெண்ணி,*
*ஒரு பெண்ணை பஸ் மோதிக் கொன்றதற்காகச்,*
*சட்டந் தெரியாதவர்கள்*
*பஸ்களை நொறுக்கி நீதி வழங்கினார்கள்,*
*அப்போது,*
*சட்டத்தைக் கவனமாய் வைத்திருக்கிறவர்கள்,*
*'மக்கள் சட்டத்தைத் தம் கையிலெடுப்பது*
*தவறு' என்று கண்டித்தார்கள்.*

*மக்கள் உண்மையிலேயே சட்டத்தைத் தம்கையில்*
*எடுத்துக் கொள்வார்களேயானால்,*
*எவ்வளவு நன்றாக இருக்கும்.*

– சிவசேகரம் –

## யூ.என்.பி..

6ம் பக்க தொடர்ச்ச..

யூஎன்.பி.யால் ஆரம்பிக்கப்பட்ட தமிழர்களுக்கெதிரான யுத்தத்திற்கு இன்று வரை எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டது? யுத்தத்தின் விளைவால் நாட்டில் ஏற்பட்ட சொத்து அழிவுகள் விபரம் வெளியிடப்படுமா? ஆயுதங்கள் வாங்கிய ஊழல்கள் வெளியிடப்படுமா? தரகுப் பணம் பெற்றவை வெளி வருமா?

உள்நாட்டு உள்ளூர் ஆட்சி அமைச்சர் அலுவிகாரை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலை வழங்க முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் இந்தியாவிடமிருந்து பெறப்படும் கடன்களில் எம்.பிக்களுக்கு இருநூறு வாகனங்களை வாங்கவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. மக்கள் மீது சுமையைத் தொடர்ந்தும் சுமத்திக் கொண்டு சகலவற்றிற்கும் முன்னைய அரசைத் திட்டிய வண்ணம் வசதியுடையவர்களின் நலன்களையே இந்த அரசு மும்முரமாக பாதுகாக்கின்றது. மக்களுக்கு முன்னைய அரசைக் காட்டிக் கொண்டு பெரு முதலாளிகளுக்கும் அந்நியக் கம்பெனிகளுக்கும் சகல வாய்ப்பு வசதிகளையும் வழங்கி வருகின்றது. இதுதான் யூஎன்.பி. என்பதை வாக்களித்த மக்கள் காணுதல் வேண்டும்.

## பெண்களின்...

7ம் பக்க தொடர்ச்சி...

இல்லை என்பதை இச்சந்தர்ப்பத்தில் காணக் கூடியதாக இருந்தது. தமிழர் கூட்டமைப்பு எம்.பீ.க்களும் இது பற்றி அறிவும் கிடையாது அக்கறையும் இல்லை. அவர்களது பார்வையில் அது சிங்களவர் பிரச்சினை அல்லது உழைப்பாளரது பிரச்சினையாகும். தமிழர்களில் தொழிலாளர்களும் இல்லை பெண்கள் தொழில் பார்ப்பதும் இல்லை என்பதே இந்த தமிழ்க் கனவான்களின் நோக்காகும். உலக மயமாதலினதும் முதலாளிகளினதும் அவற்றின் நலன்கள் காத்து நிற்கும் யூஎன்.பி.யினதும் அடிவருடிகளாக உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பெண்களின் உழைப்பை உறிஞ்சும் சட்டம் பற்றிய அக்கறை எப்படி வர முடியும்.

பெண்ணியம் பேசி நிற்கும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் எதுவும் இச் சட்டமூலம் பற்றி வாய் திறக்கவில்லை. காரணம் இது உழைக்கும் பெண்களோடும் மூலதனச் சுரண்டலோடும் சம்மந்தப்பட்ட வர்க்கப் பிரச்சினையே யாகும். இச் சட்டத்தைப் பற்றிப் பேசினால் முதலாளிகளுடன் பல்தேசிய நிறுவனங்களுடன் முரண்பட வேண்டி வரும். அவ்வாறு முரண்பட்டால் முதலாளித்துவ மூலதனக்கார மேற்கு நாடுகளிடமிருந்து பணக் கத்தைகள் வாங்க முடியாது என்பது அவர்களுக்கு தெரிந்ததாகும். எனவேதான் ஆணாதிக்கம், பாலியல் வன்முறை. மத்தியதர வர்க்கப் பெண்களின் பிரச்சனைகள் போன்றவற்றுடன் நிறுத்திக் கொள்கிறார்கள். அதற்கு கீழே உழைக்கும் வர்க்கப் பெண்களின் பிரச்சனைகள் பற்றிப் பேசுவது அவர்களது வேலை அல்ல என்பதுதான் உண்மை.

எனவே பெண்களை வர்க்க ரீதியில் சுரண்டி ஒடுக்க நிற்கும் இது போன்ற சட்டங்களுக்கு எதிராக பெண் ஒடுக்கு முறையினை எதிர்த்து நேர்மையுடன் பெண் விடுதலை விரும்பும் சக்திகள் அணி திரள வேண்டும். அவ்வாறானால் மட்டுமே ஏற்கனவே நடைமுறையில் உள்ள பெண் ஒடுக்குமுறைச் சட்டங்களையும் எதிர்காலத்தில் உருவாக்கப்படும் சட்டங்களையும் எதிர்த்து நிற்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி
புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYA POOMI
சுற்று 09 செப்டம்பர் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 50

**1953ம் ஆண்டு ஆகஸ்ட் 12ம் திகதி இடம்பெற்ற மாபெரும் ஹர்த்தால் போராட்டத்தின் நினைவாக கடந்த 12ம் திகதி இடதுசாரிக் கட்சிகள் கொழும்பு கோட்டை புகையிரத நிலைய முன்பாக நடாத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட புதிய ஜனநாயகக் கட்சியினரைப் படத்தில் காணலாம்.**






# யூ.என்.பி. கொக்கரித்து நின்ற நான்கு ஆணைக்குழுக்கள் எங்கே?

கடந்த அரசாங்க காலத்தில் எதிர் வரிசையில் இருந்த யூஎன்.பி. நான்கு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுவதன் அவசியம் பற்றி உரத்து கொக்கரித்துக் கொண்டது. பொலீஸ், நீதி, தேர்தல், பொதுத்துறை ஆகியனவற்றுக்கு சுதந்திர ஆணைக்குழுக்களை நியமித்து அதனூடாக அரசாங்க நிர்வாகம் இடம் பெற்றால் அரசியல் தலையீடு இருக்க மாட்டாது என்றே கூறப்பட்டது. இந்த ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுவதற்கான அரசியலமைப்புக்கு 17வது திருத்தமும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. பாராளுமன்றத்தில் அரசாங்க எதிர்ப்பினர் ஒன்றுபட்டே அதனை நிறைவேற்றினர். ஆனால் அவற்றை நிறைவேற்ற மும்மரம் காட்டிய யூஎன்.பி. பதவிக்கு வந்து எட்டு மாதங்கள் சென்ற பின்பும் எந்தவொரு ஆணைக்குழுவும் உருவாக்கப்படவில்லை. ஏன் என்பதே பிரதான கேள்வியாகும். நான்கு ஆணைக்குழுக்கள் வந்தால் ஜனநாயகம், மனித உரிமை, சுதந்திரம் யாவும் காப்பாற்றப்படும் என்ற வாக்குறுதி எங்கே போனது. வெறும் பம்மாத்துத்தனமே அன்றி வேறு எதுவும் இல்லை. ஆட்சிக்கு வருமுன் ஒரு கதையும் வந்தபின் அவற்றைக் கைவிடுவதும் வழமையான முதலாளித்துவ பாராளுமன்ற அரசியலில் மாற்ற முடியாத போக்காகும் வெறுமனே ஜனநாயகம், மனித உரிமை, சுதந்திரம் என்று செப்புவது முதலாளித்துவ ஜனநாயக-சுதந்திர-மனித உரிமையின் பக்கச்சார்பை மறைப்பதற்கேயாகும். இவை வர்க்கம், இனம், சாதியம், பெண்ணியம் கடந்து எல்லோருக்கும் பொதுவானவையாக தூய்மையானதாக இருப்பதில்லை. அதனாலேயே தாங்கள் ஏற்று நிறைவேற்றியதையே நடைமுறைக்குக் கொண்டுவர தயக்கம் காட்டுகின்றனர். இது யூஎன்.பி. யின் மறைவான முகத்தையும் கரங்களையும் எடுத்துக் காட்டி நிற்கின்றது.

## தினக்கதிர் பத்திரிகை மீதான தாக்குதலுக்த கடும் கண்டனம்

கிழக்கு மாகாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தினக்கதிர் நாளிதழ் மீது கடந்த மாதம் இனம் காட்டாத குண்டர் கூட்டம் ஒன்று வெறித்தனமான தாக்குதலை நடாத்தியுள்ளது. அதனால் அப்பத்திரிகை நின்றுவிட்டது. ஜனநாயக விரோதமாக மிலேச்சத்தனமான இந்த தாக்குதலை புதிய பூமி மிக வன்மையாகக் கண்டிக்கிறது. வடக்கிலிருந்து மூன்று தமிழ் பத்திரிகைகள் வெளிவருகின்றன. கொழும்பிலிருந்து நான்கு வெளிவருகின்றன. இந் நாளிதழ்களை விட வார, மாத தமிழ் பத்திரிகைகள் வந்து கொண்டிருகின்றன. இவற்றின் நடுவே கிழக்கிலிருந்து ஒரு நாளிதழ் வருவது ஏன் சண்டித்தனத்தால் தடுக்கப்பட்டது. இதற்குப் பின்னால் ஏதோ காரணம் மறைந்திருக்கிறது. பத்திரிகை வணிக ஏகபோகமா? அல்லது இன்னொரு புதிய வணிகப் பத்திரிகை தொடங்கப்படுவதற்கு வழி வெட்டலா? இல்லாவிடில் அரசியல் ஆதிக்கப் பின்னணியா? சமாதானம் இயல்பு வாழ்வு எனவும், ஜனநாயகம் பற்றியும் உரத்துப் பேசப்படுகிறது. இச் சூழலில், கிழக்கு மாகாணத்தி லிருந்து ஒரு நாளிதழின் வருகையும் வளர்ச்சியும் பலாத்காரமாகப் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. இவ் அராஜகச் செயலை யார் செய்திருப்பினும் அதனை புதிய பூமி மிக வன்மையாகக் கண்டிக்கிறது. அப் பத்திரிகை மீண்டும் வெளிவர மக்கள், ஜனநாயக சக்திகள், சுதந்திர ஊடக விரும்பிகள் அனைத்து முயற்சிகளையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

### தமிழர் தலைவிதி..

1ம் பக்க தொடர்ச்சி..

பலவீனப்படுத்திக் கொள்ளும் உள் நோக்கம் அரசாங்க உயர் மட்டத்தில் இருக்கவே செய்கிறது. ஏனெனில் யூஎன்.பி.யின் பேரினவாத ஆளும் வர்க்க நிலைப்பாடு எவ்வித மாற்றத்தையும் அடைந்துவிடவில்லை.

எனவே இடைக்காலசபையாயினும், அதிகாரப் பகிர்வாகிலும் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவு செய்வதாக அமைய வேண்டும். அவர்கள் அர்ப்பணித்த உயிர்களுக்கும் சொரிந்த இரத்தத்திற்கும் அனுபவித்த துயரங்களுக்கும் அடைந்த இழப்புகளுக்கும் ஈடாக அமைதல் வேண்டும்.

அதேவேளை பேச்சுவார்த்தையி முஸ்லீம் மக்களினது உரிமைகளு அதேபோன்று மலையக மக்களின உரிமைகளும் பேசப்படல் வேண்டு தீர்வுகள் தேடப்படல் வேண்டும் ஏனெனில் அவை தேசிய இன பிரச்சினையின் பிரிக்கவியலா அங்கங்களாகும்.

எவ்வாறாயினும் திகதி குறிப்பிட பட்டுள்ள தாய்லாந்து பேச்சுவார்த்தை சகல பேரினவாத தடைகளையு தாண்டி இடம்பெற வேண்டும் அதேவேளை அமெரிக்காவின் ஆதிக் நோக்கங்களுக்காக பேச்சுவார்த்தை யில் தலையீடு செய்வது தடுக்கப்பட வேண்டும்.

• • • • •

### அமெரிக்க....

1ம் பக்க தொடர்ச்சி...

ஆட்சியாளர்கள் எதைத் தந்தாலும் வாங்கிக் கொண்டு வாய் பொத்திய நிலையில் தமிழர்கள் இருக்க வேண்டும். திணிக்கப்படும் தீர்வை மீற முற்பட்டால் நடப்பது வேறு என்ற மிரட்டலையே அவதானிக்க முடிகிறது.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு இனைப்பிரச்சினைக்குத் தீர்வு தேடி நேர்மையான வழிகளில் சமாதானம் காண்பதல்ல. தென்னாசியாவில் தமக்குரிய இடமாக இலங்கை தங்களது கைகளுக்கு வந்துள்ளதை மேலும் உறுதிப்படுத்தி ராணுவ பொருளாதார அடிப்படைகளை வலுப்படுத்துவதாகும். இவ்விடயத்தில் இந்தியாவை மேவிக் கொண்டுள்ள அமெரிக்காவிற்கு இலங்கையில் இனிமேல் சமாதான சூழலே தேவைப்படுகிறது. அமெரிக்கா தமது நலன்களுக்கும் தேவைகளுக்கும் யுத்தத்தை நடாத்திக் கொள்ள ஒத்துழைப்பு வழங்கும். தேவை முடிந்ததும் சமாதான தேவதை போன்று நடந்து கொள்ளும். இதன் பயங்கர ஆபத்தை இலங்கை மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்வது அவசியம். இதனாலேயே அந்நியத் தலையீட்டுக்கு வழி வகுக்காமல் தேசிய இனப் பிரச்சினையை நமது எல்லைகளுக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டும் என்பதை நாம் அன்றிலிருந்தே வற்புறுத்தி வந்துள்ளோம். ஆனால் அவை எதுவும் எவருடைய செவிகளிலும் ஏறவில்லை. அதன் நடைமுறை எதிர் விளைவை எல்லோரும் அனுபவிக்கும் அடுத்த காலப் பகுதி ஆரம்பித்துள்ளது என்றே கூற வேண்டும்.

### தமிழ்த் தேசியமும்

9ம் பக்க தொடர்ச்சி...

ஆலயங்களில் சுமங்கலி பூசை என்பது மிகப்பிரமாண்டமான அளவில் முன்னெடுக்கப்பட்டு ஆலய வியாபாரமாகி விட்டது. பெண்கள் சேலைகளுடனும் பூவும் பொட்டுடனும் வாழவே ஆணாதிக்கம் நிர்பந்திக்கிறது.

தமிழ்நாட்டுத் தலைவர்களின் வீரியம், முருகனை விடவும் இரண்டு மனைவியரிலும் அதிகமாகக் கொண்டிருப்பதே அரசியல் கௌரவம் ஆக்கப்பட்டுள்ளது.

கம்பராமாயணத்தில் சீதையின் கற்பு மீளமீளப் பட்டிமன்றங்களில் தமிழ் அறிஞர்களால் பரீட்சிக்கப்பட்டு வருகிறது. அதற்கு அங்கீகாரமும் பாராட்டும் வழங்கப் பெரும் படையணியே மொய்த்து வருகிறது.

ஆலயங்களில் இருதசாப்தங்களின் முன்னர் சின்ன மேளங்கள் ஆடப்பட்டு பரத்தையராகக் கணிக்கப்பட்ட கண்ணோட்டமே தமிழ் நாட்டகக் கலைகளில் ஈடுபடுவோருக்கு ஏற்படுவதனால் தமிழில் தொழில்சார் நாடகக்கலையே அழிந்து விட்டது.

புதிய வணிகப் பொருளாதாரத்தின் கீழ் பெண்கள் சுயம்வரத்துக்கான விளம்பரமாகவே 'பரத நாட்டிய அரங்கேற்றம்' நிகழ்ந்து முடிகின்றன. கலையம்சத்தை விடப் பலமடங்கு வணிக அம்சமே மேலோங்கியுள்ளது.

சுயநிர்ணய உரிமைக்காகவும் தேசிய விடுதலைக்காகவும் போராடும் தமிழ்த் தேசிய போரில் விதவைகள் பெருகியுள்ளனர். விதவைகள் மறுமணம் காணக் கிடைக்காது.

'செத்தவன் பெண்டிலைக் கட்டினாலும் விட்டவன் பெண்டிலை கட்டக்கூடாது' என்ற விவாகரத்து உரிமைக்கான பெண்களின் உரிமையை, தமிழ்த் தேசியம் தனது சுயநிர்ணயப் போராட்டத்தினை நடத்தினாலும் இன்னும் இன்றும் அங்கீகரிக்கத் தயாரில்லாத நிலையே நீள்கிறது. பெண்கள் இன்றுவரை பாதிப்புக்குள்ளாகும் பாலியல் பிரச்சினை இன்றுவரை பேசாப் பொருளாகவே உள்ளது.

அரசியல் வேறு வாழ்க்கை வேறு என்பது தமிழ்த் தேசியத்தின் தாரகமாகுமா?

பெண்ணின் விடுதலையே மண்ணின் விடுதலையாக மாறும் நாள் எந்நாளோ?

### மாணிக்கக்கல்...

1ம் பக்க தொடர்ச்சி..

தெரிவித்தார். அவ்வூர்வலத்திலும் கூட்டத்திலும் இ.தொ.கா, ம.ம.மு, அ.இ.தோ.தொ.கா, இ.ஐ.தொ.மு உட்பட பல தொழிற்சங் கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும் தோட்டக் கமிட்டி, மாவட்டக் கமிட்டி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

மாணிக்கக்கல் அகழ்வதற்காக காணிகளை குத்தகைக்கு கொடுப்பதற்கான ஏலவிற்பனையை மறியல் போராட்டத்தின் மூலம் ஏற்கனவே மக்கள் தடுத்து நிறுத்தினர். இராகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஏலவிற்பனையை நடத்துவதற்காக செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் மறியல் போராட்டத்தால் கைவிடப்பட்டது.

அதன் பின்னர் மிகவும் இரகசியமான முறையில் நுவரெலியா நகரில் மேற்படி மாணிக்கக்கல் அகழ்வதற்கான ஏலவிற்பனை நடத்தப்பட்டுள்ளது. அவ்ஏல விற்பனையில் காணித்துண்டுகளைப் பெற்றுக் கொண்டதாக சென் லெனாட்ஸ் தோட்டத்துக்கு ஆகஸ்ட் 11ஆம் திகதி சென்ற சில மாணிக்கக் கல் வியாபாரிகள் மக்களினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக ஆகஸ்ட் 18ஆம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலமும் எதிர்ப்புக் கூட்டமும் நடைபெற்றுள்ளது. அத்துடன் எதிர்ப்பு தெரிவித்து கையெழுத்து இயக்கமும் நடத்தப்பட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு போராட்டங்களை அடுத்து இராகலைக்குச் சென்ற இலங்கை மாணிக்கக்கல் கூட்டுத்தாபன அதிகாரிகளிடமும் மக்கள் அவர்களின் எதிர்ப்பைத் தெரிவித் துள்ளனர். தோட்டக்கம்பெனியும், இலங்கை மாணிக்கக்கல் கூட்டுத் தாபனமும் மேற்படி மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் மாணிக்கக்கல் அகழ்வைச் செய்ய முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகஸ்ட் 11ஆம் திகதி சென் லெனாட்ஸ் தோட்ட மக்களினால் திருப்பி அனுப்பப்பட்ட மாணிக்கக்கல் வியாபாரிகள் தோட்ட மக்களினால் தாக்கப்பட்டதாகவும், அவர்களிடமிருந்த பணம் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் சில செய்தியாளர்கள் செய்திகளை வெளியிட்டுள்ளனர். மாணிக்கக்கல் வியாபாரிகளைத் தாக்கியவர்களுக்கும், பணத்தைக் கொள்ளையடித்தவர்களுக்கும் எதிராக பொலிசில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அச்செய்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான பக்கச் சார்பான செய்தியை வெளியிடுவதில் முன் நின்ற வீரகேசரி பத்திரிகையின் மஸ்கெலியா நிருபர் மலையகத்தில் நடைபெற்றுவரும் மக்கள் போராட்டங்களின் நியாயங்களைப் புரிந்து கொள்ளத் தவறக் கூடாது. போராடுகின்ற மக்களை கொள்ளைக்காரர்களாகவும், அடிதடிக் காரர்களாகவும் காட்டுவதை கைவிட வேண்டும்.

இராகலை சென் லெனாட்ஸ், இராகலை கீழ்ப்பிரிவு ஆகிய தோட்டக் காணிகளில் மாணிக்கக்கல் அகழ்வதை எதிர்த்து தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் மக்கள் போராட்டங்கள் முழு மலையகத்திற்கும் எடுத்துக்காட்டாக கொள்ளப்பட வேண்டியவையாகும்.

அப்போராட்டங்களை முன்னெடுப்பதில் புதிய-ஜனநாயகக் கட்சித் தோழர்கள் தலைமைப் பாத்திரத்தை ஏற்று முன்நின்று செயற்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தோட்ட....

1ம் பக்க தொடர்ச்சி..

நடத்துகின்றன. அதனால் தோட்டத் தொழிலாளர்களின் நாட் சம்பளத்தை தீர்மானிப்பதில் அரசாங்கம் தலையிட வேண்டும். தோட்டக் கம்பெனிகளுக்கு வரிச்சலுகை உட்பட பல சலுகைகளை அரசாங்கம் வழங்க முடியுமென்றால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கைக்கு செவி சாய்க்க முடியாதது ஏன்? ஏற்கனவே தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட மாதாந்த சம்பள உயர்வுகளான 400ரூபாவும் 1500/-வும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. அச் சம்பள உயர்வுகளை வழங்க முன்வந்தால் தற்போதைய சம்பளத்திற்கு மேலதிகமாக நாளாந்தம் 80ரூபாவுக்கு மேல் வழங்க வேண்டும்.

வரிச்சலுகைகளை அனுபவித்துக் கொண்டும், தேயிலை. இறப்பருக்கு நல்ல ஏற்றுமதி விலைகளைப் பெற்றுக் கொண்டும், தோட்டங்களில் புதிய வேலை வாய்ப்பை வழங்காமலும் முகாமைத்துவத்திற்கென பெருந் தொகைப் பணத்தை செலவிடுவதாக காட்டிக் கொண்டு, ஏனையோருக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வுகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்காமல் கொள்ளை லாபம் சம்பாதிக்கும் தோட்டக் கம்பெனிகளுக்கு மேலும் மேலும் சிறப்புரிமைகளும், வரப்பிரசாதங்களையும் வழங்க முடியாது. தோட்டத் தொழிலாளர்களையும், தொழிற்சங்கங்களையும் எப்படி வேண்டுமானாலும் ஆட்டிப் படைக்கலாம் என்ற தோட்டக் கம்பெனிகளின் அராஜகத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அதனால் பேரப்பேச்சு என்று முணு முணுப்பதை தோட்டத் தொழிற்சங்கங்கள் கைவிட வேண்டும். இ.தொ.கா., ம.ம.மு. என்பன வெறும் வாய்ச் சவடால் விடாமல், தோட்டத் தொழிலாளர்களுக்கு துரோகம் இழைக்கும் கைங்கரியங்களை கைவிட வேண்டும். தோட்டக் கம்பெனிகளுக்கு தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தை எடுத்துரைக்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தம் உட்பட பல தொழிற்சங்கங்கப் போராட்டங்களை அவர்களுக்கு பழக்கப்பட்ட வழியில் உறுதியாக முன்னெடுக்க வேண்டும். அப்போது தோட்டக் கம்பெனிகள் கீழிறங்கி வந்தே ஆக வேண்டும். 200ரூபா சம்பளம் தோட்டத் தொழிலாளர்களின் வீடு தேடி வந்து சேரும். போராட்டம் ஒன்றே சம்பளத்தைப் பெறுவதற்கான வழி என்பதை உணர்ந்து தொழிலாளர்கள் தொழிற் சங்க பேதங்களை மறந்து, தொழிற் சங்கத் தலைவர்களின் பம்மாத்துக்களுக்கும் இயலாமைகளுக்கும் அப்பால் போராட வேண்டும். அதனையே தலைமைகளிடம் தொழிலாளர்கள் வற்புறுத்த வேண்டும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூகே. பிரின்டஸ் 98A, விவேகானந்தா மேடு, கொழும்பு 13.

படிப்பகம்